2017 ஜூன் 08
வியாழன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 13 ▪ பக்கங்கள் 12 ▪ மணி 03 ▪ ஒளி 087

QD / 154 / NEWS / 2017

NAVAMANI DAILY நவமணி දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 13 - ஜூன் 08, வியாழன்

## ரமழான்

தொழுகை நேரங்கள்

| ஸ.முடிவு | சுபஹ் | சூ.உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|---|---|
| 04:17 | 04:31 | 05:54 | 12:11 | 03:38 | 06:25 | 07:42 |

# முஸ்லிம்கள் மீதான வன்முறைகளுக்கு O.I.C அமைப்பு கண்டனம்

நீதியை நிலைநாட்டுமாறு வேண்டுகோள்

▪ ஆதில் அலி சப்ரி




இலங்கை முஸ்லிம்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள சமூகத்துக்கு எதிரான வெளிப்படையான இனவாத

11 »»»»

## கட்டார் பணியாளர்கள் குறித்து உடனடி தீர்மானம் இல்லை

### அமைச்சர் தயாசிறி



▪ அ.அருண் பிரசாந்த்

கட்டார் நாட்டில் தொழில்புரியும் இலங்கைத் தொழிலாளர்கள் குறித்து உடனடியாக எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

11 »»»»

## வன்முறைகளை கட்டுப்படுத்த இராணுவம்



ஜனாதிபதி அதிரடி அறிவிப்பு



முஸ்லிம்களுக்கெதிராக அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை கட்டுப்படுத்த பொலிஸாரால் முடியாவிடின் இராணுவத்தின் சேவையை பெறப்போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று தெரிவித்தார். பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்ற குழுக்கூட்டத்தின் போது ஜனாதிபதி இதனைத்தெரிவித்தார்.

11 »»»»



## கிழக்கு மாகாணத்தில் பொருளாதார மத்திய நிலையம்

▪ அ.அருண் பிரசாந்த்

கிழக்கு மாகாணத்தில் பொருளாதார மத்திய நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளமைக்கு இணங்க இத்திட்டத்துக்காக 300 மில்லியன் ரூபாவை ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

11 »»»»

## ஹமாஸ், இக்வான்களை கைவிட்டால் மீண்டும் சேர்ப்போம்

### சவூதி வெளிவிவகார அமைச்சர்

பலஸ்தீனின் ஹமாஸ் மற்றும் எகிப்தின் இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பு ஆகியவைக்கு கட்டாரின் ஒத்துழைப்புகள் நிறுத்தப்படுமிடத்து வளைகுடா நாடுகளுடனான உறவை மீண்டும் சீர்செய்துகொள்ளலாம் என்று சவூதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் ஆதில் அல் ஜுபைர் தெரிவித்துள்ளார்.

நேற்று பிரான்ஸில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தீவிரவாத குழுக்களுக்கு வழங்கும் ஆதரவு, ஊடகங்கள் மற்றும் ஏனைய நாடுகளின் உள்ளக

11 »»»»

## தவறுக்கு பிராயசித்தமாக கூட்டமைப்பு ஒத்துழைக்க வேண்டும்

### சபையில் றிஷாத் வேண்டுகோள்

வடக்கு முஸ்லிம்களுக்கு விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தவறுக்கு பிராயச்சித்தமாக, தமிழ்க்கூட்டமைப்பினர் அந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்கான ஒத்துழைப்பையும், ஆதரவையும் தரவேண்டும். இல்லையென்றால், முடியாது என்று பகிரங்கமாக சொல்லிவிட்டு, வேண்டிய நடவடிக்கையை நீங்கள் எடுங்கள் என்று, எங்களிடத்தில் கூற வேண்டும். பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தினேஷ் குணவர்த்தன எம்பி

11 »»»»

## கட்டாருக்கு ஆதரவளிக்கும் எமிரேட்ஸ் பிரஜைகளுக்கு சிறைத்தண்டனை, அபராதம்

கட்டாருக்கு ஆதரவு, அனுதாபம் தெரிவிக்கின்ற வகையில் சமூக வலைத்தளங்களில் கருத்து வெளியிடும் ஐக்கிய அரபு இராச்சிய பிரஜைகளுக்கு 15 வருட சிறைத் தண்டனையுடன் 136,000 அமெரிக்க டொலர்களை அபராதமாக செலுத்தவேண்டியேற்படும் என்று சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

நேற்று சட்டமா அதிபர் ஹமாத் ஸைப் அல்- ஷம்ஸி மேற்படி தெரிவித்துள்ளார்.

கட்டாரை ஆதரித்து வெளியிடப்படும் கருத்துகள் இணையத்தள குற்றமாக கருதப்பட்டு தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். கடந்த திங்களன்று

11 »»»»

## 116 வீரர்களுடன் தாய்வான் விமானம் மாயம்

மியன்மார் இராணுவ விமானம் ஒன்று மாயமாகியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.குறித்த விமானத்தில் 105 பயணிகளும் 11 விமான ஊழியர்களும் பயணித்துள்ளனர். விமானத்தை தேடும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக

11 »»»»

## ஆளும்,எதிரணியிடையே சைட்டம் தொடர்பில் மோதல்

தனியார் மருத்துவக் கல்வி நிறுவனமான சைட்டம் தொடர்பில் நேற்றைய தினம் ஆளும்-எதிரணியிடையே பாராளுமன்றில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

பாராளுமன்றம் நேற்று மதியம் ஒரு மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தைத் தொடர்ந்து 23 இன்



11 »»»»

## மஹரகம நகரில் முஸ்லிம் கடைக்கு தீ



▪ பீ.எப்.எம் றிஷாட்

மஹரகம, ஹைலெவல் வீதியில் உள்ள முஸ்லிம் வர்த்தகரொருவருக்கு சொந்தமான சப்பாத்துக் கடை மீது நேற்று முன்தினம் (06) செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 2.41 மணியளவில் இனந்தெரியாத நபரொருவரினால் தீவைக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.

11 »»»»

## இரத்த வங்கி முன்னாள் பணிப்பாளருக்கு பிடியாணை

இரத்த வங்கியின் முன்னாள் பணிப்பாளர் மங்கலிகா பிந்துசாரவுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. காலாவதியான குருதி பிளாஸ்மாக்களை நாட்டுக்கு கொண்டு

11 »»»»

## ஈரான் பாராளுமன்ற கொமெய்னி நினைவிடத்தில் தீவிரவாத தாக்குதல்

### 12 பேர் பலி, 39 பேர் படுகாயம்

ஈரான் பாராளுமன்றத்திலும் மற்றும் ஈரான் தலைவர் அயதுல்லா கொமெய்னியின் நினைவிடத்திலும் நேற்று நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் 39 பேர் படுகாயமடைந்துள்ளனர். இத்தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. இதனை ஐ.எஸ். அமைப்பின் அதிகாரபூர்வ



11 »»»»

## ஞானசாரதேரரை கைதுசெய்யாமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது

### கைதுக்கு போதிய ஆதாரம் உண்டு



▪ அ.அருண் பிரசாந்த்

கலகொட அத்தே ஞானசார தேரரை இன்னும் கைதுசெய்யாமல் இருப்பது தொடர்பில் தனக்கு சந்தேகம் இருப்பதாகவும் இது விடயம் குறித்து பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு தான் கொண்டுவந்துள்ளதாகவும் அமைச்சரவையின் இணைப்பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரட்ன நேற்று தெரிவித்தார்.

அத்தோடு, கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட பொதுபல சேனா



11 »»»»

# குறித்த ஓர் இனத்திற்கோ மதத்திற்கோ இந்த நாடு சொந்தமானதல்ல

## மொறவெவ பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் மஹிந்த உடுகம



(அப்துல்சலாம் யாசீம்)

இந்த நாடு குறிப்பிட்ட ஓர் இனத்திற்கோ குறிப்பிட்ட ஒரு மதத்திற்கோ சொந்தமானது அல்ல என கோமரங்கடவெல, மொறவெவ பிரதேசத்திற்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் மஹிந்த உடுகம தெரிவித்தார்.

திருகோணமலை - ரொட்டவெவ மஸ்ஜிதுல் ஹூதா ஜூம்ஆ பள்ளி வாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பள்ளி வாசலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மொறவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி நிஹால் குலதுங்க சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் மொறவெவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எஸ். எம்.பைசர். ஹொரவப்பொத்தானை சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஐ.ஏ.றஹ்மான் (நளீமி) கிராமத்திலுள்ள முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் தொடர்ந்தும் உரையாற்றிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் மஹிந்த உடுகம,

இந்த நாட்டில் வாழுகின்ற சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் இவ்வாறான மத வழிபாடுகளில் தர்மம் வழங்கும் நிகழ்வுகளில் ஏனைய மதத்தவர்களையும் சம்பந்தப்படுத்திக்கொண்டால் மிகவும் அழகானது.

ஏனென்றால் இந்த நிகழ்வில் இந்த பிரதேசத்தைச்சேர்ந்த குறிப்பாக பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

அதேபோன்று இந்த பிரதேசத்தைச் சேர்ந்த சிங்கள இனத்தவர்களும் கலந்து கொண்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

இந்த நாட்டிலே வாழுகின்ற எல்லா மக்களும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஏனைய மதத்தவர்கள் எல்லோரும் இந்த நாட்டிற்கு உரித்துடையவர்கள். இந்த நாடு குறிப்பிட்ட ஓர் இனத்திற்கோ குறிப்பிட்ட ஒரு மதத்திற்கோ சொந்தமானது அல்ல. இந்த நாட்டில் பிறந்து வளர்ந்த எல்லா மக்களுக்கும் இந்த நாடு சொந்தமானது.

இந்த நாட்டிலுள்ள எல்லா வகையான உரிமைகளிலும் எல்லோருக்கும் சமமான பங்கு உண்டு. இதில் யாரும் அதிகமாக உரிமைகளை பயன் படுத்தவோ இன்னமொரு சிறு இனத்தவர்களின் உரிமைகளை பறிக்கவோ யாருக்கும் அதிகாரம் இல்லையெனவும் கோமரங்கடவெல மொறவெவ பிரதேசத்திற்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் மஹிந்த உடுகம தெரிவித்தார்.

## ஒஸ்கா கார் நிறுவனத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்



(இரத்தினபுரி எம்.எல்.எஸ்.முஹம்மத்)

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா இரத்தினபுரி மாவட்டக் கிளையின் ஒத்துழைப்புடன் கொழும்பு ஒஸ்கா கார் நிறுவனத்தினால் இரத்தினபுரியில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 2000 இற்கும் மேற்பட்ட மூவினத்தையும் சேர்ந்த குடும்பங்களுக்கு 80 இலட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதிகள் சமய நிறுவனங்களிடம் நேற்று கையளிக்கப்பட்டன.

ஒஸ்கா நிறுவனத்தின் கையளிப்பு நிகழ்வுகளில் இரத்தினபுரி மாவட்ட உலமா சபை உறுப்பினர்கள் ,ஜென்னத் ஜூம்ஆ மஸ்ஜித் நிர்வாக சபை உறுப்பினர்கள் ஒஸ்கா கார் நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் இரத்தினபுரி மாவட்ட அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டுள்ளதாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் எம்.தாஜுத்தீன் தெரிவித்தார்.

# வெள்ள அனர்த்தத்திற்காக வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற கோடிக்கணக்கான பணத்திற்கு என்ன நடந்தது?

## ஹிதாயத் சத்தார் கேள்வி

(வத்துகாமம் நிருபர்)

வெள்ள அனர்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊடக நிறுவனங்கள் மட்டுமா உதவி செய்கின்றன. 'அரசுக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப் பெற்ற கோடிக் கணக்கான பணத்திற்கு என்ன நடந்தது? என்று பொதுமக்கள் கேட்கும் அளவிற்கு ஒரு தலைப்பட்சமான செய்திகள் ஒளி, ஒலி ஊடகங்களில் வெளியாகின்றன. இது விடயமாக நடவடிக்கை எடுத்து அவை கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று மத்திய மாகாண சபை அங்கத்தவர் ஹிதாயத் சத்தார் தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் எல்.டி.நிமலசிறி தலைமையில் பல்லேகலை மாகாண சபை கட்டடத்தில் இடம் பெற்றது. அதன் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

இலத்திரனியல் ஊடகங்களில் குறிப்பாக தொலைக்காட்சிகளில் காட்டப்படும் செய்திகள் ஒருதலைப்பட்சமாக இருக்கிறன்றன. அரசு மேற்கொள்ளும் நலன்புரி விடயங்கள் எல்லைப் படுத்தப்பட்டு தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களின் நலன்புரி நடவடிக்கைகள் மிகைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கை அரசை அபகீர்த்திக்குள்ளாக்குகிறது. வெளிநாடுகளில் இருந்து பெருமளவு உதவிகள் கிடைத்தும் அதனை அரசு வழங்குவதில்லையா என பாமர மக்கள் கேட்கும் அளவு நிவாரணம் பற்றிய விடயங்கள் விகாரமாக்கப்பட்டு வருகிறது.

இது ஒரு புறமிருக்க சட்டவிரோத கட்டிடங்கள் பற்றி நாம் சற்று சிந்திக்க வேண்டும். சட்ட விரோத கட்டிடம் குறிப்பிட்ட ஒரு பிரதேசம் சார்ந்தது மட்டுமல்ல. அது எங்கு மேற்கொள்ளப்பட்டாலும் தடுக்கப்பட வேண்டும். குறிப்பாக மத்திய மாகாண சபை இது விடயமாக மிகுந்த கவனம் வெலுத்த வேண்டும். அல்லாத பட்சத்தில் ஏற்கனவே அங்கத்தவர்கள் பலர் பேசியதுபோல் நுவரெலியா மாவட்டம் மட்டுமல்ல எமது கண்டியிலும் வெள்ளப் பெருக்கு மண்சரிவு போன்ற பாதிப்புக்களை நாம் எதிர்கொள்ளவேண்டி வரும். 2018ஆம் வருடம் முதல் வெள்ளப் பெருக்கற்ற நாடாக இலங்கையை மாற்ற வேண்டுமானால் உடன் சட்ட விரோத கட்டடங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட ஒதுக்குக் காணிகள் என்பவற்றிலுள்ள கட்டங்கள் அகற்றப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

# கல்வித்திணைக்கள வாகனங்களை முறைகேடாக பயன்படுத்தியமை குறித்து விசாரணை

(திருமலை எம்.ரீ.எம். பாரிஸ்)

கிழக்கு மாகாணக் கல்வி திணைக்களத்திற்கு சொந்தமான இரண்டு வாகனங்கள் முறைகேடான விதத்தில் கல்முனை பிரதேசத்தில் அமைந்துள்ள இரண்டு பாடசாலைகளின் பாவனைக்காக வழங்கப்பட்டமை தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்படல் வேண்டுமென அரச நிருவாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே வேண்டுகோள் விடுத்தார்.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இடம்பெற்ற போது கிண்ணியா கல்வி வலையத்தில் இருந்து ஏனைய வலயங்களுக்கிடையிலான தற்காலிக ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபினால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றின் போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இக்குழுக் கூட்டம் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்களான எதிர்கட்சி தலைவர் இரா. சம்பந்தன், பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப் ஆகியோரின் தலைமையில் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்த விடயம் தொடர்பாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம். நிஸாம் அவர்களை தொடர்பு கொண்டு கேட்ட போது, இது உண்மைக்குப் புறம்பான தகவல் எனவும், தனது காலப்பகுதியில் எந்தவொரு வாகனமும் எந்தவொரு பாடசாலைக்கும் வழங்கப் படவில்லையெனவும் கூறினார். அவ்வாறு வாகனங்களை வழங்குவதற்குரிய அதிகாரம் தனக்கு இல்லையெனவும் கூறிய மாகாணக் கல்விப் பணிப்பாளர், திரல் அமைச்சினால் (மத்திய கல்வி அமைச்சு) வாகனங்கள் வழங்கப்படுவது தொடர்பாக தனக்கு தெரியாதெனவும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுறை சந்திரக்காந்தன் காலப்பகுதியில் இந்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற வாகனங்களே பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் மாகாணத்தில் உள்ள பதினேழு வலயக் கல்வி அலுவலகங்களின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் இருக்கின்ற வாகனங்கள் தொடர்பாக ஆய்வொன்றை தற்போது மேற்கொள்வதற்கு அவர் தீர்மானித்திருப்பதாகவும், வலயக் கல்வி அலுவலகங்களுக்கோ, பாடசாலைகளுக்கோ வாகனங்களை வழங்கும் அதிகாரம் கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் அனுமதியுடன் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாருக்கே உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இப்தார் நிகழ்வு

(இகாமடுல்ல நிருபர்)

அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இப்தார் நிகழ்வு இன்று வியாழக்கிழமை தலைவர் மீரா எஸ்.இஸ்ஸடீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அட்டாளைச்சேனை ஒஸ்றா மண்டபத்தில் இடம்பெறவுள்ள இப்தார் நிகழ்வில் அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் உறுப்பினர்களான ஊடகவியலாளர்களும், பல அதிதிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக அம்பாரை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் மீரா எஸ்.இஸ்ஸடீன் தெரிவித்தார்.



அட்டப்பள்ளம் சஹிதா வித்தியாலயத்தில் அதிபர் எம்.எச்.எம். ஏ. ராபிஹு தலைமையில் கணனி இயந்திரம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஆரிப் சம்சுதீன் கணனியினை பாடசாலைக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர் சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(படம் கல்முனையூர் அப்றாஸ்)

# பேரகாமுள்ள பகுதியில் வர்த்தக கட்டடம் சரிந்து விழுந்தது

(ஹட்டன் க.கிஷாந்தன்)

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பேரகாமுள்ள பகுதியில் வர்த்தக நிலையத்தினூடான கட்டடம் ஒன்று நேற்று அதிகாலை சரிந்து விழுந்துள்ளது.



உயிராபத்துக்கள் எதுவும் இல்லாத நிலையில் அக்குடியிருப்பாளர்கள் பாதுகாக் கப்பட்டுள்ளனர். அதே வேளையில், கடந்த வாரங்களில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை தொடர்ந்தும் நிலவுகின்றது. இந்த நிலையில் பேரகாமுள்ள பகுதியில் மண்சரிவுகள் ஏற்படும் அச்சத்தினால் 2 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வர்த்தக தொகுதி ஊடாக குறித்த கட்டடம் சரிந்து விழுந்ததில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில் ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் பேரகாமுள்ளை வில் நிலம் தாழிறங்கியிருப்பது கண்டறியப் பட்டுள்ளது.

இதனால் இவ்வீதியினூடான போக்குவரத்து இரு வழி போக்குவரத்து ஒரு வழி போக்குவரத்தாக மாற்றப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் அப்பகுதியினை ஆராய்ச்சி செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சென்றுள்ளமையும், பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அம்பகமுவ பிரதேச இடர் முகாமைத்துவ பிரிவினரும் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு பாகிஸ்தானின் அரசசார்பற்ற நிறுவனம் உதவிக்கரம்



பிரசித்திப்பெற்ற பாகிஸ்தானிய அரசசார்பற்ற நிறுவனமான அல் கிதமாத் அமைப்பின் பிரதிநிதிகள் குழுவானது கலாநிதி. முஸ்தாக்கின் தலைமையின்கீழ் செரண்டிப் அமைப்பின் பிரதிநிதிகளுடன் இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் (பதில்) வைத்தியர். சர்ப்ராஸ் அஹமட்கான் சிப்ராவை பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் காரியாலயத்திலே சந்தித்தனர்.

அல் கிதாமத் தொண்டு நிறுவனம் 25,000 அமெரிக்க டொலர் பெறுமதியான தொகையினை வெள்ள நிவாரணமாக செரண்டிப் அமைப்புடன் இணைந்து இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வழங்கவிருக்கின்றது.

இக்குழுவானது மாத்தறை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி பகுதிகளுக்கு பயணித்து அங்குள்ள தேவைகள் குறித்து அளவீடு செய்ததாக பதில் உயர் ஸ்தானிகரிற்கு அறிவித்தது. அத்துடன் அக்குரஸ்ஸ பகுதியில் உலர் உணவுப்பொருட்களை விநியோகித்துள்ளதுடன், களுத்துறை மாவட்டத்தில் வீட்டுப்பாவனைப் பொருட்களை விநியோகித்துள்ளனர். மேலும் இரத்தினபுரி மாவட்டத்தில் புத்தகப் பைகள் மற்றும் பாடசாலை உபகரணங்களை விநியோகித்துள்ளனர்.

பாகிஸ்தானிய தொண்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சேவையினை பதில் உயர்ஸ்தானிகர் சர்ப்ராஸ் அஹமட்கான் சிப்ரா பெரிதும் பாராட்டியதுடன், இலங்கையில் வெள்ள நிவாரணங்களை வழங்குவதில் பாகிஸ்தானிய அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்தும் விளக்கமளித்தார்.

# அனர்த்த குப்பைகளை அகற்ற அரசு 100 மில்லியன் ஒதுக்கீடு

(அ.அருண் பிரசாந்த்)

நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவிவந்த அசாதாரண காலநிலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் காணப்படும் குப்பைகளை அகற்றுவதற்காக அரசினால் தற்போது 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அனர்த்தத்துக்கு உள்ளாகியுள்ள பகுதிகளில் காணப்படும் கழிவுகளை உடனடியாக அகற்ற வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். எனினும், அவ்வாறு நிரப்பியுள்ள குப்பைகளை அகற்ற உள்ளூராட்சி மன்றங்களில் போதியளவு வாகனங்கள் உள்ளிட்ட வசதிகள் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அப்பணிகளை துரித கதியில் நிறைவேற்றுவதற்கு தேவையான வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 100 மில்லியன் மேலதிக நிதியினை திரட்டிக் கொள்வது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரான அநுர பிரியதர்சன யாப்பா, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோர் இணைந்து முன்வைத்த யோசனைகளுக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இலங்கைக்கு உதவ இந்தியா தயார்; ரவியுடனான சந்திப்பில் மோடி



இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க செவ்வாயன்று இரவு இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜையும் சந்தித்து கலந்துரையாடினார்.

வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றதன் பின்னர், முதலாவது உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு ரவி கருணாநாயக்க இந்தியாவிற்கு சென்றுள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் பாரதப்பிரதமர் நரேந்திர மோடி கவலை வெளியிட்டுள்ளார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கு இந்தியா தயாராகவுள்ளதாகவும் இந்திய பிரதமர் இதன்போது உறுதியளித்தார்.

மேலும், இரு வெளிவிவகார அமைச்சர்களுக்கிடையிலான சந்திப்பின்போது சகல துறைகளிலும் இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பினை மேம்படுத்துவது குறித்தும் கலந்தரையாடப்பட்டது.

# காப்புறுதி பெறுவதற்கு தம் வர்த்தக நிலையத்தை தீ வைத்துக்கொண்டார் எனக்கூறுவது வேடிக்கையானது



அமைச்சர் ஹக்கீம்

முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் தீயிடப்படும்போது, காப்புறுதி தொகையைப் பெறுவதற்காக உரிமையாளர்களே தீ வைத்துக் கொள்கின்றனர் என சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகள் கூறுகின்றனர். முஸ்லிம்கள் மீதான தாக்குதல் சம்பவங்களை முறையிட்டபோதும் செவிடன் காதில் ஊதிய சங்குபோன்றே நிலைமை உள்ளது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் சபையில் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை ஜெனீவா தீர்மானம் குறித்த சபை வைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஜெனீவா தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு வருடமும் ஒன்பது மாதங்களும் நிறைவடைந்துள்ளன. இக்காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் குறித்து நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நடைமுறைப்படுத்துவதில் அரசு எதிர்கொண்ட சவால்கள் பற்றியும், கடந்துவந்த பாதை பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கையில் நல்லிணக்கத்தை ஊக்கப்படுத்துவது, பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவது என்ற தொனிப்பொருளிலேயே ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே, இவ்விடயத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை உறுதியாக இருக்கின்றது.

அரசியலமைப்பை தயாரிக்கும் பணிகள் இடம்பெற்றுவரும் சூழ்நிலையில், மத ரீதியான சகிப்புத் தன்மைகளை உறுதிப்படுத்துவதற்கான விடயங்களும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். நாட்டில் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் தரப்பினர்களுக்கு எதிராக அரசாங்கமும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளும் விரைந்து நடவடிக்கை எடுப்பது அவசியம்.

சில சக்திகள் நாட்டில் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. இந்த சக்திகள் தற்பொழுது வெறுக்கத்தக்க பேச்சுக்களை பரப்பி வருகின்றன. இதனுடன் தொடர்புபட்ட குற்றவாளிகள் பாதுகாக்கப்படுகின்றனர். நேற்று முன்தினம் வெளியான பத்திரிகை ஒன்றில் தலைப்புச்செய்தியில் மூன்று பௌத்த அமைப்புக்கள் மதத்தின் பெயரால் வெறுப்பை ஏற்படுத்தும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றது. இவ்வாறான வெறுப்பை ஏற்படுத்தும் பேச்சுக்களை கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் அமுல்படுத்தப்படவேண்டும்.

நுகேகொட விஜயராம பகுதியில் முஸ்லிம் ஒருவரின் வர்த்தக நிலையத்துக்கு தீயிடப்பட்டுள்ளது. சைக்கிள் ஒன்றில் வந்த நபர் ஒருவர் தீயிட்டுவிட்டு ஓடிச்செல்வது சீ.சி.ரி.வி கமராக்களில் பதிவாகியுள்ளது. இவ்வாறிருக்கையில் உரிமையாளர் காப்புறுதியைப் பெறுவதற்காக தனது கடைக்கு தீயிட்டுக் கொண்டதாக சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகள் கூறுவது வேடிக்கையானது. எத்தனையோ சம்பவங்கள் தொடர்பில் நாங்கள் சுட்டிக்காட்டுகின்றபோதும் சட்டரீதியான நடவடிக்கையை எடுக்காமலிருப்பதானது, செவிடன் காதில் ஊதிய சங்காக காணப்படுகின்றது என்றார்.

# மத்திய வங்கியின் துணை ஆளுநராக கே.டி.ரணசிங்க



இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநராக கே.டி.ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

துணை ஆளுநராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் உதவி ஆளுநராக பதவியிலிருந்த இவர் புள்ளிவிபரவியல், பன்னாட்டுத் தொழிற்பாடுகள், உள்நாட்டுத் தொழிற்பாடுகள், ஊழியர் சேம நிதியம், மனித வளங்கள் மற்றும் வசதிகள் முகாமைத்துவம் ஆகிய திணைக்களங்களுக்கும் பொறுப்பாக இருந்தார்.

மேலும், இவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிறுபான்மையினருக்கெதிரான வன்முறைகள்; நாட்டிற்கே அபகீர்த்தியை ஏற்படுத்தும்

(ஹாஹ்ரூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

யுத்தத்திற்குப் பின்னர் வெளிப்படையாகவே நாட்டில் தலைதூக்கியுள்ள சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் சர்வதேச ரீதியில் நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தன்னைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தார்.

பிலிப் க்வேஸ்கோர்வெஸ்கி தலைமையிலான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கும் கிழக்கு மாகாண முதலமைச்சருக்கிடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள அவருடைய அலுவலகத்தில் செவ்வாயன்று இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த முதலமைச்சர்.

சிறுபான்மையினர், அவர்களது மதஸ்தலங்கள் மற்றும் உடமைகள் மீதான வன்முறைச் சம்பவங்கள் குறித்து நாம் கரிசனையுடன் உள்ளோம்.

சிறுபான்மையினர் மீதான அச்சுறுத்தல்கள் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில் சிறுபான்மையினருக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத வகையிலான அரசியல் தீர்வொன்று விரைவில் முன்வைக்கப்பட வேண்டிய தேவை இலங்கைக்கு உள்ளது.

நாட்டில் இயல்பு நிலை தொடர்ந்த போதிலும் இதுவரை பொதுமக்களின் குடியிருப்புக் காணிகள் மற்றும் விவசாயக் காணிகள் விடுவிக்கப்படாதுள்ளது. காணிகளை விடுவிப்பது தொடர்பில் கடந்த அரசைவிட இவ் அரசு கரிசனை காட்டிய போதிலும் அதற்கான நடவடிக்கைகள் மக்களிடையே பெருமளவு திருப்தியை ஏற்படுத்தக் கூடியதாய் அமையவில்லை.



யுத்தம் முடிந்து ஆண்டுகள் பல கடந்த போதிலும் அதனால் அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணங்களுள் ஒன்றான கிழக்கு மாகாண மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

கிழக்கில் யுத்தத்தால் விதவைகளாக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் வாழ்வாதார உதவிகளின்றி பாரிய சிரமங்களுக்கு மத்தியில் தமது வாழ்வினை கொண்டு செல்கின்றனர்.

எனவே அவர்களுடைய வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கான திட்டங்களை முன்னெடுக்க ஐரோப்பிய நாடுகள் முன்வரவேண்டும்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் வேலையில்லாப் பிரச்சினை பாரிய தொரு பிரச்சினையாக அமைந்துள்ளதுடன் புதிய தொழில் வாய்ப்புக்களை வழங்கும் தொழிற்துறைகளை உருவாக்க உதவ வேண்டும என முதலமைச்சர் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.



அனர்த்த நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் சமூகசேவையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு தபால் திணைக்கள கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சமூக சேவையாளர் எம்.ஏ.எம் சப்ரினுக்கு அமைச்சர் மனோகணேசன் தேச பந்து பட்டம் வழங்கி கௌரவித்தார்.

# சுனாமி வர வாய்ப்பில்லை; வானிலை நிலையம் அறிவிப்பு

இலங்கைக்கு எந்தவொரு சுனாமி அபாயமும், சூறாவளி அபாயமும் இல்லையென்றும் இது தொடர்பில் மக்கள் பயப்படத் தேவையில்லை என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

பல கடற் பிராந்தியங்களில் கடல் நீர் மேலெழுந்துள்ள காரணத்தால் இலங்கைக்கு சுனாமி வரக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக பலரும் கருத்து வெளியிடும் நிலையில் அவ்வாறான எந்தவொரு நிலைமைகளும் ஏற்படாது என வானிலை அவதான நிலையம் சுட்டிக்காட்டியது.

இதேநேரம், நாட்டின் தென்மேற்கு பகுதியில் இடம்பெறும் மழையுடனான காலநிலை எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் நிறைவடையும் என்றும் அத்திணைக்களம் சுட்டிக்காட்டியது.

# தெற்கில் அநாதரவாகியுள்ள மக்களிற்கு வடக்கிலிருந்து நிவாரணங்கள்



வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவால் பாதிப்புற்றுள்ள தெற்கு மக்களிற்கு நிவாரணங்கள் வழங்கும் நோக்குடன் யாழ் மாவட்ட மக்களால் சேகரிக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்களை, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

வடக்கு மற்றும் தெற்கு மக்களிடையே சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வாகவே இந்நிகழ்வு கருதப்படுகின்றது. வழங்கப்பட்ட அனைத்து பொருட்களும் களுத்தரை, இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்புற்றுள்ள மக்களிற்கு பகிர்ந்தளிக்கப்படும்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டாரவும் கலந்துக்கொண்டார்.

# அகவை 34 இல் திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம்

மாற்றுத் திறனாளிகளுக்காக உருவாக்கப்பட்ட திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்திற்கு 34 வருடங்கள் முடிந்துள்ளது.

இந்நிலையம் 1984 ஆம் ஆண்டு ஜிப்ரி ஹனீபாவினால் ஆரம்பிக்கப்பட்டது.

இங்கு, செவிப்புலனற்ற, விழிப்புலனற்ற, மனவளர்ச்சி குறைந்த மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களின் விசேட தேவைக்கிணங்க சைகைமொழி, ப்ரயில் மற்றும் விசேட முறையில் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, சுய தொழில் பயிற்சிகளும் நடைபெறுகின்றன.

அரச சார்பற்ற நிறுவனமான இந்நிலையத்தில் தற்போது சுமார் 200 மாணவர்கள் கல்வி கற்பதோடு, இவர்களுக்கான கல்வி, உணவு, மருத்துவம் மற்றும் விடுதி வசதி என்பன இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

எனவே, புனித றமழான் மாதத்தில் உதவிகளை பெற்று நன்மைகளை பெற்றுகொள்ளும் படி நிலைய பொறுப்பாளர்கள் தெரிவித்தனர்.

# புரவலர் ஹாசிம் உமர் ஏற்பாட்டில் இப்தார்











(எம்.எஸ்.எம்.ஸாகிர், இம்டாஸ் ஸலாஹுதீன்)

சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முன்னாள் பணிப்பாளர் புரவலர் ஹாசிம் உமர் ஊடகவியலாளர்களுக்கென்று ஏற்பாடு செய்த முதலாவது புனித ரமழான் மாத நோன்பு திறக்கும் நிகழ்வும் மற்றும் இராப் போஷண விருந்தும் நேற்று (06) செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கொழும்பு - கொள்ளுப்பிட்டி 'குயீன்ஸ் கபே' ஹோட்டலில் நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வில், 'புரவலர் சில பதிவுகள்' எனும் புரவலர் ஹாசிம் உமர் செய்த சேவைகளை உள்ளடக்கியதான நூல் ஒன்றும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த இப்தார் வைபவத்தில் பல ஊடகங்களைச் சேர்ந்த பிரதம ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
08th JUNE 2017 - THURSDAY

# பொலிசாரின் தவறான அறிக்கைகள் இனவாதிகளை பலப்படுத்தக்கூடாது

இலங்கை முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப்படும்போது, காப்புறுதியைப் பெறுவதற்காக உரிமையாளர்களே தீ மூட்டிக்கொள்வதாக நாட்டில் சட்டத்தை நிலைநாட்டும் உயரதிகாரிகள் தெரிவிக்கும் விடயம் இன்று எள்ளி நகையாடப்படும் விடயமாக மாறியுள்ளது.

செவ்வாயன்று நுகேகொட விஜேராமையில் முஸ்லிம் வர்த்தகரொருவருக்குச் சொந்தமான வர்த்தக நிலையமொன்று தீக்கிரையானது தொடர்பாக பொலிஸ் உயரதிகாரிகள் மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

நுகேகொட வர்த்தக நிலையத்துக்கு தீ வைத்துவிட்டுச் செல்லும் காட்சி அங்கிருந்த சீ.சீ.ரீ.வி கமராவொன்றில் பதிவாகியுள்ள நிலையில் பொலிஸார் முழுமையான பரிசோதனைகளை மேற்கொள்ள முன்னர் இவ்வாறு தெரிவித்திருப்பது ஏன்? என்ற கேள்வியை நாம் எழுப்புகின்றோம்.

கடந்த ஒன்றரை மாதங்களுக்குள் முஸ்லிம்களின் மத வழிபாட்டுத் தலங்கள், வர்த்தக நிலையங்களை இலக்குவைத்து 24 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதோடு, நேற்று அதிகாலை மகரகமையில் மேலுமொரு முஸ்லிம் வர்த்தக நிலையம் தீ வைக்கப்பட்டுள்ளது.

செவ்வாயன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் றவூப் ஹக்கீம், முஸ்லிம்களை இலக்குவைத்து நடைபெறும் தாக்குதல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றிருப்பதாக தெரிவித்திருந்தார்.

முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் தாக்கப்படும்போது, தீ மூட்டப்படும்போது மின் ஒழுக்கு காரணமாக தீப்பற்றியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்த சந்தர்ப்பங்கள் இதற்கு முன்பும் இடம்பெற்றுள்ளன. எனினும் பின்பு வெளியாகும் அரச பகுப்பாய்வு அறிக்கைகள் திட்டமிட்டு தீ வைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும்படியாக அமைந்துள்ளன. அளுத்கம மல்லிகாஸ் எரிப்பு சம்பவத்தில் பொலிஸாரின் கருத்துக்கள் முற்றும் பிழையானதாக அமைந்திருந்தன.

முஸ்லிம்களுக்கெதிராக நடைபெறும் இவ்வாறான சம்பவங்களில் அரச பகுப்பாய்வு அறிக்கைகளுக்கு முன்னதாகவே மின் ஒழுக்கு அல்லது காப்புறுதி பெறும் நோக்கில் தீவைக்கப்பட்டுள்ளது என்று உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடுவதால் இனவாதிகளுக்கு அது சார்பாக அமைந்துவிடக்கூடும். அது பாதிக்கப்பட்ட வர்த்தகரை மேலும் அசௌகரியத்துக்கு உள்ளாக்கவும் கூடும்.

இலங்கை 30 வருட பயங்கரவாதத்தை வென்ற நாடு என்று சர்வதேசத்தில் பிரபல்யம் பெற்றுள்ளதோடு, அரசியல் தலைவர்களும் அடிக்கடி மார்தட்டிக்கொள்வதுண்டு. நாட்டின் பாதுகாப்புத் துறையில் பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கை வீண்போகும் படியாக பொலிஸாரின் செயற்பாடுகள் அமைந்துவிடக்கூடாது. நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர்பெறவேண்டும். நாட்டில் மீண்டுமொரு போர் நிலை உருவாகு முன்னர் இனவாதிகள் ஒழிக்கப்படவேண்டும்.



# கட்டார் நெருக்கடி இலங்கைக்கு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்



**கட்டாரில் உருவாகியிருக்கின்ற நெருக்கடி நிலைபற்றியும், அதனால் உருவாகப் போகும் நெருக்கடி நிலைபற்றியும் அது இலங்கைக்கு எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதனைப் பற்றியும் பிரபல அரசியல் விமர்கரும் ஊடகவியலாளருமான மொஹான் சமரநாயக்க தெரிவித்த கருத்துக்களை இங்கே தொகுத்து தருகிறோம்.**

**கேள்வி - கட்டார் அரசு பற்றி சுருக்கமாக கூறுங்கள்?**

**பதில்** - கட்டார், கல்ப் வலயத்தில் 11586 சதுர கிலோமீட்டரைக்கொண்ட ஒரு சிறிய நாடாகும். 27 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். எண்ணெய் வளத்தை கண்டுபிடிக்க முன் கட்டாரின் பிரதான வருமானம் மீன்பிடித்துறையும், முத்து குளித்தலுமாகும். எனினும், ஜப்பான் உலக முத்துக்குளித்தல் சந்தையை கைப்பற்றிக்கொண்ட பின் கட்டாரில் அந்த கைத்தொழில் வீழ்ச்சிகண்டது. 1940 இல் எண்ணெயை கண்டுபிடித்ததோடு 1970 தசாப்தங்களில் எண்ணெய் விலை அதிகரித்ததன் காரணமாக கட்டார் ஒரு செல்வந்த நாடாக மாறியது. அந்த நாட்டின் தற்போதைய தேசிய உற்பத்தி 68940 அமெரிக்க டொலராகும். உலகின் ஆகக்கூடுதலான தேசிய உற்பத்திகளை கொண்ட நாடுகளில் கட்டார் 4 ஆம் இடத்தை வகிக்கின்றது. அதேநேரம், உலகின் மிகக்கூடிய வாழ்க்கை தரமும் இருப்பதோடு, மிகக்குறைந்த விகிதாசாரத்தை அறவிடும் நாடாகவும் இருக்கின்றது.

**கேள்வி- அந்த நாட்டின் கலாசார பின்னணி என்ன?**

**பதில்** - பிராந்தியத்தில் முஸ்லிம் நாடுகளோடு ஒப்பிட்டு பார்க்கும் போது கட்டார் ஒரு வகையில் ஒரு தீவிரவாத போக்கினை கொண்ட நாடாகும். இங்கு வாழும் சனத்தொகையில் 67 சதவீதமானோர் முஸ்லிம்கள் ஆவர். பெரும்பான்மையானோர் சுன்னி மற்றும் பிரிவினைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். அவர்களில் 20 வீதமானவர்கள் சியாக்கள் ஆவார்கள். முஸ்லிம்களுக்கு மேலதிகமாக கத்தோலிக்க, இந்து, பௌத்தர்களும் இருக்கிறார்கள். சர்வதேச விவகாரங்களில் கட்டார் எப்போதும் மேற்கு நாடுகளுடனேயே இருந்தது. சமய பிரசாரங்கள் செய்வது தடைசெய்யப்பட்டிருந்தாலும் 2008 முதல் கத்தோலிக்க ஆலயங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருக்கிறது. இதன்படி பார்க்கும் போது பிராந்தியத்தின் ஏனைய முஸ்லிம் நாடுகளை விட சமய சுதந்திரம் உள்ள ஒரு நாடாக கட்டாரை குறிப்பிடலாம்.

**கேள்வி - கட்டார் நாடு உலகின் முக்கியத்துவம் வகிப்பதேன்?**

**பதில்** - அந்த நாட்டில் இருக்கும் எண்ணெய் வளம் காரணமாக கட்டார் உலகில் முக்கியத்துவம் வகித்துள்ளது. உலகில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள எண்ணெய் படுக்கைகளில் 65 சதவீதம் வளைக்குடா பிராந்தியமான சவூதி அரேபியா, ஈராக், ஈரான், கட்டார் மற்றும் குவைட் ஆகிய நாடுகளிலேயே இருக்கின்றன. இந்த நாடுகளில் ஒன்றாக கட்டார் இருப்பதும் செல்வந்த நாடாக இருப்பதனாலும் உலகின் கவனத்தால் ஈர்க்கப்பட்டிருக்கின்றது.

**கேள்வி - சவூதி அரேபியா உட்பட சில நாடுகள் கட்டார் நாட்டுடன் இராஜதந்திர தொடர்புகளை நிறுத்திகொள்வதற்கான காரணம் என்ன?**

**பதில்** - இந்த நாடுகள் கூறுவது ஐ.எஸ்.ஐ.எஸ், அல்கொய்தா மற்றும் சிரியாவின் கூட்டு முன்னணி போன்ற தீவிரவாத குழுக்களுக்கு உதவி வழங்குவது என்பதாகும். எனினும், ஐ.எஸ்.ஐ.எஸ் உட்பட்ட பயங்கரவாத இயக்கங்களுக்கு கூடுதலான நிதி வருவது கட்டாரிலிருந்து அன்றி அந்த குற்றச்சாட்டை தெரிவிக்கும் சவூதி அரேபியாவில் இருந்து என்பது மிகப்பிரபலமான விடயமாகும். இந்த நெருக்கடியின் பின்னணியில் இருக்கின்ற உண்மையான காரணம் வேறொன்று. சவூதி அரேபியாவுக்கு தேவைப்பட்டிருப்பது பிராந்தியத்தில் தனது ஆதிபத்தியத்தை பாதுகாப்பதாகும். சுன்னி சவூதிக்கும், சியா ஈரானுக்கும் இடையே ஆதிபத்தியம் தொடர்பான போட்டியொன்று இருக்கின்றது. சுன்னி சவூதியின் நோக்கம் பிராந்தியத்தில் வஹாபிசத்தை ஸ்தாபித்து தமக்கு மிக நெருங்கிய நாடுகளை உருவாக்கிக்கொள்வதாகும். அண்மையில் ஈரானுக்கும் கட்டாருக்கும் இடையிலான தொடர்புகள் வளரத்தொடங்கின. கட்டார் போன்ற செல்வந்த நாடொன்று தமது பிராந்திய ஆதிப்பத்தியத்தை நிலைநிறுத்துவதற்காக ஈரான் ஆதரவு கொள்கையை கடைப்பிடிப்பது தமக்கு அச்சுறுத்தலாகவே பார்க்கப்படுகின்றது. அதேநேரம், சிரியாவின் சியா அல் அசாத் நிருவாகத்துடன் கட்டார் நெருக்கமாக உள்ளது. கல்ப் பிராந்திய நாடுகளுக்கிடையே அரசியல் ஆதிபத்தியம் தொடர்பாக இருக்கும் போட்டியின் ஒரு வெளிப்பாடாகவே இந்த இராஜதந்திர மோதலை குறிப்பிடலாம்.

**கேள்வி - அமெரிக்கா இதில் செலுத்தும் தாக்கம் என்ன?**

**பதில்** - பிராந்தியத்தின் ஆதிபத்தியத்துக்காக பிராந்திய மட்டத்தில் சவூதிக்கும்; ஈரானுக்கும் இடையில் போன்று உலக மட்டத்தில் அமெரிக்காவும் மற்றும் உலகின் பலம் வாய்ந்த நாடுகளுக்கும் இடையில் போட்டி நடைபெறுகின்றது. மேற்குலகம் தமக்கு அச்சுறுத்தலாக கருதுவது ஈரானையாகும். இதனை அணு ஆயுதமாக கருதலாம். ஈரானை தாக்கவேண்டுமென்று கருதுகின்ற பெருந்தொகையினர் அமெரிக்காவிலேயே இருக்கிறார்கள். அதில் இஸ்ரேலின் தேவை ஒபாமா பொருளாதார தடைகளுக்கு மத்தியில் ஈரானை சமாதான முறையில் கீழ்ப்படிய வைப்பதற்கு முயற்சி செய்தாலும் ட்ரம்ப்பும் அவருக்கு பின்னால் உள்ள சக்திகளும் ஈரானை அடக்கி வைக்கவேண்டுமென்று கருதுகின்றது. இந்த இராஜதந்திர நெருக்கடிக்கு சில தினங்களுக்கு முன் ட்ரம்ப் வளைக்குடா நாடுகளின் தலைவர்களை சந்தித்தார். அப்போது அமெரிக்காவுடன் சவூதி நெருங்கி இருந்தது. கட்டாரை தாக்குவதில் ஈரானுக்கு வழிமேற்படுத்துவதற்காகும். அதேபோன்று சிரியாவின் அசாத் நிருவாகத்தை ஆதரிப்போருக்கு அச்சுறுத்தல் விடுப்பதற்காகும். அதற்கு அப்பால் சென்றால் ரஷ்யாவுக்கு செய்யும் தாக்கமாகவும் கருதலாம். உண்மையிலேயே கட்டாருக்கு எதிராக இப்போது எழுந்து நிற்பது அமெரிக்க ஆதரவு நாடுகளாகும்.



**கேள்வி - இந்த நெருக்கடி கட்டாரை எப்படி பாதிக்கின்றது?**

**பதில்** - கட்டாருக்கு எதிராக சவூதி, எகிப்து, பஹ்ரேன், யெமன் ஐக்கிய அரபு அமீர் இராஜ்ஜியம் போன்ற நாடுகள் ஒன்றிணைந்து இருக்கின்றன. சில விமான சேவைகள் தமது கட்டார் சேவையை நிறுத்தியுள்ளன. கட்டாரில் இருக்கின்ற இராஜதந்திரிகள் போன்று தமது பிரஜைகளுக்கும் அங்கிருந்து வெளியேறுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகளுக்கிடையே நெருங்கிய பொருளாதார உறவு காணப்படுகின்றது. விமான போக்குவரத்து வர்த்தக தொடர்புகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக உணவுகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கின்ற கட்டார் நாட்டுக்கு பெரும் தாக்கமாக இருக்கின்ற உக்ரேன் பிரச்சினையால் ரஷ்யாவுக்கு மேற்கு நாடுகள் விதித்த தடை அந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு தடையாக இருந்தது. அவர்களுடைய வெளிநாட்டு ஒதுக்கு வற்றி விட்டது. ரஷ்யா போன்ற ஒரு பலமுடைய நாட்டுக்கு அவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டால் கட்டார் போன்ற ஒரு சிறிய நாட்டுக்கு அவ்வாறான தாக்கங்கள் ஏற்படுவது கட்டாயமாகும்.

கட்டார், சிங்கப்பூர் போன்று ஒரு நிதி கேந்திர நிலையமாக செயற்படுகின்றது. அவ்வாறான நாட்டுக்கு அயல்நாடுகளின் தொடர்பு இல்லாமல் இருக்க முடியாது. 2022 இல் உலக கால்பந்து வெற்றிக்கிண்ணத்துக்காக இப்போதே கட்டார் தயாராகின்றது. இந்த நிலை நீடித்தால் அவற்றுக்கும் தாக்கம் ஏற்படலாம். அரசை அடிபணிய வைப்பதற்காக அமெரிக்காவும் சவூதியும் எடுத்த ஒரு அவசர செயற்பாடாக இதனை காணலாம். எனினும் இதற்கு மிக விரைவில் தீர்வு காணப்படும் என்று நான் நம்புகிறேன். இதன் பின்னணியில் இருக்கும் ஏனைய பொருளாதார சமூக பூகோள அரசியல் காரணிகள் எதிர்காலத்தில் வெளிவரும்.

**கேள்வி - ஓர் இலட்சத்து 25 ஆயிரம் இலங்கையர்கள் கட்டாரில் தொழில் புரிகின்றார்கள் அவர்களுக்கு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும்?**

**பதில்** - 2003 இல் நேட்டோ நாடுகள் ஈராக்கை தாக்கியபோது ஈராக்கிருந்து இலங்கையர்கள் உட்பட வெளிநாட்டவர்களுக்கு வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது. அப்படியான அவசர நிலைமையொன்று இச்சந்தர்ப்பத்தில் ஏற்பட இடமில்லை. எனினும் நிலைமை ஏதாவது காரணிகளால் தொடர்ந்தால் இலங்கையர்களுக்கு அங்கு வேலைவாய்ப்புக்களை இழக்கும் ஆபத்து இருக்கின்றது, சில நேரங்களில் பணப்பரிமாற்றம், போக்குவரத்து, தேவையான உணவுப்பொருட்களை பெறுவது போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். அத்தோடு. கட்டாருடனான வர்த்தக முதலீடுகள் மட்டுப்படுத்தப்பட்டால் அதன் பொருளாதாரம் பலவீனம் அடையலாம். இந்த நெருக்கடி எவ்வளவு காலத்துக்கு நீடிப்பது என்பதில் தான் இதன் பிரதிபலன்கள் தீர்மானிக்கப்;படுகின்றன. கட்டார் நெகிழும் தன்மையுடைய பின்னணியை எதிர்கொண்டு தூரச் செல்வதற்கு இடம் வைக்காது தீர்வொன்றை காண்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என நான் கருதுகிறேன்

**கேள்வி - இந்த நெருக்கடியின் காரணமாக உலகுக்கு ஏற்படும் தாக்கம் என்ன?**

**பதில்** - கல்ப் பிராந்தியம் ஒருவகையில் பொருளாதார மத்திய மையமாகும். உலகின் எண்ணெய் உற்பத்தியில் 65 சதவீதம் அங்கேயே உள்ளது. அந்த பிராந்தியத்தில் ஏற்படும் நெருக்கடி உலக வர்த்தகத்தின் எண்ணெய் விலைக்கு வெளிநாட்டு நாணய விகிதாசாரத்துக்கு போக்குவரத்துக்கும் மற்றும் தொடர்பாடலுக்கும் கூட பாதுகாப்பாக அமையலாம். இப்போதாகும் போது அல்.ஜெஸீரா ஊடக வலையமைப்புக்கு சில சில தடைகள் போடப்பட்டுள்ளன. இந்த காரணிகளினால் தற்போதைய பிராந்திய உலக வர்த்தக செயற்பாடு ஒரு வகையில் சீர்குலையும். அது நீண்டகால பொருளாதார நெருக்கடியாகுவதற்கு இந்த நெருக்கடி தீர்க்கபடாது முன்செல்ல வேண்டும்.

**கேள்வி - இலங்கை போன்ற நாடுகளுக்கு இவ்வாறான நெருக்கடிகளினால் படிக்க வேண்டிய பாடம் என்ன?**

**பதில்** - உலகத்தில் ஏற்படும் சகல நெருக்கடிகள் மூலம் இலங்கை படிக்க கூடிய பாடங்கள் இருக்கின்றன. சகல நாடுகளும் தம்மால் இயன்றவரை பலமான தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பித்தான் உலகுடன் இணையவேண்டும். இன்று பலமான பொருளாதாரமுடைய சகல நாடுகளும் அந்த நிலைமைக்கு வந்தமை. அவ்வாறான வேலைத்திட்டத்தின் மூலமாகும். பிரித்தானியா 200 வருட காலம் தமது நாட்டில் கைத்தொழிலை முன்னேற்றி அவற்றுக்கு உலகோடு போட்டியிடும் சக்தியை பெற்றபின்னரே உலகுக்கு திறந்துகொடுத்தது. அமெரிக்கா 150 வருடகாலம் பொருளாதார பாதுகாப்பு கொள்கையை கடைப்பிடித்தது. ஆபிரகாம்; லிங்கனுக்கு பிறகு அமெரிக்க ஜனாதிபதி பதவிபெற்ற அமெரிக்க சிவில் யுத்த காலத்தில் அமெரிக்க இராணுவப்படை தளபதியாக இருந்த யுலிசிசிபிரான் ஒருமுறை கூறியது போன்று நாம் பகிரங்க சந்தைகளுக்கு போகின்றோம் பிரித்தானியா போன்று எமது பொருளாதாரம் பலமான பின்னே என்றார். அந்த நோக்கின் ஊடாக எங்களுக்கு பொறுத்தமற்றதாக இருப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை. இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் பலமான பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய நிலம், உழைப்பு, பரம்பரை அறிவு, புதிய அறிவு என்பன இருக்கின்றன. அவை பரிபூரணமாக இல்லாமல் இருக்கலாம். இவ்வாறான பிரச்சினைகள் சிங்கப்பூருக்கு ஏற்பட்டால் ஏற்படக்கூடிய நிலைமைகள் என்ன? சிங்கப்பூர் பொருளாதார மையம் தொடர்பாக ஏனைய குழாய் வழிகள் தடையானால் அதன் செயற்பாடுகள் இடைநிறுத்தப்படலாம் எனவே, குறைந்த பட்சம் நெருக்கடியான கட்டத்தினை எதிர்கொள்வதற்காக நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதோடு, உலகோடு, கொடுக்கல் வாங்கல்களை செய்வதற்கு நாம் எம்மை பார்த்துகொள்ளவேண்டும்.

# எங்கள் பொறுமையை சோதிக்க வேண்டாம் நாம் இனியும் பொறுக்கத் தயாரில்லை

## பாராளுமன்றில் வெகுண்டெழுந்தார் அமைச்சர் றிஷாட்



முஸ்லிம்களின் பொறுமையை இனியும் சோதிக்காதீர்கள், முஸ்லிம் இளைஞர்களை ஆயுதம் தூக்க வைத்து இன்னுமோர் இரத்த ஆறு ஓடுவதற்கு வழி செய்யாதீர்கள். நாங்கள் இவ்வளவு நாளும் பொறுத்தது போதாதா? எங்களைத் தொடர்ந்தும் சீண்டிக்கொண்டு இருப்பவர்களுக்கெதிராக உடன் நடவடிக்கை எடுக்க ஏன் தயங்குகிறீர்கள்? இவ்வாறு பாராளுமன்றில் அமைச்சர் றிஷாட் பதியுதீன் வெகுண்டெழுந்தார்.

ஜெனீவா மனித உரிமைப் பிரேரணை தொடர்பில் பாராளுமன்றத்தில் நடந்த விவாதமொன்றில் பேசிய அமைச்சர் மேலும் கூறியதாவது,

அல்லாஹ்வையும், முஸ்லிம்களின் இறைத்தூதரையும், முஸ்லிம்களின் வாழ்க்கை முறையையும் தொடர்ந்தும் கேவலப்படுத்தி பழி சொல்லி வரும் மதகுரு ஒருவரினதும், அவரைச் சூழ்ந்திருக்கும் திருடர்களினதும் கேவலங்கெட்ட செயலை தொடர்ந்து அனுமதித்து வருகின்றீர்கள். அந்த மதகுருவுக்கெதிராக எத்தனையோ முறைப்பாடுகள் இருந்தும் அவரைக் கைது செய்வதற்கு பின்னடிக்கின்றீர்கள். அவரைக் கைது செய்வதற்கென நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் இன்னும் பூச்சாண்டி காட்டி வருவது வெட்கமில்லையா?

எவரையும் கைது செய்ய வேண்டுமென்பதோ, எவரையும் சிறையில டைத்து துன்புறுத்த வேண்டுமென்பதோ முஸ்லிம் சமூகத்தின் நோக்கமாக இராத போதும், அந்த மதகுரு முஸ்லிம்களை நிம்மதியாக வாழ விடாததனாலேயே அவரைக் கைது செய்ய வேண்டுமென வலியுறுத்துகின்றோம். எங்களை தொடர்ந்தும் அவர் துன்புறுத்தியே வருகின்றார். அதனால் தான் நானும் பொலிஸ் தலைமையகத்தில் அவருக்கெதிராக முறைப்பாடொன்றை செய்தேன். ஆனால் இன்னும் கைது நாடகம் தான் தொடர்கின்றதே ஒழிய அவரைக் கைது செய்ய மறுக்கிறார்கள். அவர் ஒழிந்திருக்கின்றதாக பம்மாத்துக் காட்டுகிறார்கள். பொலிஸ் மா அதிபருக்கே சவால் விட்டுக் கொண்டு சட்டத்தையும் கையிலெடுத்து அவர் தான் நினைத்தபடி ஆடி வருகின்றார்.

திறமையான புலனாய்வுப் பிரிவு நமது நாட்டில் இருப்பதாக கூறப்படுகின்றது. ஆனால் இந்த மத குரு இருக்கும் இடத்தை அவர்களால் கண்டு பிடிக்க முடியாமல் இருப்பது தான் வெட்கமாக இருக்கின்றது.

முஸ்லிம் சமூகத்திற்கெதிரான துன்பங்கள் இன்னுமே தொடர்ந்த வண்ணமுள்ளன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிறுவனத்தை எரித்தும், அழித்தும் வருகின்றார்கள். சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. ஆனால் இவற்றை முறையிடும் போது பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று கூறப்படுகின்றதே ஒழிய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதாக இல்லை. இத்தனை சீ சி டீ வி கமெராக்களை பொருத்தியும் என்ன பயன்? நாசகாரிகளை உங்களால் ஏன் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இது எங்களுக்கு வேதனையாக இருக்கின்றது.நுகேகொட விஜயராமையில் கடையொன்றை எரித்தார்கள்.

அதே போல நடந்த சம்பவங்கள் அனைத்தையும் அடுக்கிக் கொண்டே போகலாம். முஸ்லிம் சமூகம் ஆயுதம் தூக்கிய சமூகம் அல்ல. சிங்கள இளைஞர்களுடனோ, ஒரே மொழி பேசும் தமிழ் இளைஞர்களுடனோ இணைந்து ஆயுதம் தூக்கி போராடாத சமூகம். இருக்கின்ற நாட்டில் ஏனைய சமூகத்துடன் இணைந்து சுமூகமாக வாழப் பழகிக் கொண்ட சமூகம். குர்ஆனும் நபி பெருமானாரும் எங்களுக்கு அதனையே சொல்லித் தந்துள்ளனர். எனவே எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள்.எங்களுக்கெதிராக செயற்பட்டு, எமது நிம்மதியை குலைப்பவர்களுக்கெதிராக ஜனாதிபதியும் பிரதமரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீண்டும் இந்த உயர் சபையில் வலியுறுத்த விரும்புகின்றேன். இந்த சம்பவங்களை உடன் தடுத்து நிறுத்த ஏற்ற நடவடிக்கை எடுக்காவிட்டால் விளைவுகள் விபரீதமாகும் என்பதையும் இந்த சபையில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என்று அமைச்சர் கூறினார்.





தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் இணையத்தளம் மீள் உருவாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் உத்தியோக பூர்வமாக அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது.

சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் தலைமையில் மேற்படி இணையத் தளம் திறந்து வைக்கப்பட்டபோது தொலைத் தொடர்புகள் மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்த தேசப்பிரிய, சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் உயங்கொட, அமைச்சின் மேலதிகச் செயலாளர் எம்.கே. முஹைஸ் மற்றும் அமைச்சின் அதிகாரிகள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அமைச்சின் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

## கட்டட சரிவு அனர்த்தத்தில் உயிரிழந்த இளைஞனின் குடும்பத்திற்கு நிதியுதவி

(ஹட்டன் க.கிஷாந்தன்)

கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கட்டட சரிவு அனர்த்தத்தில் சிக்குண்டு பலியாகிய திம்புள்ள பத்தனை கிரேக்கிலி தோட்டத்தைச் சேர்ந்த ராமர் நிரோஷனின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞர் அணி அமைப்பாளர் ராஜமணி பிரசாத் அக்குடும்பத்தாருக்கு ஒரு தொகை பணத்தையும் நேற்று முன்தினம் வழங்கியுள்ளார்.

கிரேக்கிலி தோட்டத்திற்கு நேரடியாக விஜயத்தை மேற்கொண்ட ராஜமணி பிரசாத் விபத்தில் உயிரிழந்த இளைஞனின் வீட்டார்களை நேரடியாக சந்தித்து தனது அனுதாபங்களை தெரிவித்ததுடன் அக்குடும்பத்தாரின் எதிர்கால நலத்திற்காக இந்த குறித்த தொகை பணத்தை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## 1.4 மில். ரூபா செலவில் இலவச குடிநீர் இணைப்பு

(மருதமுனை, ஓட்டமாவடி நிருபர்கள்)

இறக்காமம் பிரதேச செயலகத்தின் கீழுள்ள முகைதீன் கிராமம் மற்றும் ஜபல் நகர் ஆகிய பிரதேச மக்களுக்கான முழுமையான இலவச குடிநீர் இணைப்பை நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரின் இணைப்பு செயலாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பிரதி ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹுமத் மன்சூரின் அயராத முயற்சியினால் சவூதி அரேபியாவின் நிதாஉல் ஹைர் நிறுவனத்தின் 1.4 மில்லியன் ரூபாய் செலவில் இலவச குடிநீர் இணைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.



இறக்காமம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ்.எல்.நிஸார் தலைமையில்) செவ்வாய்க் கிழமை நடைபெற்ற நிகழ்வுக்கு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரின் இணைப்பு செயலாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பிரதி ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹுமத் மன்சூர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இலவச குடிநீர் இணைப்பை பிரதேச மக்களிடம் கையளித்தார்.

இதன்போது நீண்டகாலமாக குடிநீர் இன்மையினால் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட முகைதீன் கிராமம் மற்றும் ஜபல் நகர் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் இலவசமாக குடிநீர் இணைப்பைப் பெற்றுக்கொடுக்க அயராது பாடுபட்ட நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரின் இணைப்பு செயலாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பிரதி ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரஹுமத் மன்சூருக்கு பிரதேச மக்களினால் மகத்தான வரவேற்பு அளித்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் பிரதி தலைவரும் அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவருமான அஷ்ஷெய்க் எஸ்.எச்.ஆதம்பாவா மௌலவி, நிதாஉல் ஹைர் நிறுவனத்தின் உதவி பணிப்பாளர் பைசால் இப்றாஹீம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அம்பாரை மாவட்ட உதவி பொது முகாமையாளர் எம்.எம்.நஸீல், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் ஜெ.நஸ்ருல் கரீம்,இறக்காமம் அனைத்து பள்ளிவாசல் தலைவர் ஏ.கே.அப்துல் ரஹூப், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் இறக்காமம் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எச்.ஏ.ஜப்பார், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரின் இணைப்பு செயலாளர் எம்.எஸ். ஜெமீல் காரியப்பர், முன்னாள் இறக்காமம் பிரதேச சபை தவிசாளர் மௌலவி யூ.கே.ஜாபிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான யூ.எல்.ஜிப்ரி, எம்.எல்.முஸ்மில், என்.எம்.ஆஷிக், பயனாளிகள், இளைஞர்கள், உள்ளிட்ட பிரதேச முக்கியஸ்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## புங்குடுதீவு தாயகம் அமைப்பு தென்னிலங்கை மக்களுக்கு உதவி



கடந்த சில நாட்களாக இலங்கையின் மலையகம், களுத்துறை, இரத்தினபுரி, காலி, அம்பாந்தோட்டை உட்பட தென்னிலங்கை எங்கும் ஏற்பட்ட மழை, வெள்ள அனர்த்தங்களினால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு, சில தமிழ் உறவுகள் தந்த பொருட்களை புங்குடுதீவு தாயகம் சமூக சேவை அகம் அமைப்பின் (சுவிஸ் பிரதிநிதிகள்) சார்பில் பொறுப்பேற்று, சுவிஸில் உள்ள பௌத்த விகாரை பீடாதிபதியின் உதவியுடன் இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி பொருட்களை சுவிஸ் பேர்ண் மாநில, கும்லிங்கன் பகுதியில் உள்ள 'சிலோவா வைத்தியசாலையில் (SILOHA Spital, Gumlingen) தொழில் புரியும் அ.கைலாசநாதன் , அங்குள்ள நிர்வாகத்திடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று, அந்த சிலோவா வைத்தியசாலை நிர்வாகம் தந்த பொருட்களுடன், மேலும் சில தமிழ் உறவுகளும் தந்த பொருட்கள் அனைத்தையும் , சுவிஸில் உள்ள சூரிச் பௌத்த விகாரை பீடாதிபதி கருவெலகஸ்வெவ அனுருத்த தேரோ உதவியுடன் இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்காக ஒப்படைக்கப்பட்டது.

## கொழும்பு மதஸ்தலங்களுக்கு மாநகர சபை நிதியுதவி



(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு மாநகர சபையினால் வருடா வருடம் சகல இனங்களின் மதஸ்தானங்களுக்கும் உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பின்தங்கிய 83 பள்ளிவாசல்களுக்கு நிதி வழங்கப்பட்டது.

ஒவ்வொரு பள்ளிவாசலுக்கும் ரூபா 50 ஆயிரம் வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வு கடந்த 5ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்கா, இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி, பிரதம மந்திரியின் இணைப்புச் செயலாளர் ரோசி சேனா நாயக்க, கொழும்பு மாநகர சபையின் ஆணையாளரும் கலந்து கொண்டு காசோலைகளை பள்ளிவாசல்களது தலைவர் , செயலாளர்களிடம் கையளித்தனர். இங்கு உரையாற்றிய சட்டம் ஒழுங்கு அமைச்சர் உரையாற்றுகையில் -

அண்மைக்காலமாக சில மதவாதிகளினால் நடைபெற்றுவரும் செயல்களை விட்டு நான் கவலையடைகின்றேன். யாராக இருந்தாலும் சட்டம் ஒழுங்கு சகலருக்கும் சமம், சட்டத்திற்கு எதிராக குற்றம் விளைவிப்பவர்கள் உடன் கைது செய்து அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். சில கடைகள் பக்கத்து கடையில் வைத்த சிறுவிளக்கு விழுந்ததினால் பக்கத்து கடை எரிந்து தீப்பற்றியுள்ளது. இவ் விடயம் பற்றி முஸ்லிம் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலும் காரசாரமாக விவாதித்தார்கள். அதே போன்று அமைச்சரவையிலும் விவாதிக்கப்பட்டது. இக் குற்றங்களை இழைத்தவர்களை இனம் கண்டு உடனடியாக கைது செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அங்கு அமைச்சர் தெரிவித்தார்.

## வட்டதெனியவில் நிவாரணம் திரட்டு

(வட்டதெனிய தாஹுத்)

உடுநுவர மஸ்ஜித் சம்மேளனத்தின் அவசர வேண்டுகோளுக்கிணங்க வட்டதெனிய டப்ளியு. எஸ்.எம். இளைஞர் இயக்கம், வெள்ள அகதிகளுக்கு விநியோகிப்பதற்கு பெருந்தொகையான வெள்ள நிவாரணப் பொருட்களை சேகரித்து உடுநுவர பிரதேச செயலகத்திடம் ஒப்படைத்துள்ளமையை பலரும் பாராட்டியுள்ளனர்.

அதே வேளையில் வட்டதெனிய பி.டி.எஸ். இளைஞர் இயக்கம் ரூபாய் 17 இலட்சம் பெறுமதியான 400 ரமழான் நோன்புப்பொதிகளை வறிய மக்களுக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அல் கொமய்னி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இளைஞர் சேவை மன்றத்தின் யூத் ஒப் டெலண்ட் வேலைத் திட்டத்தின் கீழ் துறையடி தக்கியதுன் நூர் பீ ஷாதுல் அல் பஹ்ர் பள்ளியின் முன் கூரை சுவர் அமைத்தலுக்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் பள்ளிவாசல் வளாகத்தில் அதன் தலைவர் ஏ.ஜி. எம்.ஜிஹாத் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் இளைஞர் சேவை அதிகாரி ஐ.ஜாபிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தார். நகுமானியா கிராம உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.இன்சாப்,கிண்ணியா யூத் கோப்ஸ் நிலையத்தில் கடமை புரியும் உளவளத்துணை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.றியாத், பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

(படங்கள்- கிண்ணியா நிருபர் )

**மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை**

**உண்மையான உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்கும் முகவர்** M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.) T.P: 0772810009. WhatsApp : 0779697790 Email - nrahmathullah786@yahoo.com

# பாவமன்னிப்பு

(சிராஜுல்ஹஸன்)

ரமழான் மாதத்தின் இரண்டாம் பத்தை நாம் அடைந்துள்ளோம். இது பாவமன்னிப்புக்கான நாள்களாகும்.

தான் ஒரு நாளில் எழுபது முறைக்கும் அதிகமாகப் பாவமன்னிப்புக் கோருவதாக முன், பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட மாநபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

பாவத்தின் நிழல்கூட படாத அந்தப் புண்ணிய நபியே ஒரு நாளில் இத்தனை முறை பாவ மன்னிப்புக் கோரும்போது, பாவக் குட்டையிலேயே மூழ்கிக் கிடக்கும் நமது நிலை என்ன?

ஒரு முறை நபிகளார் மிம்பரில் (உரை மேடையில்) ஏறும்போது வழக்கத்துக்கு மாறாக ஆமீன் (அப்படியே ஆகட்டும்) என்று கூறினார்.

நபித்தோழர்கள் வியப்புடன் கேட்டனர் - வழக்கத்துக்கு மாறாக ஆமீன் கூறுகிறீர்களே என்ன காரணம்?

நபிகளார்(ஸல்) கூறினார்கள்:

நான் உரை மேடையில் ஏறும் போது, வானவர் தலைவர் ஜிப்ரீல் வந்து, 'யார் ரமளான் மாதத்தை அடைந்த பிறகும் தனது பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளவில்லையோ அவர் நாசமாகட்டும்' என்றார். நான் ஆமீன் கூறினேன்.

பொதுவாக யாரையும் சபிப்பது நபிகளாரின் வழக்கமல்ல.

ஆனால் வானவர் தலைவரின் இந்த சபித்தலுக்கு நபிகளார் ஆமீன் கூறியிருக்கிறார் எனில், ரமழானில் இறைவனிடம் பாவ மன்னிப்பைப் பெறுவதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ளலாம்.

இந்தப் புண்ணிய மாதத்தில் பாவங்கள் மன்னிக்கப்பட்ட கண்ணியவான்கள் பட்டியலில் நம் பெயர்களையும் இறைவன் சேர்ப்பானாக.

***





''தர்மம் செய்வது எல்லா முஸ்லிம்களின் மீதும் கடமையாகும்'' என்று இறுதி இறைத்தூதர் பெருமானார் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறியபோது மக்கள், ''ஒருவருக்கு தர்மம் செய்ய எதுவும் கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது?'' என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''அவர் தம் இரு கைகளால் (அவர்) உழைத்துத் தாமும் பயனடைவார். தர்மம் செய்(து பிறரையும் பயனடைய செய்)வார்!'' என்று கூறினார்கள். அதற்கு மக்கள், ''அவருக்கு (உழைக்க உடலில்) தெம்பு இல்லையென்றால் அல்லது அவர் அதைச் செய்யா(செய்ய இயலா)விட்டால் (என்ன செய்வது)?'' என்று கேட்டனர். நபி (ஸல்) அவர்கள் ''பாதிக்கப்பட்ட தேவையுடையோருக்கு அவர் உதவட்டும்!'' என்றார்கள்.

மக்கள், ''(இதையும்) அவர் செய்ய (இயல)வில்லையென்றால்?'' என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் அப்போது, ''அவர் நற்காரியங்கள் செய்யும்படி பிறரை ஏவட்டும்!'' என்றார்கள். ''இதையும் அவர் செய்யாவிட்டால்?''

# தர்மம் என்பது; சில்லறைகளை அள்ளி இறைப்பதா?

என்று மீண்டும் கேட்டதற்கு, நபி (ஸல்) அவர்கள், ''அவர் (பிறருக்கு எதுவும்) தீங்கு செய்யாமல் இருக்கட்டும். அதுவே அவருக்கு தர்மம் ஆகும்'' என்றார்கள். (அறிவிப்பவர் : அபூமூஸா அல் அஷ் அரீ (ரழி). (நூல்: புகாரி, ஹதீஸ் எண் 6022)

தர்மம் என்பது, 'பணத்தையும், பொருளையும் கொடுத்து உதவுவது மட்டுமே!' என்று விளங்கி வாழ்ந்து வரும் இன்றைய கால கட்டத்திற்கு ஏற்ப, ஏறத்தாழ 1420 ஆண்டுகளுக்கும் முன்னர் மனித சமூகத்திற்கு வழி காட்ட அனுப்பப்பட்ட இறுதி இறைத்தூதர் மூலம் அல்லாஹ் மிகவும் அழகான முறையில தர்மத்தின் விளக்கத்தை வழங்கியுள்ளான். இந்த நபிமொழி மூலம், சில்லறைகளை எடுத்து வறியவருக்கு இறைத்து விடுவதுதான் தர்மம் என்று பலர் கருதுவது எவ்வளவு தவறான கண்ணோட்டம் என்பதை உணர்த்தி, மக்களது சிந்தனைகளில் இது நாள் வரை இருந்து வந்த தர்மம் குறித்த தவறான கருத்துக்கள் அடங்கிய மூடத்திரைகளை இறைவன் அழகாக அகற்றுகின்றான். தர்மம் செய்வது பொருளாதாரத்தின் மூலம் செல்வந்தர்களாக இருப்பவர்கள் மட்டும் செய்யும் காரியமன்று என்பதை இந்நபிமொழி தெளிவாக எடுத்துரைக்கின்றது.

தன்னிடம் எது இருக்கின்றதோ அதனை தேவையுடையவர்களுக்குக் கொடுப்பதும், தன்னிடம் எதுவுமே இல்லை எனில் மற்றவர்களை நன்மைகளை செய்வதற்கு ஏவுவதும் அதற்கும் இயலாதெனில் யாருக்கும் எவ்வித தீங்கும் இழைக்காமல் இருப்பதும் தர்மமே என்று இஸ்லாம் தர்மத்திற்கு விரிவான விளக்கம் அளிக்கின்றது. இதன் மூலம் நன்மைப் பெற்றுத் தரும் எளிய வழிமுறையை இஸ்லாம் மனித சமூகத்திற்கு கற்றுத் தருகிறது.

பெரும்பொருள் படைத்த செல்வந்தர்கள் மட்டுமின்றி தன்னிடம் அடுத்த வேளை உணவுக்குக் கூட வழியில்லாத ஒரு பரம ஏழையும் இவ்வழிகாட்டல் மூலம் தர்மம் செய்து நன்மைகளை இலகுவாகப் பெற முடியும். அத்துடன், தர்மம் எனும் பெயரில் மக்களை மானமிழந்து, மதியிழந்து செயல்படும் நிலையிலிருந்து வெளியேற்றி தர்மத்தின் மகத்துவத்தையும், அதே நேரத்தில் உழைப்பின் அவசியம் மற்றும் சிறப்பையும் இந்த நபிமொழி மிகவும் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகின்றது.

இதைத் தொடர்ந்து, தேவையுடைய ஒருவருக்கு அவர் தம் பணிகளில், அல்லது அவரது தேவைகளை நிறைவேற்ற உடலாலோ உள்ளத்தாலோ உழைப்பதும் தர்மமாக கணிக்கப்பட்டு அவருக்கும் இதன் மூலம் நற்பலன்கள் பெற இயலும் என்று கூறி ஒரு சுமுகமான, புரிந்துணர்வுடன் கூடிய சமூக ஒற்றுமையைக் கொண்டதொரு வாழ்க்கை முறையை மனித சமூகத்துக்கு அறிமுகப்படுத்துவதையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும் உடல் ஊனங்களோ, பலவீனங்களோ, முதுமையோ, வறுமையோ ஒருவர் தர்மம் செய்து நன்மைகள் பெற தடையாக நிற்காது என்றும், நல்லதைச் செய்ய தன்னால் இயலவில்லையென்றாலும், பிறரை அதற்காக ஏவுதலும் உபதேசித்தலும் கூட தர்மத்தின் நன்மையைப் பெற்றுத் தரவல்லவை எனும் உன்னதமான நல்வழியை இஸ்லாம் சமூகத்திற்குக் கற்றுத் தருகிறது.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக ஒருவருக்குச் செல்வமோ, உடல் வலிமையோ, ஆற்றலோ, நாவன்மையோ அல்லது இதில் எதுவுமே இல்லையென்றாலும் (சொல்லாலும் செயல்களாலும் உள்ளத்தாலும் பிறருக்கு ஏற்படும்) தீங்குகளிலிருந்து விலகி இருப்பதும் தர்மம் ஆகும் என்று இஸ்லாம் உபதேசிக்கிறது.

''ஒருவருக்குத் தீங்குகள் ஏற்படுத்தாமல் செயல்படுவதும் நன்மையை பெற்றுத் தரும்'' எனும் ஓர் உன்னதமான உயரிய சிந்தனையை இந்த இரத்தினச் சுருக்கமான நபிமொழி எடுத்தியம்பி கலாச்சாரச் சீரழிவுகளில் அலைமோதி, மனித நேயமும் ஒழுக்க மாண்புகளையும் மறந்து மனித சமூகத்திற்கெதிராக பல்வேறு அக்கிரமங்கள் புரிந்து வாழ்ந்து மரணிக்கும் மனித சமூகத்திற்குத் தெளிவான வாழ்வியல் நெறியை அக்கறையோடு இந்நபிமொழி நினைவூட்டுகின்றது.

இறுதியாக, நன்மையென்பது அதை செய்பவருக்கு மட்டுமன்றி அது யாருக்கு செய்யப்படுகிறதோ அவருக்கும் நன்மையென்பதுடன், யாருக்கும் நன்மை செய்ய இயலவில்லையெனினும் எந்தத் தீங்கையும் செய்யாமல் இருப்பதே அவருக்கு (தர்மம் செய்த) நன்மையென்று கூறி, ஒவ்வொரு தனி மனிதனையும் ஒட்டு மொத்த சமூகத்துடன் மனித நேயத்துடன் வாழுமாறு இந்த நபிமொழி பிணைத்து விடுகிறது.

***




# பசிப்போராட்டங்கள்

- அஷ் ஷெய்க் ஏ. உமர் ஜுஃபர்

பசியை அடக்க முடியாத மனிதன் பிச்சையெடுக்கும் நிலைக்குக் கூட இறங்கி விடுகிறான். உண்ண உணவில்லை எனும் போது பசியுணர்வு தூண்டி விட்டால் உரிமையில்லாத திருட்டுக்குக் கூட மனிதன் துணிந்து விடுகிறான். பசி என்பது மனிதனுக்கு இறைவன் கொடுத்த பரிசோதனைப் பட்டறை. பசியை உருவாக்கி ஒரு மனிதனை மிருகமாகவும் மாற்றலாம். பசியைக் கொடுத்து ஒரு மனிதனைப் புனிதனாகவுமாக்கலாம்.

உலக வரலாற்றில் பசி இல்லாத பக்கங்களே கிடையாது. நாட்டுக்காகப் பசி! வீட்டுக்காகப் பசி! மனைவிக்காகப் பசி! மக்களுக்காகப் பசி! ஆட்சிக்காகப் பசி! அதிகாரத்துக்காகப் பசி! பட்டத்துக்காகப் பசி! பதவிக்காகப் பசி! பசி! பசி!! பசி !!!

அந்நியனின் கரங்களில் தாய் நாடு சிக்கிக் கிடக்கிறது! தாயக மக்கள் அடிமைத்தளையில் கட்டுண்டு கிடக்கின்றனர்! ஆளச் சுதந்திரமில்லை! அனுபவிக்கச் சுதந்திரமில்லை! பேசச் சுதந்திரமில்லை! எழுதச் சுதந்திரமில்லை! இப்படிப்பட்ட நிலையில் ....

வேண்டும் ஓர் விடுதலை!

கத்திப் பார்த்தும் பயனில்லை. கதறிப் பார்த்தும் பலனில்லை! சொல்லிப் பார்த்தும் பலனில்லை! அடுத்தது ஆர்ப்பாட்டம்! அடிதடி! ஆயுதப் போர்! உதிரம் சிந்தியும், உடல்கள் சரிந்தும், உயிர்கள் பிரிந்தும் பலனில்லாத நிலை!

முடிவில் ஒரு முடிவு! உண்ணாவிரதம்! பசியை அடக்கிப் பலன் கேட்கத் துணிந்து விடுகிறான் மனிதன். விரதம் ஏற்கும் மனிதன் முகம் வாடுகிறது! உடல் சோர்கிறது! பசி உயிரைத் தொட்டுத் தொட்டுப் பார்க்கிறது. இப்படி ஒரு மனிதனல்ல! ஓராயிரம் மனிதர்கள் ஒன்று கூடிப் பசித்துக் கிடக்கும் போது அடக்கி ஆளும் அதிகார வர்க்கத்துக்கு செய்தி செல்கிறது.

ஆயுதமேந்திப் போர் புரிந்து உதிரம் சிந்தி, உயிர் நீக்கிக் கேட்டும் கிடைக்காத சுதந்திரம் உண்ணா நோன்பால் கிடைக்கிறது. உண்ணாமல் கிடந்த பசியால் நாட்டுக்கு விடுதலை! போராட்ட வீரர்களின் பசிக்குப் பரிசு விடுதலை. பசித்திருந்து அந்த விடுதலைப் பரிசை அடைந்து மகிழ்கின்றனர் மக்கள்! ஆளத் தகுதியற்ற ஆட்சியாளரை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றுவதற்கும் ஒரு பசிப் போராட்டம்! தேவையான தலைவனைத் தகுதியான பீடத்தில் அமர்த்துவதற்கும் ஒரு பசிப் போராட்டம். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காவிட்டால், பசித்திருந்து அந்த ஊதியத்தைப் பரிசாகப் பெறும் போராட்டம். அநீதி தலை தூக்கி நிற்கும் போதும் அதை அடக்கிக் காட்டுவதற்கு உண்ணாவிரதப் (பசிப்) போராட்டம்!

இப்படிப்பட்ட பசிப் போராட்டங்களால் நாட்டில் நற்சுதந்திரம் பரிசாகக் கிடைக்கிறது! நல்லாட்சி மலர்கிறது! ஊதியம் உயர்கிறது! உவகை ததும்புகிறது! தான் கிடந்த பசியின் பரிசை எண்ணி காலமெல்லாம் குதூகலம் தான்! இது நாட்டு நடப்பு! நம் கண் முன்னே நடக்கிறது!

கணவன் மனைவிக்கு இடையே சிறு சிறு போராட்டங்கள்! தான் விரும்பிய பொருளை கணவன் வாங்கிக் கொடுக்க மறுக்கும்போது சமைத்த உணவைக் கூடச் சாப்பிடாமல் பசியோடு படுத்து விடுகிறாள் மனைவி! மறுநாள் அவள் கேட்ட பொருள் வீடு வந்து சேருகிறது! இது அவள் பசிக்குக் கிடைத்த பரிசு! தனக்குத் தேவையான விளையாட்டுப் பொருளை தனக்கு வாங்கிக் கொடுக்கவில்லை என முரண்டு பிடித்து சாப்பிட மறுக்கிறது குழந்தை! உடனே அந்த விளையாட்டுப் பொருள் குழந்தை கைக்குக் கிடைக்கிறது! இது அக்குழந்தையின் பசிக்குக் கிடைத்த பரிசு! இது வீட்டு நடப்பு!



இப்படியே உலகில் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவர் நிலைகளிலும் ஒவ்வொரு பசிப் போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன! முடிவில் அந்தப் பசிக்குப் பரிசும் நிச்சயம் கிடைத்து விடுகின்றது!

ஏன் தெரியுமா? மனித உணர்விலேயே யாரும் சகித்துக் கொள்ள முடியாத ஓர் உணர்வு பசி உணர்வுதான். மக்கள் பசித்திருக்க மன்னன் சகிக்க மாட்டான். மனைவி பசித்திருக்கக் கணவன் சகிக்க மாட்டான். பிள்ளை பசித்திருக்க பெற்றோர் சகிக்க மாட்டார்கள். மனிதனுக்கு மனிதனே சகித்துக் கொள்ள முடியாத உணர்வு தான் பசி உணர்வு ! ஆம்! இது தான் உண்மை! தனியொரு மனிதனுக்கு உணவில்லை என்றால் ஜகத்தினை அழித்திடுவோம் என்று சீறி பாடி வைத்தான் சுதந்திரக் கவிஞன் பாரதி. ஒரு மனிதன் பசி கிடந்தால் கூட, உலகையே அழித்து விடலாம். என்று கொதிக்கிறான் அவன். மீண்டும் நினையுங்கள். மனிதனுக்கு மனிதனே சகித்துக் கொள்ள முடியாத உணர்வு தான் பசி உணர்வு இந்த நிலையில் மனிதனின் பசியை இறைவன் சகித்துக் கொள்வானா? இதுதான் நமது கருப்பொருள்! நிச்சயம் சகித்திக் கொள்ளமாட்டான்.

கருணைக் கடாட்சமும், கொடைத்தயாளமும், அருளும், அன்பும் கொண்ட நிகரற்ற அந்த தலைவனுக்கு நமது பசி தேவையா? நாம் பசித்திருப்பது அவனுக்கு ஓர் இன்பமா? அது ஒரு திருவிளையாட்டா? இந்தப் மனிதப் பசி நிலையால் அவனுக்கு என்ன இலாபம்? எதுவுமே இல்லை. எதுவுமே இல்லை !! மனிதப் பசியால் இறைவனுக்கு இன்பமும் இல்லை! மனிதப் பசியால் இறைவனுக்கு இலாபமும் இல்லை! மனிதப் பசி அவனுக்கு ஒரு விளையாட்டும் அல்ல! மனிதப் பசி அவனுக்குத் தேவையுமல்ல!

அப்படி என்றால் ஏன் மனிதனைப் பசித்து இருக்கச் சொல்கிறான்? பட்டினி கிடக்கச் செய்கிறான்? அந்தப் பசியை ஒரு மாதப் பகற்காலங்களில் கடமையாக ஏன் ஆக்கினான்? அதைக் கடைபிடிக்காதவரை ஏன் தண்டிக்கிறான்? எக்காலமும் போல் மனிதனை உண்டு தின்று வாழ விட வேண்டியது தானே? அதற்குத்தான் இறைவன் சொல்கிறான் : என்னை நம்பி விசுவாசிப்போரே! உங்களுக்கு முன் வாழ்ந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல், உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் பயபக்தி (என்னும் தக்வா) உடையவர்களாகலாம் என அல்குர்ஆன் சூரா அல்பகரா வசனம் 183 ல் இறைவன் அறிவிக்கின்றான்.

இறைவனின் பயமும் பக்தியும் (தக்வா) ஒரு மனிதனின் உள்ளத்தில் உருவாகி விட்டால், அவன் தவறுகளிலிருந்து தவிர்ந்து கொள்கிறான். எந்த மனிதன் தவறுகளிலிருந்து தவிர்ந்து கொண்டானோ அவனே மனிதப் புனிதன். அந்தச் சுவனத்திற்கு வழிகாட்டுவதே உண்ணா நோன்பு. அந்த நோன்பு என்னும் பசிக்குப் பரிசு தான் சொர்க்கம்.

***

# அருள் தருவாய் அல்லாஹ்

அல்லல் ஒரு புறம்
அவலங்கள் ஒரு புறம்
பக்குவமாய் - பெறுகின்றோம்
ரமழானே!....

தொழில்நுட்ப சாதனத்தின்
தொல்லைகளும்,
தொந்தரவு தரும்
உலக இன்பங்களும்
சுற்றிவர - சொற்பநேரமும்
ஊடுடனே!

இத்தனையும் - தாங்கிட்டு
பொறுமையுடனே! பொறுமையுடன்!
நல்லமல்கள் பல புரிந்து
நற்பத்தை கடந்திட்டோமே!
மஃபிரத்தில் மன்றாட
வாய்ப்பையும் பெற்றிட்டோம்....

சாந்தமுடன், சந்தோஷமாய்
நந்தவன மலர்ச்சோலையின்
வாசனைகள் - நீங்கிலா
இரவுகளின் - இன்பமே!
ரமழான்....

ரமழான் வசந்தம் வந்தது
இன்பங்கள் - பல தந்தது
பள்ளியிலே - பலவித நிகழ்வுகள்
பாரினிலே!
பல்வேறு அழிவுகள்....

இனிமையை - கலைக்கவென
இம் மாதந்தனிலே!
பல - சகோதரர்கள்
பலருக்கும் - பலவித
அழிவுகள்....

நிம்மதியாய் - சஹரும், இஃப்தாரும்
நமக்கு உண்டு! அல்ஹம்துலில்லாஹ்...
நித்தமும் அழிவுகளால்
அவதியுறும் - உடன்பிறப்புகளுக்காய்
அகம் அழுது - கையேந்துவோம்!
வல்ல - இறைவனிடம்...

கொடுக்கும் மாதமிது,
அதிகமதிகம் - கொடுத்திடுவோம்...
எடுத்திடுவோம் - எண்ணிலடங்கா
நன்மைகளை....

நாட்டிலே இன வெறியும்
இயற்கை அழிவும்!
நாடு கடந்து,
இருக்கும் பிரிவினைகள்
கெடுபிடியும் - நெரிசலிருந்து
கடுகதியாய் மாற்றும் - பெற
அல்லாஹ் அருள்புரிவானாக!

- எம்.ஏ.எம். இஸ்பஹான், சம்மாந்துறை

# ஆரோக்கியத்தின் ஆகாரம் நோன்புக் கஞ்சி



ரமழான் மாதம் முழுவதும் நோன்பிருப்பது இஸ்லாமியர்களின் கடமைகளுள் ஒன்று. அதிகாலை தொடங்கி மாலை வரை உண்ணாமல், நீர் அருந்தாமல், புகைக்காமல் இருப்பதுடன் வேறு தீய பழக்கங்களில் ஈடுபடாமல் இருப்பதே இந்த நோன்பின் சிறப்பு. காலை முதல் மாலை வரை எந்த உணவையும் உண்ணாமல் இருந்துவிட்டு, மாலையில் சூரியன் மறைந்த பிறகு, நோன்பு துறந்து உணவு உன்பதை வழக்கமாகக்கொண்டுள்ளனர். அப்படி காலையில் இருந்து மாலை வரை எந்த உணவும் உண்ணாமல் இருந்து, நோன்பு திறந்த பிறகு திட உணவுகளை உண்பதால், அது உடலுக்குச் சில தொந்தரவுகளைத் தர வாய்ப்பு உள்ளது. அதைத் தவிர்ப்பதற்காகவும், நோன்பிருப்பவர்கள் உடனடியாகப் புத்துணர்ச்சி பெறவும் உதவும் ஓர் அற்புதமான உணவே நோன்புக் கஞ்சி இதனால் உடலுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. இந்த நோன்புக் கஞ்சியை நோன்பு இருப்பவர்கள் மட்டுமின்றி, மற்றவர்களும் குடித்தால், அது உடலுக்கு பல்வேறு நன்மைகளைத் தரும்.

**நோன்புக் கஞ்சி**

நோன்பு இருப்பதால், நம் உடலில் உள்ள தேவையற்ற இரசாயனப் பொருள்கள் சுத்தப்படுத்தப்படும். நோன்பு ஆரம்பித்து முதல் இரண்டு நாள்கள் பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படும். மேலும், உடலில் நீர்வறட்சி ஏற்படும். இதைத் தவிர்க்க நோன்பு காலங்களில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய முக்கியமான உணவு நோன்புக்கஞ்சி. இது ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு பெயர்களில் அழைக்கப்படுகிறது. தமிழ்நாடு மற்றும் கேரளாவில் கஞ்சி என்று அழைக்கப்படுகிறது.

நோன்புக்கஞ்சியை சாப்பிட்டதும், நம் உடலில் நீர்வறட்சி சரியாகி உடல் சராசரி நிலைக்கு வந்துவிடும். மேலும், நாள் முழுவதும் நோன்பு இருப்பதால், உடல் சூடாகி விடும். நோன்புக் கஞ்சியில் இருக்கும் மசூர் பருப்பானது உடல் சூட்டைத் தணித்து குளிர்ச்சியைத் தருகிறது.

நாள் முழுவதும் உணவு உண்ணாமல் இருப்பதால், நம் வயிற்றுக்கு அரைக்கும் வேலை இருக்காது. அதனால் நாம் நோன்பு திறந்த பிறகு உடனடியாக முழுமையான திடப் பொருள்களை உண்ணும்போது, வயிற்றுத் தொந்தரவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே, நோன்புக் கஞ்சி போன்ற திரவ உணவை உட்கொண்டால், அது நன்றாக செரிமானமாகும். நோன்புக் கஞ்சி செய்வதற்கு பெரும்பாலும் பாசுமதி, பொன்னி போன்ற அரிசிகளே பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் உடலுக்குத் தேவையான கார்போஹைட்ரேட் கிடைக்கும். அதேபோல் பருப்பு, நெய் மற்றும் இறைச்சி வகைகளைச் சேர்ப்பதால், உடலுக்குத் தேவையான புரதச்சத்து கிடைக்கும்.

நோன்புக்கஞ்சி வயிற்றில் உள்ள கழிவுகளைச் சுத்தப்படுத்தும்; அல்சர் தொந்தரவுகளையும் சரி செய்யும். கஞ்சியில் சேர்க்கப்படும் கொத்தமல்லி, புதினா, மஞ்சள், வெங்காயம், வெள்ளைப்பூண்டு, தக்காளி ஆகியவை நம் வயிற்றை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவுகின்றன. எளிதில் செரிமானம் ஆக்கக்கூடிய எளிய வகை உணவு. இதில் நிறைந்துள்ள நார்ச்சத்து சிறந்த மலமிளக்கியாகச் செயல்படுகிறது. மலச்சிக்கலைத் தீர்க்கும். நோன்புக் கஞ்சியானது வயிறு நிறைந்த ஓர் உணர்வைத் தரக்கூடியது. அதற்கும் மேலாக உடலுக்குத் தேவையான அத்தனைச் சத்துகளையும் தரக்கூடியது. நோன்பு இருப்பவர்கள் மட்டுமின்றி அனைவரும் இதை உட்கொள்ளலாம். இது உடலுக்கு மிகுந்த ஆரோக்கியத்தைத் தரும் என்பதில் சந்தேகமில்லை.




# நம் உடலில் கண்டுகொள்ளப்படாத பகுதி..

நாமும் உடலில் உள்ள பல உறுப்புகளை பற்றி கவனம் செலுத்தி இருப்போம். செலுத்தி கொண்டும் இருக்கிறோம். ஆனாலும் பல வருஷமா நம்ம கூட இருந்தும் நாம் இந்த உறுப்பினை கண்டுகொள்ளவேயில்லை. அது வேறொன்றும் இல்லை அதுதான் நம்ம முதுகு. நேராக பார்க்க முடியாவிட்டாலும் நம்மை நேராக நடக்க வைக்கின்ற அங்கம் இது தான்.

பலர் மறந்து போன சிலர் பேசும் முதுகை பற்றி கொஞ்சம் பார்ப்போம்.

முதுகை எடுத்தோமானால் கரு உருவான 18 ஆம் நாளிலிருந்தே முதுகெலும்பும் முதுகுத்துண்டும் உருவாக ஆரம்பித்து விடும்.ஆரம்பத்தில் உருவான முதுகெலும்பு திறந்த படி இருக்கும். பின் 29 ஆவது நாள் தானாகவே அது மூடிக்கொள்ளும். அதன் நடு மையத்தில் மூளையின் தொடர்ச்சியான தண்டு வடம், இடுப்புப் பகுதி வரையில் நீண்டு இருக்கும்.

முதுகெலும்பு ஒன்றுடன் ஒன்றாக இணைக்கப்பட்ட 33 சிறு துண்டு எலும்புகளைக் கொண்டது. இதில்

முதல் 7 எலும்புகள் கழுத்துப் பகுதியிலும் (செர்வைக்கல்)

12 எலும்புகள் மார்புப் பகுதியிலும் (தொராசிக்)

5 எலும்புகள் இடுப்புப் பகுதியிலும் (லம்பார்)

5 எலும்புகள் ஒன்றோடு ஒன்று இணைந்த நிலையில் அடி முதுகு பகுதியிலும் (சேக்ரல்)


கடைசி 4 எலும்புகள் சேர்ந்து ஒரே எலும்பாய் முதுகின் அடிப்பகுதியிலும் (காக்சிஸ்) அமைந்து உள்ளது.

இவற்றில் கடைசி 9 எலும்புகள் அசைவற்றதாகவும் இதர 24 எலும்புகள் அசையக்கூடியதாகவும் இருக்கும். எலும்புகளுக்கிடையில் மெல்லிய சவ்வு போன்ற டிஸ்க் பகுதி அமைந்துள்ளது.

இந்த டிஸ்குகள் உடலில் ஏற்படும் அதிர்வை தாங்கிக்கொள்ள பயன்படுகிறது. முதுகெலும்பு நேராக இல்லாமல் சில வளைவுகளுடன் இருக்கும். முதுகெலும்பின் நடுவில் இருக்கும் தண்டுவடத்தில் இருந்து 31 ஜோடி நரம்புகள் முதுகெலும்புகளுக்கிடையில் உள்ள துவாரத்தின் வழியாக வெளியேறி உடலின் பல முக்கிய உறுப்புகளுக்கு சென்று செயற்பட வைக்கிறது.

## வரும் முன் காப்போம்

# மனித உயிருக்கு சவால் விடும் டெங்கு நுளம்பை ஒழிப்போம்



டெங்கு நுளம்பு தாக்கத்திலிருந்து நம்மை பாதுகாக்க சில வழிவகைகள்

முதலில் நீங்கள் குடியிருக்கும் வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.

குப்பை கூளங்களை அன்றாடம் அகற்றிவிடுங்கள் அல்லது எரித்துவிடுங்கள்.

டயர்கள், வெற்றுப்போத்தல்கள், தயிர் சட்டிகள், தகர டப்பாக்கள், யோகட் பிளாஸ்டிக் பொருட்கள், தேங்காய் சிரட்டைகள், இளநீர் கோம்பைகள், ஆகியவற்றை கண்ட இடங்களில் போடாதீர்கள்.

தண்ணீர் தொட்டிகள், குளிர்சாதனப்பெட்டிகள் நாள்தோறும் சுத்தம் செய்யுங்கள், தெருக்களிலோ, வடிகான்களிலோ, நீர்தேங்கி நிற்காதவாறு வழி செய்யுங்கள், உங்கள் கிணற்றை நுளம்புகள் நுழையாதவாறு மெல்லிய வலைகளால் மூடிவிடுங்கள். அதில் செல்லமீன், வெட்டுப்பலையான் போன்ற மீன்களைக்கிணற்று நீரில் விடுங்கள்.

டெங்கு நுளம்பின் தாக்கம் காலை , மாலை வேளைகளிலும் அதிகமாக காணப்படும். அப்போது குங்குலியப்பொடியைத்தணலில் போட்டு நன்றாக புகைவிடுங்கள், சாம்பிராணியையும் சேர்க்கலாம். வேண்டுமாயின் வேப்பம்விதை, வேப்பம் இலை அகில் கட்டை ஆகியவற்றையும் சேர்த்துப்புகை விடலாம் நுளம்புகள் தங்காது ஓடிவிடும். புற்தைலத்தை மண்ணெண்ணையுடன் கலந்து வீட்டு மூலைகளில் கட்டில் அடிப்பகுதியில் நன்றாக ஸ்பிரே செய்யுங்கள். இந்த வாடைகளை நுளம்புகள் அண்டவிடாது.

காய்ச்சல், தலைவலி, மூட்டுவலி, கண்நோவு, போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரசாங்க வைத்தியசாலையை நாடுங்கள். நோய் கண்டால் பெரஸ்ஸிட்டமொல் மாத்திரையை மாத்திரம் உபயோகியுங்கள், தேநீர், கோப்பி, குளிர்பானங்கள், சிவப்பு நிற தானியங்கள், பீட்ரூட் கிழங்கு கிரட்டை போன்றவற்றைத்தவிர்க்கவும்,தோடம்பழரசம், இளநீர், பால், கஞ்சி, ஜீவனி, நீராகாரம் உகந்த உணவு நம்நாட்டு சுதேச மருத்துவத்தில் டெங்கு ஜுரத்திற்கு கைகண்ட மருந்து சுக்கு, மல்லி, பற்பாடகம்,ஓமம், ஒவ்வொன்றும் வகைக்கு 15 கிராம், அதிமதுரம் 10 கிராம், மிளகு, வசம்பு, திப்பிலி, சிற்றரத்தை, வகைக்கு 5 கிராம், யாவற்றையும் சுத்தம் பார்த்து இடித்து 2 போத்தல் நீர் விட்டு சிறு தீயாக எரித்து 1 போத்தலுக்கு வற்றியதும் வடித்து 3 அவுன்ஸ் 3 நேரம் கொடுத்துவர காய்ச்சல் குறைந்து எலும்புவலி, மூட்டுவலி குறையும். டெங்கு நோயாளிகளுக்கு ஓய்வு அவசியம்.

**வைத்தியர் எஸ்.ரீ.ஆரிப்**
(R.A.M.P)
மட். மஞ்சந்தொடுவாய் தெற்கு
தொலைபேசி இல -
0775386757

# காதுக்குறும்பி ஆரோக்கியத்திற்கு சொல்லும் கதை என்ன?

காதுக் குறும்பி... இதை காதில் சேரும் அழுக்கு என்கிறார்கள். இது, வெறும் அழுக்கு அல்ல. நமது காதுகளுக்குள் பாக்டீரியா மற்றும் அழுக்குகள் சேர்ந்துவிடாமல் அவற்றை உடல் இயற்கையாக வெளித்தள்ளுவதுதான் காதுக்குறும்பியாக வெளிவருகிறது. காதைச் சுத்தமாக்குவதோடு, காது அரிப்பிலிருந்தும் இது நம்மைக் காக்கும். வியர்வை வெளியேற்றம், மனஅழுத்தம் போன்றவை காதில் உள்ள அழுக்கில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இவை வெளியேறும்போது, பெரும்பாலும் நாம் அதன் நிறத்தை கவனிப்பதில்லை. ஒருவிதமான அருவருப்போடு புறக்கணித்துவிடுவோம். ஆனால், நிறத்தை கவனிக்கவேண்டியது அவசியம். காது அழுக்கின் நிறங்கள் வைத்து உடலில் என்ன பிரச்சினை, காது சம்பந்தமான நோய்கள் ஏதாவது இருக்கிறதா என்பதை எப்படி கண்டறிவது என்பதை பார்ப்போம்.

**ஈரமான மஞ்சள்**

இது பொதுவாக அனைவரிடமும் காணப்படுகிற நிறம். இதனால் பாதிப்புகள் ஒன்றுமில்லை. இது, வறண்டுவிடாமலும், அரிப்பு ஏற்படாமலும் இருக்க உதவும்.

**சாம்பல்-** காது தன்னைச் சுத்தம் செய்துகொள்ளும்போது இது சாம்பல் நிறத்தில் இருக்கும். இதனால் பாதிப்புகள் ஏதுமில்லை. ஆனால் இது வறண்டுகாணப்பட்டு, அரிப்பும் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். அது சூஎக்ஸிமா (Eczema) என்ற தோல் நோயின் அறிகுறியாக இருக்கலாம்.

**வெளிர் மஞ்சள்-** இந்த வகை குழந்தைகளிடம் அதிகமாகக் காணப்படும். குழந்தைகளுக்குப் பெரியவர்களைவிட அதிகமாக இது சேரும். அவர்கள் வளர வளர இதன் அளவு குறையும்.

**பிசுபிசுப்பான அடர் மஞ்சள்-** அடர் மஞ்சள் நிறத்தில் பிசுபிசுப்பாக இருந்தால், உங்கள் உடல் அதிகமாக வியர்ப்பதாகப் பொருள். இது உடல் துர்நாற்றத்துக்கும் காரணமாக அமையலாம். மற்றபடி எந்தப் பாதிப்புகளும் இல்லை.



**தடித்த அடர் மஞ்சள்-** இது அடர் மஞ்சள் நிறத்தில் தடித்துக் காணப்படும். ஒரு பரப்பரப்பான சூழலில் நாம் பயத்தோடு இருக்கும்போதும் இந்த வகைக் குறும்பி அதிகமாகச் சுரக்கும். இது தற்காலிக காது கேளாமை பாதிப்பை ஏற்படுத்தும். உடனடியாக மருத்துவரை அணுகி சிகிச்சை பெற வேண்டும்.

**வறண்ட வெள்ளை-** வறண்ட வெள்ளை நிறத்தில் இருக்கும் காதுக் குறும்பியால் ஒரு பிரச்சினையும் இல்லை. இவர்கள் உடலில் துர்நாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் குறைவு.

**கறுப்பு அல்லது அடர் பழுப்பு-** இதில் அதிக நாள்கள் வெளியேறாமல் தங்கிவிடும்போது, இது கறுப்பு நிறமாக மாறிவிடும். இதனால் எந்த பாதிப்புகளும் இல்லை.

**நீர்போல வழிதல்-** செவி வழியாக நீர்போல வழிய ஆரம்பித்தால், உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். இது செவிப்பறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்பைக் குறிக்கும்.

இரத்தத்துடன் கூடிய காதுக்குரும்பி-செவிப்பறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் குறிக்கும். உடனடியாக சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**குடைதல்**
**என்ன செய்யலாம்?**

காதுக்குறும்பி சார்ந்த சில பிரச்சினைகளை சில வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமே தடுத்துவிட முடியும். அவை...காதில் அழுக்கின் நிறங்கள்

★ குளிக்கும்போது தண்ணீர், சோப், ஷாம்பூ ஆகியவற்றை செவிப்பறைக்கு அருகே கொண்டுசெல்வதைத் தடுக்கவும்.

★ எப்போதும் காதுகளை ஈரப்பதமின்றி வறண்டநிலையில் வைத்திருக்க வேண்டும்.

★ குளித்து முடித்தவுடன் துண்டின் நுனிப்பகுதியால், காதில் படிந்திருக்கும் தண்ணீரை நீக்கவும்.

★ காதிலுள்ள அழுக்கை நீக்கும் பஞ்சுக் குச்சிகளை (Ear cleaning buds) தேவையில்லாமல், அடிக்கடி பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். காதுகள் பாதிக்கப்படும் வாய்ப்புகள் உண்டு என்பதால்தான் மருத்துவர்கள் இதைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்துகிறார்கள். செவிகளில் சீழ் வடிதல், இரத்தம் வருதல், வித்தியாசமாக சத்தம் எழுதல், காது அடைப்பது போன்ற உணர்வு ஆகியவை இருந்தால் பஞ்சுக் குச்சிகளைத் தேடிப் போகாமல், மருத்துவரை அணுகுவதுதான் காதுகளுக்கு நல்லது.

***

# சூரியனை தொடும் முயற்சி



அமெரிக்காவின் விண்வெளி நிறுவனம் தனது சூரியனை தொடும் முயற்சிக்கு தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞானி ஒருவரின் பெயரை சூட்டியுள்ளது.

நாசாவின் 'சூரிய ஆய்வு முயற்சி' சூரிய காற்று குறித்து பல முன்னோடி ஆய்வுகளை நடத்தியுள்ள, யூஜின் பார்க்கர் என்ற இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் அறிவியலாளரின் பெயரை தாங்க உள்ளது.

சூரியனின் மேற்பரப்பிலிருந்து ஒரு ஓடை போல பாயும் மின்னூட்டம் பொதிந்த துகள்கள்தான் சூரியக் காற்று என்று அழைக்கப்படுகின்றன.

சூரியனின் மேற்பரப்பிலிருந்து, சுமார் நான்கு மில்லியன் மைல்களுக்குள் இந்த விண்கலம் பயணிக்கும். இந்த பயணத்தின் போது சுமார் 2,500 செல்சியஸ் வெப்பத்தை விண்கலம் எதிர்கொள்ளும்.

2018 ஆம் ஆண்டில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட உள்ளது.

''ஆராய்ச்சியாளர் ஒருவரின் வாழ்நாள் காலத்தில் இதுபோன்ற பெயரை இதுவரை நாசா சூட்டியது கிடையாது.'' என்று நாசாவின் அறிவியல் பணி இயக்குநர் தாமஸ் ஸர்புச்சேன் தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றம், பேராசிரியர் பார்க்கரின் 90ஆவது பிறந்தநாள் வருவதற்கு சில தினங்களுக்குமுன் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, சூரிய ஆய்வு விண்கலம் தற்போது பார்க்கர் சூரிய ஆய்வு விண்கலம் என அறியப்படுகிறது.

இந்த முயற்சி முதலில் 2009இல் அறிவிக்கப்பட்டது. தற்போது, அடுத்த ஆண்டு ப்ளோரிடாவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து டெல்டா 4 ஹெவி ரொக்கெட்டால் விண்கலம் ஏவப்பட உள்ளது.

''சூரியனுக்கு மீச் மிகச்சிறந்த, கவர்ச்சியான பணி இது என கூற விரும்புகிறேன்'' என்று நாசா விஞ்ஞானி நிகோலாபாக்ஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

சூரியனின் வளிமண்டலத்தின் ஒரு பகுதி வழியாக இந்த விண்கலம் பயணிக்கும். இதுவரை மனிதன் தயாரித்த தயாரிப்புகளிலே சூரியனின் மேற்பரப்பிற்கு மிக நெருக்கத்தில் செல்லும் விண்கலம் இது வாகும்.

'கோரோனா' எனப்படும் சூரியனின் வளிமண்டலத்தின் மேல் அடுக்கு குறித்து தெளிவான புரிதல் வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த முயற்சி செய்யப்படுகிறது.




# விவசாயத்துக்கு உதவும் ரோபோ

விவசாயத் துறையில் விதைத்தல், அறுவடை செய்தல் போன்ற பல வேலைகளுக்கு தானியங்கி ரோபோக்களை மேற்கு நாடுகளில் விற்க ஆரம்பித்து விட்டனர். இந்த நிலையில், வீடுகளில் தோட்டம் வைத்திருப்பவர்களுக்கு, மிகப் பெரிய தலைவலியாக இருக்கும் களை எடுத்தல் வேலையை செய்ய வந்திருக்கிறது, 'டெர்ட்டில்'

அமெரிக்காவிலுள்ள பிராங்ளின் ரோபாடிக்ஸ் இதை தயாரித்திருக்கிறது. வீட்டுத் தோட்டத்தில் இந்த இரு சக்கர ரோபோவை விட்டு விட்டால், அதுவே, களைகளை வெட்டி சாய்த்துவிடும். தக்காளி, மிளகாய், பூச் செடிகளை அது ஒன்றும் செய்யாது. செடிகளை விட்டு, களைகளை மட்டும் வெட்டும்படி டெர்ட்டில் ரோபோவில் இருக்கும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளும், உணரிகளும் பார்த்துக்கொள்கின்றன.



அதேபோல, தோட்டப் பகுதியை விட்டு இந்த ரோபோ தவறுதலாக வேறுபக்கமும் போகாது. சூரிய ஒளித் தகடுகள் பொருத்தியிருப்பதால், இதற்கு மின் தேவையும் இல்லை. 2017 இறுதியில் சந்தைக்கு வரவிருக்கும், 18,000 ரூபாய் மதிப்புள்ள டெர்ட்டில் ரோபோவுக்கு இப்போதே ஓடர்கள் குவிய ஆரம்பித்துள்ளன.

# தேசிய விலங்குகள் அழியும் ஆபத்து



உலக நாடுகளின் தேசிய விலங்குகளில், 35 சதவீத விலங்குகள் அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக அண்மையில் வெளியாகிய ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

தங்கள் நாட்டுக்கென, சிறப்பு அடையாளத்தைத் தரக்கூடிய விலங்குகளை தான், தேசிய விலங்குகளாக பல நாடுகள் அறிவிக்கின்றன. ஆனால், உலக நாடுகளின் தேசிய விலங்குகளில், 35 சதவீத விலங்குகள் அழியும் ஆபத்தில் இருக்கின்றன. அமெரிக்காவிலுள்ள மயாமி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட உலகளாவிய ஆய்வின்படி, நாடுகளின் தேசிய விலங்குகள் பட்டியலில் உள்ள விலங்குகளில், 16 சதவீத விலங்களுக்கே, உரிய பாதுகாப்புகள் தரப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

# அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களின் உடைமைகள் தொடர்பில் மதிப்பிடும் பணிகளை துரிதப்படுத்துக

## அமைச்சர் ஹக்கீம் பணிப்புரை





(ஜெம்சாத் இக்பால்)

சீரற்ற கால நிலை காரணமாக திடீரென ஏற்பட்ட வெள்ளம் வடிந்து, மக்கள் தமது வீடுகளில் மீளக்குடியமர்ந்து வரும் இவ் வேளையில், அவர்களின் வீடுகள் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பாக மதிப்பிடும் பணிகளைத் துரிதப்படுத்துமாறும், அவற்றை மேற்கொள்வதற்கான அதிகாரிகளின் பற்றாக்குறை இருப்பின் ஏனைய பகுதிகளிலுள்ள துறைசார் அதிகாரிகள் மூலமாவது இந்நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரஊப் ஹக்கீம் பணிப்புரை விடுத்தார்.

களுத்துறை மாவட்ட செயலகத்தில் இப்பிரதேச அனர்த்த நிவாரணப் பணிகளுக்கு இணைப்பாளர்களாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களான ரஊப் ஹக்கீம் மற்றும் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் தலைமையில் நேற்றைய தினம் நடைபெற்ற அனர்த்த நிவாரண மற்றும் மீளக்கட்டியமைக்கும் பணிகளின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்திலேயே அமைச்சர் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் வாழ்க்கையில் சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கு தேவையான சுத்திகரித்தல், இழந்த உடைமைகளுக்கு இழப்பீடு வழங்குதல், பாதிப்புக்குள்ளான மக்கள் மத்தியில் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவாது தடுத்தல் முதலான விடயங்கள் தொடர்பில் இக்கூட்டத்தின் போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. நிவாரணப் பணிகள், சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் இழப்பீடு வழங்கல் நடவடிக்கைகளின் நிலைமை தொடர்பாக நிலைமையைக் கேட்டறிந்த பின்னர் அமைச்சர் ஹக்கீம் அங்கு உரையாற்றும்போது,

இழப்பீடு வழங்கப்படும் நடவடிக்கைகளை விரைவுபடுத்த வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு என்பவற்றின் அதிகாரிகளுடனான அமர்வொன்றை விரைவில் நடாத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமெனவும், இப்பிரதேசத்திலுள்ள நகர சபை மற்றும் பிரதேச சபை கிராம அலுவலர்கள் ஆகியோர் அனர்த்த நிவாரண பணிகளில் ஈடுபடும் போது அவர்களுக்குரிய விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு தனியானதொரு அமர்வை ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் அமைச்சர் கூறினார்.

இதுவரை நிறைவு பெற்றுள்ள மீளக்கட்டியமைக்கும் மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்பாக ஆராயப்பட்டபோது, கிணறுகளைச் சுத்திகரித்து குளோரின் இடல், பாதைகளை சுத்திகரித்தல், வீடுகள் மற்றும் கடைகள் முதலானவற்றை சுத்திகரித்தல் போன்ற பணிகளில் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்களும் மிகச் சிறப்பாக ஈடுபட்டு வருவதாக களுத்துறை பிரதேச செயலாளர் குறிப்பிட்டார்.

அத்துடன், குடிநீர் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளில் தற்காலிக நீர் தாங்கிகளை வைத்தும், நீர் போத்தல்களை வழங்கியும் மக்களின் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதாக அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

பாதிப்புக்குள்ளான சகல பகுதிகளிலும் அனர்த்தத்திற்கு உள்ளான குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கும் நடவடிக்கைகள் பிரதேச கிராம அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. டெங்கு முதலான தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக குட்டைகளில் தேங்கியுள்ள அசுத்தமான நீரை அகற்றுதல், கிணறுகள் சுத்திகரித்தல் முதலான பணிகளை சிவில் பாதுகாப்பு படையினரும், பிரதேச சுகாதார திணைக்களமும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வெள்ள நிவாரண செயலணியும் ஒன்றிணைந்து மிக வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி குறிப்பிட்டார்.

களுத்துறை தேர்தல் தொகுதியில் பாதிப்புக்குள்ளான மக்கள் தொகை 11850 ஆகும். அனர்த்தத்துக்குள்ளான 317 வீடுகளுள் முற்றாக சேதமடைந்த 18 வீடுகளும், ஓரளவு சேதத்திற்குள்ளான 265 வீடுகளும் காணப்படுகின்றன. 113 வர்த்தக நிலையங்கள் மற்றும் நான்கு வழிபாட்டுத்தலங்களும் சேதங்களுக்குள்ளாகியுள்ளன. இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில் மாவட்டச் செயலாளர் யு.டீ.சி.ஜயலால், களுத்துறை பிரதேச செயலாளர் துவனி சமரதுங்க உள்ளிட்ட களுத்துறை நகர சபை மற்றும் பிரதேச சபை, சுகாதார திணைக்களம், பொலிஸ் திணைக்களம், டெங்கு ஒழிப்பு செயலணி அனர்த்த நிவாரண செயலணி என்பவற்றின் உயரதிகாரிகளும் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களைச் சேர்ந்த கிராம சேவை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

# சகல பாடசாலைகளிலும் உள்ள மௌலவி ஆசிரியர் வெற்றிடங்களையும் நிரப்புக

## முன்னாள் அமைச்சர் அஸ்வர் வேண்டுகோள்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

குறைவாக நிறைக்காது நாட்டின் சகல பாடசாலைகளிலும் உள்ள மௌலவி, மௌலவியா வெற்றிடங்களுக்கும் மௌலவி ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் முஸ்லிம் விவகார அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ. எச்.எம். அஸ்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மௌலவி ஆசிரியர்களின் நியமனம் தொடர்பாக நவமணியில் வெளிவந்துள்ள செய்தியைச் சுட்டிக் காட்டியே அவர் இந்த வேண்டுகோளைவிடுத்துள்ளார்.

மேலும் அதில் தெரிவித்திருப்பதாவது,

சமய பாடம் போதிக்கும் ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அதில் 676 மௌலவி ஆசிரியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதாகவும் நவமணியில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதைவிடப் பல மடங்கு கூடிய எண்ணிக்கையில்தான் மௌலவி, மௌலவியாக்களின் வெற்றிடங்கள் இலங்கையின் அனைத்து பாடசாலைகளிலும் காணப்படுகின்றன.

எனவே குறைவாக நிறைக்காது சகல பாடசாலைகளிலும் உள்ள மௌலவி, மௌலவியா வெற்றிடங்களின் புள்ளிவிபரங்களை சரியாகக் கணிப்பிட்டு, சரியாகக் கவனத்தில் எடுத்து அனைத்து மௌலவி ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகின்றோம்.

2008ஆம் ஆண்டுதான் இறுதியாக மஹிந்த ராஜபக்ஷ மௌலவி ஆசிரியர்களை நியமித்தார் என்பதையும் அலரி மாளிகையில் நடைபெற்ற முஸ்லிம் கல்வி மாநாட்டு குழுவோடு நடத்திய பேச்சுவார்த்தையின் இறுதியில் இந்த முடிவு எடுக்கப்பட்டு மௌலவி ஆசியர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் - என்றும் அந்த வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

# மூதூர் சிவில் அமைப்புக்களினால் அமைதி பேரணி






(மூதூர் முறாசில்)

மூதூரில் சிவில் அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் பேரணியொன்று நேற்று இடம்பெற்றது.

மூதூர் பெருவெளியில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுமிகளுக்கு உரிய நியாயம் கிடைக்க வேண்டுமெனவும் உண்மையான குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட வேண்டுமெனவும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கொச்சைப்படுத்தும் செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தே இப்பேரணி இடம்பெற்றது. மூதூர் அக்கரைச் சேனை பெரிய பள்ளிவாசலுக்கு அண்மையாக ஆரம்பித்த இப்பேரணி மூதூர் பிரதேச செயலகம் வரை இடம்பெற்றது. இப்பேரணியில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வரும் கலந்து கொண்டார்.

பேரணி முடிவில் மூதூர்- தோப்பூர் அமைப்புக்களின் ஒன்றியத்தினால் கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைப்பதற்கென மூதூர் பிரதேச செயலாளரிடம் மஹஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.





கல்முனை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு நேற்றுமுன்தினம் பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் எம்.எச்.முகம்மட் கனி தலைமையில் நடைபெற்றது. இங்கு அஷ்செய்க் எம்.ஐ.ஹுசைனுதீன் றியாழி விஷேட உரையாற்றினார்.
(படங்கள்- மருதமுனை நிருபர்)

# முஸ்தபாவின் மறைவு விளையாட்டு வீரர்களை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது

## அமைச்சர் ஹக்கீம் அனுதாபம்

அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரியின் ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளரும் பிரபல விளையாட்டு வீரரும் இலங்கைச் சாரணிய அமைப்பில் பல்வேறு பதவிநிலைகளை வகித்தவருமான எம்.ஐ.எம்.முஸ்தபா காலமான செய்தி கேட்டு தான் மிகவும் அதிர்ச்சி அடைந்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர அபிவிருத்தி நீர் வழங்கல் அமைச்சருமான ரஊப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உதைப்பந்தாட்ட பயிற்சியாளராகவும், மாணவர்களின் மெய்வல்லுனர் விளையாட்டுக்களில் பயிற்சியாளராகவும், மிகப்பரந்த அளவில் சேவையாற்றியுள்ள அன்னாரின் இழப்பு நாடெங்கிலும் உள்ள விளையாட்டு வீரர்களையும் விளையாட்டு பிரியர்களையும் கடும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

தலைவர் அஷ்ரப் அவர்களின் பாடசாலைத் தோழரான இவர் அவருடன் சேர்ந்து கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் மாணவர் கையெழுத்து சஞ்சிகையை வெளியிடுவதற்கு மிகவும் பாடுபட்டார். அத்துடன் அக்கல்லூரியில் தலைவர் அஷ்ரப் மாணவராக இருந்த போது உருவாக்கிய கலை எழுச்சிக் கட்சியில் முக்கிய பதவி நிலை உறுப்பினராகவும் இருந்து செயற்பட்டுள்ளார். விளையாட்டுத்துறையின் சிறந்த ஊடகவியலாளராகவும் விசேடமாக விளையாட்டுத்துறை எழுத்தாளராகவும் இவர் நீண்டகாலம் பணியாற்றியுள்ளார். பொதுவான ஊடகவியல் செயற்பாட்டிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார். அன்னாரின் இழப்பினால் துயருறும் அவரின் குடும்பத்தாரினதும், விளையாட்டு பிரியர்களினதும், கல்விமான்களினதும் துயரில் தானும் பங்கு கொள்வதோடு அவரின் ஆன்மீக ஈடேற்றத்திற்கு பிரார்த்திப்பதாகவும் அமைச்சர் ரஊப் ஹக்கீம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# கண்டி அல்ஹிக்மாவில் பல்கலைக்கு 10 மாணவிகள் தெரிவு

(எச்.எம்.மன்சூர்- கண்டி)

2017 ஆம் ஆண்டுக்கான பல்கலைக் கழக அனுமதிக்கு இம்முறை கண்டி கும்புக்கந்துறை அல்ஹிக்மா முஸ்லிம் பாடசாலையில் பத்து மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பாடசாலை வரலாற்றில் அதிகமான மாணவர்கள் தெரிவாகி சாதனை படைத்துள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு ஷம்ரா அன்சார்,இல்மா ஹகீம், நஷ்பா ரம்சான் ஆகிய மூன்று மாணவிகளும், கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு ரஸ்னா ரகீப், பஸ்லா பவாஸ் ஆகிய இரு மாணவிகளும்,தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு முஷ்ரிபா ரபீக்,றிப்ரா முத்தலிப், இஹுஷா பாருக்,நஸ்கா முஹாஜிரீன்,ஷிபாரா நதீர் ஆகிய ஐந்து மாணவிகளும் தெரிவாகியுள்ளனர். நிர்வாகத் திறமைமிக்க ஜனாப்.எப்.எம். ரஷாத்( நளீமி) அவர்கள் அதிபராக கடமையாற்றிய சில வருடங்களில் இப்பாடசாலை பல்வேறு துறைகளில் சாதனைகள் நிலைநாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலையின் முன்னேற்றத்தில் பழைய மாணவர்களின் பங்கு அளப்பரியது

## அல்ஹுமைஸரா அதிபர் றிஸ்கி

(பேருவளை பீ.எம்.முக்தார்)

ஒரு பாடசாலையின் முன்னேற்றத்தில் பழைய மாணவர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். பாடசாலைகளில் நிலவும் முக்கிய குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கத்தில் அங்கம் வகிப்பதன் மூலம் பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யலாம். அந்தவகையில் பேருவளை சீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை 1990 ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் ஒரு முன் மாதிரியான பணியை தாம் கற்ற பாடசாலைக்குச் செய்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதாகும் என அதிபர் எம். ஆர். எம். றிஸ்கி கூறினார்.

1990 இல் க.பொ.த. சாதாரணதரத்தில் கல்வி கற்று பழைய மாணவர்கள் மேற்படி பாடசாலைக்கு மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான சி.சி.ரீவி கமரா உபகரண தொகுதியை கையளிக்கும் வைபவத்தில் பேசும் போது இவ்வாறு கூறினார்.

சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசியப்பாடசாலை அடுத்த வருடம் 2018 இல் நூற்றாண்டு விழாவை கோலாகலமாக கொண்டாடவுள்ளது. இதன் ஓர் அங்கமாகவே மேற்படி பழைய மாணவர்கள் இதனை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

அதிபர் மேலும் கூறியதாவது, நாட்டுக்கும் சமூகத்துக்கும் பெருமளவிலான புத்திஜீவிகளை உருவாக்கிய ஒரு பாடசாலையாக எமது பாடசாலை திகழ்கிறது. பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பள்ளிச்சங்கம் உட்பட சமூக நல அமைப்புக்கள் விளையாட்டுக்கழகங்கள் பழைய மாணவர்கள், அரசியல்வாதிகள் மிகவும் ஒற்றுமையாக இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளனர். 2018 இல் நூற்றாண்டு விழாவை கொண்டாடவுள்ள நிலையில் எமது பாடசாலைகளில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன என்றார்.

அஷ்ஷெய்க் மக்கி மக்சூர் ஆலிம் லாபிர் மதனி ஹாரிஸ், அஸ்வர் வபா பர்ஹான், ஸம்ஸுதீன், ஹில்மி, காஸிம், மஸூத் ஸலீம் ஆகியோர் உபகரண தொகுதியை அதிபரிடம் கையளித்தார்.

# அதிபர் அனிஸாவுக்காக பிரார்த்திக்க வேண்டுகோள்

கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் அனிஸா யாக்கூப் கடும் சுகயீனமுற்ற நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் தீவிரமாக குணமடையவும் அவரது தேக நலனுக்காகவும் பிரார்த்திக்குமாறு கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# வயோதிபத் தம்பதியரின் குடிசை எரிந்து நாசம்





(ஹொரவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

ஹொரவூர். தாமரைக்கேணி கிராமத்தில் வயோதிபத் தம்பதியினர் வசித்து வந்த குடிசை மின்னொழுக்கினால் எரிந்து சாம்பலாகியுள்ளதாக ஹொரவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுப்பகல் இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் குடிசையிலிருந்து அத்தனை உடைமைகளும் முற்றாக எரிந்துள்ளதாக குடிசையில் வாழ்ந்து வந்த மீராமுஹைதீன் பாத்துமுத்து எனும் வயோதிபத் தம்பதியர் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் குடிசையை விட்டு வெளியே நின்றிருந்த சமயம் தீப்பற்றிக் கொண்டதால் அதிர்ஷ்டவசமாக எவருக்கும் உயிராபத்துக்களோ காயங்களோ ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம்பற்றி ஹொரவூர் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# இணைந்த வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்து வேண்டும்



## கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் எம்.எஸ். உதுமாலெப்பை

நேர்காணல்:
ஏ. முஹம்மத் பாயிஸ்
இஸட். ஏ. றஹ்மான்

கிழக்கு மாகாணம் பிரிந்திருக்க வேண்டும் என்பதில் தேசிய காங்கிரஸ் தெளிவாகவுள்ளது. அவ்வாறு இரண்டு மாகாணங்களும் இணைந்திருக்க வேண்டுமென்றால் இணைந்த மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். அவ்வாறான நிலைப்பாட்டுக்கு தமிழ்த்தரப்பு வருகின்றபோது அது சம்பந்தமாக கலந்துரையாட முடியும் என கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் தேசிய காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார். அவருடனான நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

**கேள்வி:** கிழக்கு மாகாணம் பல்வகைத்தன்மை கொண்ட மாகாணமாகும். இம் மாகாணத்தின் ஆட்சியமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் எனக் கருதுகிறீர்கள்?

**பதில்:** வடகிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த காலத்தில் கிழக்கில் மூன்று இனங்கள் மத்தியிலும் இன ஒற்றுமைக்கான சூழ்நிலை இல்லாதிருந்தது. தனியாகப் பிரிந்து மாகாண சபை உருவானபோது மூன்று இன மக்களும் பங்குகொள்ளும் வகையில் நமக்கான அதிகாரங்கள், அமைச்சுக்கள் மற்றும் அதற்கான அதிகாரிகள் என உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோன்றுதான் மூன்று இன மக்களுக்கும் ஏற்ற வகையில் இந்த மாகாணசபை அமைய வேண்டும்.

முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக பயணித்தாலும், தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து உச்சத்துக்குச் சென்றிருந்தாலும், சிங்கள மக்கள் அமைச்சர்கள் தொடக்கம் ஜனாதிபதி வரை அரசியல் அதிகாரத்தை வைத்திருந்தாலும் இன ஒற்றுமை இல்லாமல் சமாதானமாக வாழ முடியாது என்பதை கடந்த மூன்று தசாப்தகாலமாக அனுபவித்திருக்கிறோம்.

கிழக்கு மாகாணத்தில் ஒரு சமூகம் இன்னொரு சமூகத்திலே தங்கி வாழும் நிலை காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவர் முதலமைச்சராவதற்கு ஏனைய சமூகங்கள் ஆதரவளித்திருக்கிறது. முஸ்லிம் ஒருவரை ஏனைய சமூகங்கள் ஆதரவளித்து முதலமைச்சராக்கியிருக்கிறது. அதேபோன்று மூன்று இனத்தவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய யாராக இருந்தாலும், ஒரு சிங்களவராக இருந்தாலும் முதலமைச்சராக வரமுடியும். மூவினங்களினதும் உணர்வுகளை மதித்து ஆளக்கூடிய ஓர் ஆட்சியமைமைப்புத்தான் கிழக்கு மாகாணத்திற்கு அவசியமாகும்.

**கேள்வி:** யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை கட்டியெழுப்புவதில் கிழக்கு மாகாண சபையின் பங்களிப்பு எவ்வாறுள்ளது?

**பதில்:** தற்போதைய கிழக்கு மாகாண சபையில் அபிவிருத்தி நடைபெறுவதாக காட்டிக் கொண்டாலும் பெரிதளவு ஒன்றுமில்லை. இந்த வருட மாகாண சபையின் நிதியில் கூட மூன்றில் ஒரு பகுதிதான் செலவு செய்ய நிதி கிடைக்கப் பெற்றிருக்கிறது. கிழக்கு மாகாண சபையின் கல்வியமைச்சுக்கு 1090 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டுக்கு 190 மில்லியன் ரூபாவே தற்போது கிடைத்துள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றிருக்கிறது. இவ்வாறு பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாத ஒரு சபையாகத்தான் கிழக்கு மாகாண சபையைப் பார்க்க வேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அபிவிருத்திப் பணியில் 30 வருடத் தேவையுடைய மாகாணமாகும். இந்த ஆட்சியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு, பொருளாதார அபிவிருத்திகளை வேகமாகச் செய்ய வேண்டிய ஒரு மாகாணத்திலே அபிவிருத்திப் பணிகள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே சென்று கொண்டிருக்கின்றன.

**கேள்வி:** அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பிரதேசத்தில் தலைதூக்கியுள்ள மாயக்கல்லி சிலை விவகாரம் தொடர்பில் உங்களது கருத்து என்ன?

**பதில்:** கடந்த 2016.10.29 ஆம் திகதி திடீரென வெளிமாவட்டத்திலிருந்து வந்த சிலரும், கிழக்கு மாகாணத்திலுள்ள ஐ.தே.க. அமைச்சரொருவரின் ஆதரவாளர்களும், இனவாதிகள் சிலரும் இணைந்து யாருடனும் எந்த விதமான கலந்துரையாடல்களும் செய்யாமல் இறக்காமம், மாணிக்கமடு பிரதேசத்தில் பௌத்த சிலை ஒன்றை வைத்துள்ளனர்.

இறக்காமத்தில் என்பது முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்வதுடன் மாணிக்கமடு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் கணிசமாக வாழ்கின்ற பிரதேசம். மாணிக்கமடுவின் மாயாக்கல்லி மலையை சுற்றி 400 ஏக்கர் வயற்காணிகள் முஸ்லிம்களுக்குச் சொந்தமாகவுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்களும் அங்கு வாழ்கின்றன. இந்த பிரதேசங்களில் பௌத்த மதத்தைச் சேர்ந்த எந்தவொரு சிங்களவரும் வாழவில்லை. ஆனால் புத்த சிலை ஒன்றை வைத்துள்ளார்கள்.

இறக்காமம் மக்கள் ஏனைய இனமக்களோடு ஒற்றுமையாக வாழ்கின்றவர்கள். கடந்த யுத்த காலத்திலும் கூட இனங்களுக்கிடையே முரண்பாடு ஏற்படாது ஏனைய பிரதேசங்களுக்கு முன்மாதிரியாக இருந்த கிராமம். இந்த விவகாரம் முழு அம்பாறை மாவட்டத்திலும் ஒற்றுமையாக வாழ்கின்ற மூவினங்களிடையேயும் முரண்பாட்டை ஏற்படுத்தக் கூடும். அதுமட்டுமல்ல மாயக்கல்லி மலை தொல்பொருள் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்ற நிலையில் இந்த சிலை வைப்பும் பௌத்த விகாரை கட்டும் முயற்சியும் முன்னெடுக்கப்படுகிறது. ஆனால் தொல்பொருள் பிரதேசத்தில் வணக்கஸ்தலம் கட்ட அனுமதிக்கப்படுவதில்லை. இது சட்டவரையறைகளையும், ஏனைய இனங்களினது உணர்வுகளையும் மீறி மேற்கொள்ளப்படும் அத்துமீறிய முயற்சியாகும்.

இந்த சிலை வைப்போடு சேர்த்து அம் மாயக்கல்லி மலையை அண்டியுள்ள முஸ்லிம்களின் காணிகளையும் அதற்குள் சுவீகரித்துக் கொள்ளும் மறைமுகமான முயற்சியாக இது காணப்படுகிறது. இது முஸ்லிம் சமூகத்துக்கு வேதனைக்குரிய சம்பவமாகும்.

**கேள்வி:** அம்பாறை மாவட்டத்தில் நிறைய காணிப்பிரச்சினைகள் நிலவுகின்றன. இதனைத் தீர்ப்பதற்கு உங்களது ஆலோசனை என்ன?

**பதில்:** அம்பாறை மாவட்டத்தில் அஷ்ரப் நகர், பொத்துவில், வட்டமடு என இம் மாவட்டத்தில் நிறையப் பிரதேசங்களில் காணிப் பிரச்சினையுள்ளது. குறிப்பாக வட்டமடு என்பது வரலாற்று ரீதியாக முஸ்லிம்களும் தமிழர்களும் ஐக்கியமாக வாழ்ந்த பிரதேசம்.

கால்நடை வளர்ப்பிலும், விவசாயத்திலும் முஸ்லிம்-தமிழ் மக்கள் ஈடுபடுகின்றனர். இந்த வட்டமடு காணிகளை தமிழ்-முஸ்லிம் மக்கள் பேச்சுவார்த்தை மூலம் பகிர்ந்து கொள்ள முடியாமல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருப்பதால் பெரும்பான்மையினர் இரு சமூகங்களையும் மோதவிட்டு காணிகளை அவர்கள் கையகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று பொத்துவில் பிரதேசத்தில் 500 ஏக்கர் முஸ்லிம்கள் விவசாயம் செய்து வந்த காணி இன்னும் அதனுடைய சொந்தக்காரர்களுக்கு வழங்கப்படவில்லை. யுத்தத்தின் பின்னர் நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளுள் இந்த காணிப் பிரச்சினையும் முக்கியமானதாகும். காணிகள் தொடர்பில் முஸ்லிம் சமூகம் பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகின்ற சந்தர்ப்பத்தில் இருக்கின்ற காணிகளையும் இழக்கும் துரதிஷ்டமான நிலைமையும் காணப்படுகின்றது.

**கேள்வி:** அம்பாறை மாவட்டத்தில் நுரைச்சோலை வீட்டுத் திட்டம் மிக நீண்டகாலமாக மக்களிடம் கையளிக்கப்படாமல் உள்ளது. இதற்கு என்ன காரணம் என்று விளக்க முடியுமா?

பதில்: நுரைச்சோலை என்பது அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட காணியாகும். இக் காணி தீகவாபி புனிதப் பிரதேசத்துக்குட்பட்டதாகவும், அதற்குள் சவூதி அரசாங்கத்தின் உதவியுடன் வீடுகளை நிர்மாணித்து முஸ்லிம்களை குடியேற்றத் திட்டமிடுகிறார்கள் என்ற பொய்ப் பிரசாரத்தை ஏற்படுத்தியதன் விளைவாக அதனையொட்டி நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்பட்டதும் இவ்வளவு காலம் இவ்வீடுகள் மக்களிடம் கையளிக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதற்கமான காரணங்களாகும். தீகவாபி அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசமாகும். இது நிறையப்பேருக்கு தெளிவில்லாமல், விடயம் திரிவுபடுத்தப்படுகின்றது.

நுரைச்சோலைக் காணிகள், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட காணியற்ற மக்களை எதிர்காலத்தில் குடியேற்றுவதற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட காணியாகும்.

இங்கு நிறுவப்பட்ட 500 வீடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென்றே நிர்மாணிக்கப்பட்டன. கடந்த காலத்தில் சரத் என். சில்வா தலைமையிலான உயர் நீதியரசர் குழு இந் நுரைச்சோலை வீட்டுத் திட்டத்தை சுனாமியால் பாதிக்கப்பட்ட 325 குடும்பங்களுக்கும் ஏனையவைகளை சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் பிரித்து வழங்குமாறு தீர்ப்பளித்தது. இந்த நீதிமன்ற தீர்ப்பு விடயம் தொடர்பாகவும் நாம் கவனத்திலெடுக்க வேண்டியுள்ளது. ஆனால் இங்குள்ள பிரச்சினை வீடல்ல காணி யாருக்கு என்பதுதான் பிரச்சினையாகும். இதற்கு முதலில் தீர்வு காண வேண்டும்.

**கேள்வி:** இனப் பிரச்சினைக்கு தீர்வாக தமிழ் அரசியல் தரப்பிலிருந்து வடகிழக்கு இணைப்பை தமக்கான தீர்வாக முன்வைத்துள்ளார்கள். இந்நிலையில் இந்த வடகிழக்கு இணைப்பு தொடர்பாக தேசிய காங்கிரஸின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** வடகிழக்கு மாகாணம் இணைந்திருந்த போது முஸ்லிம் சமூகத்துக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டது. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு கடந்த அரசாங்கத்தில் எமது கட்சியின் தலைவர் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா அவர்கள் இரண்டு மாகாணங்களும் பிரிந்திருக்க வேண்டும் என்று குரல் கொடுத்தார். இந்நிலையில் ஜே.வி.பி. நீதிமன்றத்தில் வடகிழக்கு பிரிக்கப்பட வேண்டும் என்று வழக்குத்தாக்கல் செய்ததன் பிரகாரம் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இரண்டு மாகாணங்களும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன.

உண்மையில் கிழக்கு மாகாணம் பிரிந்திருக்க வேண்டும் என்பதில் தேசிய காங்கிரஸ் தெளிவாகவுள்ளது.

அவ்வாறு இரண்டு மாகாணங்களும் இணைந்திருக்க வேண்டுமென்றால் இணைந்த மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். அவ்வாறான நிலைப்பாட்டுக்கு தமிழ்த்தரப்பு வருகின்றபோது அது சம்பந்தமாக கலந்துரையாட முடியும்.

# முஸ்தபா எனும் ஆளுமை

எஸ்.எம்.அறூஸ்
அட்டாளைச்சேனை

கல்முனையைச் சேர்ந்த அட்டாளைச்சேனை தேசிய கல்விக்கல்லூரியின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளரும்,முன்னாள் மாவட்ட சாரண ஆணையாளருமான எம்.ஐ.எம் முஸ்தபா காலமானார்.இன்னாலில்லாஹி வயின்னா இலைஹி ராஜிஊன்.

பல்வேறு ஆளுமைகளைக் கொண்டிருந்த மர்ஹூம் எம்.ஐ.எம்.முஸ்தபா ஆசிரியர், விளையாட்டு வீரராக, போட்டி நடுவராக, ஆசிரியராக, விரிவுரையாளராக, சாரண ஆணையாளராக, சிரேஸ்ட ஊடகவியலாளராக, விளையாட்டுத்துறை ஆலோசகராக கடமை புரிந்தவர்.

தனது நீண்ட கால பணிகளுக்காக தேசிய விருதுகள் பலவற்றையும் பெற்றிருந்த முஸ்தபா ஆசிரியர், பெருமையில்லாத மனிதராவார். கிழக்கு மாகாணத்தின் விளையாட்டுத்துறை அடையாளமாக இவரைப் பார்க்கலாம். அந்த அளவிற்கு தேசியத்தில் இந்த மாகாணத்தின் பெயரைத் பதியவைத்தவர். எல்லோருடனும் அன்பாகப் பழகும் முஸ்தபா ஆசிரியர் காலமான செய்தி கேட்டு பலரும் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளதுடன் அவருக்காக பிரார்த்தனையும் செய்துள்ளனர்.

இலங்கை வானொலி வர்த்தக சேவையின் ( தென்றல்) விளையாட்டரங்கில் இவர் எழுதிய தொடர் கட்டுரைகள் என் போன்ற பலரையும் அவரது ரசிகர்களாகவே மாற்றியது. 1992ஆம் ஆண்டுகளில் முஸ்தபா ஆசிரியரின் விளையாட்டுக் கட்டுரைகளையும், செய்திகளையும் கேட்பதற்காக புதன்கிழமைகளில் மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் விளையாட்டரங்கு நிகழ்ச்சிக்காக வானொலி அருகில் அமர்ந்து கொள்வோம்.

இவரது எழுத்தாக்கம்தான் என்னையும் இலங்கை வானொலிக்கு எழுதத் தூண்டியது என்றால் அது மிகையாகாது. நூற்றுக்கணக்கான விளையாட்டாசிரியர்களையும், ஆயிரக்கணக்கான சாரண மாணவர்களையும் உருவாக்கிய ஓர் ஆசானாக முஸ்தபா வரலாற்றில் பதியப்பட்டுள்ளார்.

வானொலியில் அவரது பெயரைக் கேட்டிருந்தபோதும் நேரடியாக நான் அவரைச் சந்தித்ததில்லை. முதன் முதலாக அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முஸ்தபா ஆசிரியர் மத்தியஸ்தராக கடமையாற்றினார். அந்த சந்தர்ப்பத்தில் அவரை சந்தித்தேன்.

மிகவும் அற்புதமான முறையில் நடுவர் பணியைச் செய்தார். போட்டியிட்ட இரண்டு அணி வீரர்களையும் விட மத்தியஸ்தம் வகித்த அவரின் எடுப்பே ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது. அன்றிலிருந்து முஸ்தபா ஆசிரியரைப்பற்றிய ஈடுபாடு என்னுள் இன்னும் அதிகமானது. நான் பாடசாலை மாணவராக இருந்ததால் ஆயிரக்கணக்கான ரசிகர்களில் ஒருவனாக அவருக்கு கைலாகு கொடுத்துவிட்டு வெளியேறினேன்.

பின்னர் அட்டாளைச்சேனை பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் நான் தொடர்ந்தும் பங்குபற்றி வந்ததால் என்னைப்பற்றி அறிந்து கொண்டதுடன் 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வானொலியில் நானும் தொடர்ந்தும் விளையாட்டுச் செய்திகளை எழுதினேன். அதனால் என்னை அழைத்து என்னை உற்சாகப்படுத்தியதுடன் விளையாட்டுத்துறை வரலாறுகளையும் சொல்லித்தந்தார்.

2001ஆம் ஆண்டு நான் நவமணி பத்திரிகையில் முஸ்தபா ஆசிரியரை நேர்முகம் கண்டேன். அந்த நேர்முகம் மிகுந்த வரவேற்பைப் பெற்றதுடன் எனக்கும் பத்திரிகைத்துறையில் நல்லதொரு இடத்தைத் தந்தது. அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரிக்கு என்னை வருமாறு எனது வீட்டுத் தொலைபேசிக்கு அழைப்பினை எடுத்துச் சொல்லுவார். அங்கு சென்றதும் கல்லூரிச் செய்தி மட்டுமல்ல, தேசிய ரீதியிலான செய்திகளைக்கூட டைப் செய்து வைத்திருப்பார்.

எனது விளையாட்டுத்துறை செய்தி சேகரிப்பில் நல்லதொரு ஆலோசகராக இருந்து வழிகாட்டிய முஸ்தபா ஆசிரியர் காலமான செய்தி கேட்டதும் மிகுந்த கவலையடைந்தேன். இவரிடம் கற்ற ஆசிரியர்கள் நாட்டின் நாலா பகுதிகளிலும் கற்பிக்கின்றனர். அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியில் இவரிடம் கற்ற ஆசிரிய மாணவர்கள் முஸ்தபா ஆசிரியரின் கற்பித்தலை ஒரு போதும் மறக்க மாட்டார்கள்.

அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி அணி தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் தேசிய கல்விக் கல்லூரிகளுக்கிடையிலான கற்றுப் போட்டியில் சம்பியனாக வருவதற்கு முஸ்தபா ஆசிரியரின் பயிற்சியே காரணமாக அமைந்தது.

கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் ஆசிரியராகவும், உப அதிபராகவும் கடமையாற்றிய முஸ்தபா, பின்னர் அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியில் இணைந்து கொண்டு விரிவுரையாளராக கடமை புரிந்ததுடன் இறுதியில் சிரேஸ்ட விரிவுரையாளராக ஓய்வு பெற்றுச் சென்றார்.

ஓய்வு பெற்றதும் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் பகுதி நேர உடற்கல்வி விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

உதைபந்தாட்ட வீரராக, மத்தியஸ்தராக இலங்கை உதைபந்தாட்டத்துறைக்கு ஆற்றிய பணிக்காக எம்.ஐ.எம்.முஸ்தபா, இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் பாராட்டி பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இது கிழக்கு மாகாணத்திற்கும் குறிப்பாக அம்பாரை மாவட்டத்திற்கும் பெருமை தந்த விடயமாகும். அத்தோடு, சாரணியத்துறையில் ஆற்றிய பணிக்காக தேசிய விருதையும் இவர் பெற்றுள்ளார்.

கல்முனை பற்றிமாக் கல்லூரி மற்றும் உவெஸ்லிக் கல்லூரிகளின் பழைய மாணவரான மர்ஹூம் எம்.ஐ.எம்.முஸ்தபா ஆசிரியருக்கு ஒரு மகனும் மகளும் உள்ளனர். இவரது விளையாட்டுத்துறை ஈடுபாடுகளுக்கு இவரது மனைவியின் ஒத்துழைப்பும், ஆதரவும் பெரும் உந்துசக்தியாக இருந்ததாக பல தடவைகள் அவரே பல நிகழ்வுகளில் கூறியுள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த மர்ஹூம்களான முகம்மட் இஸ்மாயில், ஆசியா தம்பதிகளின் மூத்த புதல்வரான முஸ்தபாஆசிரியருக்கு ஒரு சகோதரியும் ஒரு சகோதரனும் உள்ளனர்.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று இடம்பெற்றபோது அப்போட்டிக்கு பிரதம மத்தியஸ்தராக முஸ்தபா ஆசிரியர் கடமையாற்றியுள்ளார். இதற்கு பிரதம அதிதியாக வெபர் அடிகளார் கலந்து கொண்டுள்ளார். போட்டி முடிவில் உரையாற்றிய வெபர் அடிகளார் ''கிழக்கு மாகாணத்தில் உதைபந்தாட்டம் செத்துவிட்டது என்று நினைத்திருந்தேன். ஆனால் முஸ்தபாவின் மத்தியஸ்தத்தைப் பார்த்தபோதுதான் தெரிகின்றது கிழக்கில் இன்னும் உதைபந்தாட்டம் சாகவில்லை'' என்று பேசிய விடயம் முஸ்தபாவின் திறமைக்கு இதைவிட சான்று தேவையில்லை என்பதை பறைசாற்றியது.

அன்றைய காலகட்டத்தில் செய்திகளையும் படங்களையும் பத்திரிகைக்கு அனுப்புவதில் உள்ள கஸ்டங்களையும், சவால்களையும் என்னிடம் பலமுறை சொல்லி அவரது அனுபவத்தை பகிர்ந்து கொண்டவர்.

இப்படி பல்வேறு துறைகளில் ஆளுமையுள்ளவராக இப்பிராந்தியத்தில் தடம்பதித்த எம்.ஐ.எம்.முஸ்தபா ஆசிரியரின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரது குற்றம், குறைகள் மன்னிக்கப்பட்டு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் உயர்ந்த சுவர்க்கத்தை வல்ல அல்லாஹ் வழங்குவானாக!

இவரது ஜனாஸா நல்லடக்கம் கல்முனை கடற்கரைப்பள்ளி மையவாடியில் நேற்று புதன்கிழமை மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து நல்லடக்கம் செய்யப்பட்டது.



# கட்டார் பிரச்சினையை தீர்க்க குவைத் - துருக்கி முயற்சி

## கட்டார் மீதான வளைகுடா நாடுகளின் தடை நல்லதல்ல - அர்துகான்





கட்டார் மீது தூதரக தடை விதித்த ஐந்து அரபு நாடுகள் இடையே சமரசம் ஏற்படுத்த குவைத் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் தீவிர முயற்சி செய்யும் என இருநாட்டு ஜனாதிபதிகள் உறுதியளித்துள்ளனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக நிதி உதவி செய்வதாக குற்றம்சாட்டி கட்டாருடனான தூதரக உறவை 5 அரபு நாடுகள் துண்டித்தன. சவூதி அரேபியா, பஹ்ரைன், எகிப்து, ஏமன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் மேற்கண்ட நடவடிக்கையை மேற்கொண்டன.

இதனால் விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. தூதர்கள் திரும்ப பெறப்பட்டனர். மேலும் மசகு எண்ணெய் விலை உயரும் அபாயம் உள்ளது. கட்டாரில் உணவு பற்றாக்குறை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

சவூதி எல்லையை ஒட்டியுள்ள கட்டாரின் 80 சதவீத உணவுத் தேவையை அண்டை நாடுகளான சவுதி மற்றும் வளைகுடா அரபு நாடுகளே வழங்குகின்றன.

இந்நிலையில் எல்லை மூடப்படுவதால் உணவு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

குழந்தைகளுக்கு பால், தயிர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் கூட கிடைக்கவில்லை என்று கட்டார் வாசிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மக்கள் பொருட்களை வேகவேகமாக வாங்கிச் சேமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பல கடைகளில் மக்கள் பெரிய வரிசையில் நிற்பதாகக் கூறப்படுகிறது. பால், கோழி, அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்கள் பேரங்காடிகளில் சீக்கிரமாகத் தீர்ந்துவருவதாகக் கூறப்படுகிறது.

எனவே இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர சர்வதேச நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளன. குறிப்பாக கட்டார் மீது தூதரக தடை விதித்த ஐந்து அரபு நாடுகள் இடையே சமரசம் ஏற்படுத்த குவைத்தும், துருக்கியும் ஈடுபட்டுள்ளன.

குவைத் மன்னர் ஷேக் சபா அல் அகமது அல்- ஜாபர் சவூதி அரேபியா மன்னர் சல்மானை சந்தித்து பேச வேண்டும் என வளைகுடா அரபு நாடுகளின் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதையடுத்து இருநாடுகள் சமாதானத்துக்கு உதவ தயாராக இருப்பதாக துருக்கி ஜனாதிபதி அர்துகான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து துருக்கி தலைநகர் அங்காராவில் கட்டார் மீதான தடை குறித்து அந்நாட்டு ஜனாதிபதி அர்துகான் பேசுகையில், "கட்டார் மீதான வளைகுடா நாடுகளின் தடை நல்லதல்ல என்று நாங்கள் நினைக்கிறோம். கட்டாரை தனிமைப்படுத்துவதால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு ஏற்படாது. எங்களது துயரமான நேரங்களில் எங்களுக்கு கட்டார் நண்பர்கள் துணையிருந்துள்ளனர். கட்டாருடனான துருக்கியின் உறவு தொடரும்" என்றார்.

கட்டாருக்கான ஆதரவு தெரிவித்து அர்துகான் பேசும்போது சவூதி மீது எந்த குற்றச்சாட்டையும் அவர் முன்வைக்கவில்லை. வளைகுடா நாடுகளுடன் நல்ல நட்புறவை துருக்கி பேணி வருகிறது என்பது கவனிக்கத்தக்கது.

இந்த விவகாரம் குறித்து அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ளார். அதில் தீவிரவாதத்துக்கு கட்டார் நிதியுதவி அளிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார். சமீபத்தில் தான் மத்திய கிழக்கு நாடுகளில் பயணம் மேற்கொண்டேன். அப்போது தீவிரவாத நடவடிக்கைகளுக்கு கட்டார் நிதியுதவி செய்யக்கூடாது என வலியுறுத்தினேன் என்று தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியா மன்னர் சல்மானுடன் போனில் தொடர்பு கொண்டு பேசிய அவர், வளைகுடா நாடுகள் ஒற்றுமையாகவும், அமைதியுடனும், பாதுகாப்புடனும் இருக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தினார்.

கட்டாரை தனிமைப்படுத்துவதன் மூலம் இப்பிரச்சினையை தீர்க்க முடியாது. எனவே, இது குறித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

துருக்கி ஜனாதிபதி அர்துகான், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மேக்ரான் மற்றும் கட்டார் நாட்டுடன் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு இப்பிரச்சினை குறித்து விவாதித்தார்.

## ஒம்ரான் அன்றும்... இன்றும்



கடந்த ஆகஸ்ட் மாதம் போர் நடைபெற்று வந்த சிரியாவின் அலெப்போ நகரில் வீசப்பட்ட குண்டுகளினால் பல குடியிருப்புகள் தரைமட்டமாகின. இடிபாடுகளுக்கு இடையே மீட்கப்பட்ட ஒரு சிறுவனின் புகைப்படத்தை போர் எதிர்ப்பாளர்கள் வெளியிட்டனர். புழுதி யோடும் ரத்தத்தோடும் ஒரு துளி கண்ணீர்கூட விடாமல் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த 5 வயது ஒம்ரான் தக்னீஷ் படம் உலகத்தை உலுக்கியது.

சிரியாவின் மோசமான சூழ்நிலையை எடுத்துக்காட்டியது. இத் தாக்குதலில் ஒம்ரானின் 10 வயது அண்ணன் உயிரிழந்தான். இவனது அம்மாவும் மற்றவர்களும் மீட்கப்பட்டனர். அனைவருக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு, வீடு திரும்பினர். பத்து மாதங்களுக்குப் பின்னர் காயங்களிலிருந்து முற்றிலும் குணமான ஒம்ரானின் புகைப்படம் மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது. தன் அப்பாவின் மடி மீது அமர்ந்து, செய்தியாளரிடம் பேசுவதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான் ஒம்ரான்.





## யெமனை வாட்டும் கொலரா: 700 பேர் உயிரிழப்பு



உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள யெமனில் கொலரா எனப்படும் வாந்திபேதி நோய்க்கு சுமார் 700 பேர் உயிரிழந்துள்ளமை குறித்து உலக சுகாதார நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

யெமன் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுத்தி புரட்சிப் படையினர் கடந்த இரண்டாண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசுப் படைகளுடன் புரட்சிப் படையினர் நடத்திவரும் மோதலில் பத்தாயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த படையினருக்கு சவூதி தலைமையிலான இஸ்லாமியப் படைகள் ஆதரவளித்து வருகின்றன. இந்த ஆதரவுடன் நாட்டின் தலைநகரான சனா பகுதியை கைப்பற்றியுள்ள புரட்சிப் படையினர் அந்நகரை தங்களது ஆளுமைக்கு உட்படுத்தி வைத்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து சனாவில் கொலரா எனப்படும் வாந்திபேதி நோய் படுவேகமாக பரவத் தொடங்கியது. இதையடுத்து, ஆட்சி நிர்வாகத்துக்கு பொறுப்பேற்றுள்ள ஹவுத்தி அரசின் நிர்வாகம் கடந்த மாதம் சனா நகரில் அவசர நிலை சட்டத்தை பிரகடனப்படுத்தியது.

கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதியில் இருந்து இம்மாதம் 4ஆம் திகதிவரை சுமார் 86 ஆயிரம் மக்கள் கொலரா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சனாவை கடந்து அருகாமையிலுள்ள அமானத் அல்-செமா மாகாணம், ஹோடெய்டா, டய்ஸ் மற்றும் ஏடென் நகரிலும் கொலரா நோய் வேகமாக பரவி வருகிறது. கடந்த மே மாதம் 27ஆம் திகதி வரை 471 பேர் கொலராவுக்கு பலியானதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த பத்து நாட்களில் அடுத்தடுத்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள நிலையில் இந்நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை தற்போது 681 ஆக உயர்ந்துள்ளது.

நாட்டில் வாழும் மொத்த மக்கள்தொகையான 2.6 கோடி மக்களில் 1.7 கோடி பேர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் போதிய ஊட்டச்சத்தான உணவு கிடைக்காமல் திண்டாடி வருவதாகவும் உலக சுகாதார நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

## உலகச் செய்திகள்

# வளைகுடா நாடுகளின் ஒற்றுமை அவசியம்

## சவூதி மன்னருக்கு டிரம்ப் கோரிக்கை



வளைகுடா நாடுகளின் ஒற்றுமையை உறுதி செய்து தீவிரவாதத்திற்கு எதிராக போராடுமாறு சவூதி மன்னர் சல்மானுக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

கட்டாருடனான தூதரக உறவை ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவூதி, பஹ்ரைன், எகிப்து, யெமன் மற்றும் மாலைதீவு, லிபியா உள்ளிட்ட 7 நாடுகள் திடீரென துண்டித்தன. பயங்கரவாத செயல்களுக்கு துணை போகும் வகையில் கருத்துகளை தெரிவித்ததற்காகவும், அதற்கு ஆதரவு அளிக்கும் வகையில் செயற்பட்டு வருவதற்காகவும் கட்டார் மீது இந்த நடவடிக்கையை மேற்கண்ட 5 நாடுகள் எடுத்துள்ளன.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் தங்கியிருக்கும் கட்டாரைச் சேர்ந்தவர்கள் 14 நாட்களுக்குள் நாடு திரும்பவும், தூதரக அதிகாரிகள் 48 மணி நேரத்துக்குள் வெளியேறவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. இதேபோல் கட்டார் நாட்டு விமானங்கள் தங்கள் நாட்டுக்குள் வரவும் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், சவூதி அரேபிய மன்னர் சல்மானை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

அதன்போது, கட்டார் மீதான தடையால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து இருவரும் கலந்துரையாடினர். வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் இந்த தகவல் இடம்பெற்றுள்ளது.

இந்த உரையாடலின் போது, தீவிரவாதத்திற்கு எதிராக போராட, பிராந்திய ரீதியிலான ஒற்றுமையை நிலைநாட்டவும் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலிலுள்ள நாடுகளின் ஒற்றுமையை உறுதிப் படுத்துங்கள் என்று சவூதி மன்னரிடம் டிரம்ப் கூறினார்.

முன்னதாக கட்டார் நாட்டுடனான உறவை 4 அரபு நாடுகள் துண்டித்துள்ளதற்கு டிரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒடிசாவில் வெயிலுக்கு 16 பேர் பலி: குஜராத் - ராஜஸ்தானிலும் கடும் பாதிப்பு



(திருச்சி சாஹுல் அமீது)

ஒடிசாவில் வெயில் கொடுமை தாங்க முடியாமல் 16 பேரும், குஜராத்தில் 2 பேரும் உயிரிழந்துள்ளனர். ராஜஸ்தான் மாநிலத்தில் வெயிலுக்கு பலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தென்மேற்கு பருவ மழை தொடங்கி பல மாநிலங்களில் மழை பெய்து வரும் நிலையிலும் நாட்டின் பல மாநிலங்களில் கடும் வெயில் கொளுத்தி வருகிறது.

வடமாநிலங்கள் பலவற்றில் இன்னும் வெயில் உச்சக்கட்டத்திலேயே உள்ளது. ஒடிசாவில் வெயில் கொடுமை தாங்க முடியாமல் 16 பேரும், குஜராத்தில் 2 பேரும் உயிரிழந்துள்ளனர்.

ஒடிசாவில் ஏற்கனவே வெயில் தாங்க முடியாமல் 100 பேர் உயிரிழந்து இருந்தனர். இன்னும் அதே அளவிலேயே வெயில் நிலைமை நீடிப்பதால் உயிர் இழப்புகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

குஜராத்தில் வெயிலால் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் மட்டும் 10 ஆயிரம் பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இன்னும் அதே நிலை நீடிக்கிறது.

உத்தரபிரதேசத்தில் இதுவரை வெயிலுக்கு 6 குழந்தைகள் உள்பட 10 பேர் உயிர் இழந்துள்ளனர். இந்த மாநிலத்தின் சில பகுதிகளில் மழை பெய்து வரும் நிலையிலும் பல மாவட்டங்களில் வெயில் இன்னும் அதே நிலையில் தான் உள்ளது.

## 09

**2017 ஜூன் 08**

**ஹிஜ்ரி 1438 ரமழான் 13**

**நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம் ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி**

## ரமழான் முபாறக் பரிசு மழை

நவமணி

| போட்டி - 01 (திங்கள் – வெள்ளி) | போட்டி - 02 (வெள்ளிக்கிழமை) |
| --- | --- |
| 1ஆம் பரிசு : உம்ரா பொதி<br>2ஆம் பரிசு : மடிக் கணனி<br>3ஆம் பரிசு : கணனி<br>22 ஆறுதல் பரிசுகள் | கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும் |

### போட்டி நிபந்தனைகள்

- தினமும் 5 கேள்விகள்
- 30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)
- வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.
- போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது
- போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியாக அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- போட்டிகளின் முடிவுத்திகதி - ஜூலை 15, 2017

1. 'உங்களில் சிறந்தவன்' என அல் - குர்ஆனை அடிப்படையாகக் கொண்டு வந்த ஹதீஸைத் தருக?
2. மரணித்தபின்பும் நன்மை தரக்கூடிய அமல்கள் எவை?
3. ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு நோன்பு கடமையாக்கப்பட்டது?
4. பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் எப்போது பிரிந்து சென்றது?
5. இலங்கையின் முதல் முஸ்லிம் சபாநாயகரின் பெயர் என்ன?

நவமணி **போட்டி - 09**
**08.06.2017 - வியாழக்கிழமை** நவமணி

பெயர் :..........................................................

முகவரி :..........................................................

தொலைபேசி :..........................................................

தே.அ.அ. இல.:..........................................................

கையொப்பம் :..........................................................

**Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala**

மேலதிக விபரங்களுக்கு
எம்.எஸ்.எம். சாஜஹான் - 0778751032,
வாரித் - 0772604964, அஷ்ஷெய்க் றிஷாத் 077 2415415

## எமிரேட்ஸ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், எகிப்து, பஹ்ரைன் ஆகிய நாடுகள் கட்டாருடனான அனைத்துவித இராஜதந்திர உறவுகளையும் துண்டித்துக் கொள்வதாக அறிவித்ததைத் தொடர்ந்தே மேற்படி சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

## ஆளும்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கீழ் 2ஆம் இலக்க நிலையியற்கட்டளையின்கீழ் உரையாற்றிய ஒருங்கிணைந்த எதிரணித் தலைவரான தினேஷ் குணவர்த்தன,

சைட்டம் மருத்துவ கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவித்து, மருத்துவ பீடங்களைச் சேர்ந்த சுமார் 7000 பல்கலைகழக மாணவர்கள் தற்போது வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால், மருத்துவ பீட செயற்பாடுகளும் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

எனவே, இதற்கு விரைவில் தீர்வு காணுமாறு பீடாதிபதிகள் மற்றும் விரிவுரையாளர்கள் அரசுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனர். இதற்கு அரச தற்போது எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளது? என வினவினார். அத்துடன், மகாபொல புலமை பரிசிலை நிறுத்தி, மாணவர்களை அரச வேட்டையாடுகின்றது என்றும் குற்றம் சாட்டினார்.

அதற்கு பதிலளித்த சபை முதல்வரும் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல,

சைட்டத்துக்கு அனுமதி அளிக்கும் வர்த்தமானி அறிவித்தலை கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 11 ஆம் திகதி, தினேஷ் குணவர்தன தான் பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தார். அத்துடன், அந்த வர்த்தமானி அறிவித்தலில் தொழில்நுட்ப மற்றும் மருத்துவத்துக்கான தெற்காசிய நிறுவனம் என்றும் 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சைட்டத்தில் கல்விப் பொதுத் தாராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் மருத்துவ கல்விக்காக 2011 ஆம் ஆண்டு முதல் அனுமதி பெறமுடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மஹிந்த ராஜபக்ஷ மாணவர்களுக்கு புலமை பரிசில் வழங்கியதுடன் 600 மில்லியன் ரூபாய் பணத்தை இந்த கல்லூரிக்கு வழங்கியுள்ளார். இவ்வாறு சைட்டத்துக்கு அனுமதி வழங்கிவிட்டு தான் இன்று எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். தினேஷின் இந்த செயற்பாடு சந்தர்ப்பவாத அரசியலின் உச்சக்கட்டமாகும் என்றார்.

அதன்போது எழுந்த தினேஷ் குணவர்தன எம்.பி, என் மீது பொய் குற்றச்சாட்டு சுமத்துகின்றார். நான் சமர்ப்பித்த வர்த்தமானி அறிவித்தலில் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவத்துக்கான தெற்காசிய நிறுவனம் என்றுதான் உள்ளது. மருத்துவ கல்விக்கான அனுமதி வழங்கப்படவில்லை. இந்த அரசு தான் அவ்வாறு செய்தது என்றார்.இதன்போது, எழுந்த விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, முகாமைத்துவத்துக்கு மாத்திரம் அனுமதி வழங்கியிருந்தால் கடந்த அரசில் மருத்துவ மாணவர்களுக்கு எவ்வாறு புலமை பரிசில் வழங்கப்பட்டது எனக் கேள்வி எழுப்பினார்.

கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசமும், தினேஷ் சொல்வது போல முகாமைத்துவ மாணவர்களுக்கு மாத்திரம் அனுமதி என்றால், 2009ஆம் ஆண்டு முதல் மருத்துவ மாணவர்களை இணைத்துகொண்டது எவ்வாறு? எனத் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த தினேஷ் எம்.பி, அதனை தான் நாங்களும் சொல்கின்றோம் முகாமைத்துவத்துக்கு அனுமதி வழங்கிவிட்டு மருத்துவம் கற்பிப்பதால், சைட்டம் சட்டவிரோதமானது என்றார். இவ்வாறு இருதரப்பிடையேயும் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டிருந்தபோது எதிரணியினர் சபையில் கூச்சலிட ஆரம்பித்தனர். இந்த விடயத்தை விவாதமாக்க வேண்டாம் இத்துடன் நிறுத்திக்கொள்ளுங்கள் என, சபாநாயகர் கரு ஜயசூரிய கூறியதையடுத்தும் சபையின் சத்தம் தொடர்ந்தமையால், உறுப்பினர்களே அமருங்கள்.

இல்லையென்றால் பெயர் சொல்ல நேரிடும் என்று சபாநாயகர் எச்சரிக்கை விடுத்தார். அதனையும் கேட்காமல் இருதரப்பும் கூச்சலிட்ட நிலையில், இதற்கு மேல் நிறுத்தாவிட்டால் சபை நடவடிக்கைகளை இத்துடன் நிறைவு செய்யும் முடிவை எடுக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதனையடுத்து, உயர்கல்வியமைச்சரான லக்ஷ்மன், தினேஷ் குணவர்தன கடந்த அரசின்போது சமர்ப்பித்த வர்த்தமானி அறிவித்தலை சபாநாயகரிடம் வழங்கியதையடுத்து அதனை பார்த்துவிட்டு ஒன்றிணைந்த எதிரணியிடம் பார்க்குமாறு சபாநாயகர் வழங்கி வைத்ததையடுத்து தான் சபை நிலைமை அமைதிக்கு வந்தது.

## முஸ்லிம்கள் மீதான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செயற்பாடுகளை சவூதி அரேபியாவை மையமாகக் கொண்டியங்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு கண்டித்துள்ளதோடு, குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்தி நீதி நிலை நாட்டப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் நாயகம் கலாநிதி யூஸுப் அல்-உதைமீன் அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாபார தலங்கள், பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் குறித்து தாம் விசேட கவனம் செலுத்தவுள்ளதாகவும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் நாயகம் கலாநிதி யூஸுப் அல்-உதைமீன் தெரிவித்துள்ளார்.

மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை முஸ்லிம்கள் நீண்டகாலமான நாட்டில் அமைதியாக வசித்து வருகின்றனர். அவர்கள் நாட்டின் கலை, கலாசார, அரசியல், பொருளாதார விடயங்களுக்கு பங்களிப்பு செய்துள்ளனர். இலங்கை முஸ்லிம்களுக்கு நாம் எமது ஆதரவையும் ஒருமைப்பாட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம். சமூகங்களுக்கிடையே சமாதானமும், சகவாழ்வும் மலர வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களுக்கெதிராக 20க்கு மேற்பட்ட இனவாத தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரரின் தூண்டுதல்களாலேயே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அவரை இலங்கை பொலிஸார் கைது செய்ய இருக்கின்றதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. குற்றவாளிகள் சட்டத்தின் முன்நிறுத்தப்படவேண்டும். நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

## வன்முறைகளை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அனர்த்த நிவாரணங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு கூட்டப்பட்ட விசேட பாராளுமன்ற கூட்டத்தில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் பற்றி ஜனாதிபதியின் அவதானத்திற்கு கொண்டு வந்தார்.

இவரையடுத்து அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் மற்றும் கைத்தொழில் வணிக அமைச்சர் றிஷாத் பதியுதீன் ஆகியோர் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தார்கள்.

முஜிபுர் ரஹ்மான் பேசுகையில்,

கடந்த சில தினங்களில் 22 இற்கு மேற்பட்ட சம்பவங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்றிருக்கின்றன. ஒருவரைக்கூட பொலிஸார் கைது செய்யவில்லை. இந்த அரசை வீழ்த்த வேண்டுமென ஒரு சதி நடக்கின்றது. ஆகவே பொலிஸார் மூலம் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கு கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் றிஷாத் பதியுதீன் பேசுகையில்,

பிரபாகரனை கைது செய்த பொலிஸாருக்கு இந்த சம்பவங்களை மேற்கொள்வோரை பிடிக்கமுடியாதா என கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த ஜனாதிபதி பிரபாகரனை இராணுவத்தினரே பிடித்தனர். எனவும் நீங்கள் விரும்பினால் பொலிஸாருக்கு பதிலாக இராணுவத்தினரிடம் ஒப்படைக்க தயார் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவும் தனது பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்தார்.

## இரத்த...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வந்து நோயாளர்களின் பாவனைக்கு வழங்க இடமளித்தமை மூலம் அரசாங்கத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

மேலும், இது தொடர்பில் இவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எனினும், குறித்த வழக்கிற்கு சந்தேக நபர் நேற்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் அவரது சார்பில் சட்டத்தரணி ஆஜரானார்.

குறித்த சட்டத்தரணி தெரிவித்ததாவது, மங்கலிகா சுகவீனம் காரணமாக அவுஸ்திரேலியாவில் சிகிச்சை பெற்று வருவதாக குறிப்பிட்டார்.

குறித்த விடயங்களை ஆராய்ந்த கொழும்பு பிரதம நீதவான் லால் ரணசிங்க பண்டார சந்தேகநபரைக் கைது செய்ய பிடியாணை பிறப்பித்ததோடு, அவருக்கு பிணை வழங்க கையெழுத்திட்டவர்களை எதிர்வரும் ஆகஸ்ட் 9ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவு பிறப்பித்தார்.

## தவறுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முன்வைத்த ஜெனிவா பிரேரணைக்கு எதிரான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின் போது அமைச்சர் றிஷாட் பதியுதீன் இதனை தெரிவித்தார். அவர் உரையாற்றிய போது கூறியதாவது,

30வருடகால யுத்தம் முடிவடைந்து சர்வதேசமட்டம் வரை உள்நாட்டு பிரச்சினை கொண்டு செல்லப்பட்டு, அதன் பின்னர் நம் நாட்டில் அரசியல் அமைப்பு சபை ஒன்று உருவாக்கப்பட்டு, தீர்வு முயற்சிகளுக்காக எல்லா கட்சிகளும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்படுகின்றது.அரசியல் கட்சிகள் அரசியல் இலாபம் கருதியும் அரசியல் வாதிகள் தங்களது எழுச்சி, இருப்பு மற்றும் சொந்த நலன்களை முன்நிறுத்தியும் செயற்பட்டதனாலேயே இந்த நாடு அழிவுப்பாதைக்கு சென்றது. அத்துடன் சுதந்திரத்திற்கு பின்னர் நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் விட்ட தவறுகளினால் இந்த நாட்டிலே இரத்த ஆறு பெருக்கெடுத்தது. சொத்துக்கள் அழிக்கப்பட்டன. மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. ஊனமுற்றோர் அதிகரித்தனர்.

இந்த உயர் சபையிலே எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் ஐயாவும், அவரது கட்சியை சார்ந்த சுமந்திரன் எம்பியும் வீற்றிருக்கும் போது, நான் ஒரு விடயத்தை வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். புலிகளினால் வெளியேற்றப்பட்டு அகதிகளாக வாழ்ந்து வந்த வடக்கு முஸ்லிம்கள் 25வருடங்களுக்குப் பின்னர் மீளக்குடியேற செல்லும் போது உங்கள் கட்சியைச் சார்ந்த ஒரு சிலர் அவர்களின் மீள்குடியேற்றத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் எதிர்த்து வருகின்றனர். முல்லைத்தீவில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை அப்பட்டமாக இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் அந்த பிரதேச முஸ்லிம்கள் மீள்குடியேறுவதற்காக வீடுகளை அமைக்கவென மீள்குடியேற்ற செயலணி மூலம் நிதி ஒதுக்கப்பட்ட போது அதற்கு அனுமதிக்க முடியாது என்று உங்கள் கட்சியைச்சார்ந்த ஒரு சிலர் அடம்பிடித்துள்ளனர். மாகாண சபை உறுப்பினர் ஒருவருடன் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சேர்ந்து இந்த எதிர்ப்பை வெளிகாட்டி இருப்பது வெட்கமாக இருக்கின்றது. இனியும் நாங்கள் இந்த மக்களை மீள்குடியேற்றும் விடயத்தில் மிகவும் திறந்த மனதுடனும், உறுதியாகவும் இருக்கின்றோம் என்பதை இந்த உயர் சபையிலே உங்களுக்கு கூறி வைக்க விரும்புகின்றோம். மீள்குடியேற்ற விடயம் தொடர்

## கட்டார்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதேநேரம், இதுவிடயம் குறித்து அடுத்தவாரம் அமைச்சரவைக் கூட்டத் தொடரின்போது விசேடமாக ஆலோசிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளிவிட்ட அவர், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம், எகிப்து, பஹ்ரைன், யெமன் ஆகிய நாடுகள் கட்டாருடனான இராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டுள்ளமை தொடர்பில் நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தொடரின்போது வெளிவிவகார அமைச்சர் ரவிகருணாநாயக்கவினால் சில தகவல்கள் வெளியிடப்பட்டன.

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் அரசினால் உடனடியாக எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது. அந்நாட்டில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இலங்கைத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் எவரும் இதுவரை தமக்குப் பிரச்சினை என்று அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் முறையிடவில்லை. மேலும், இந்த நிலைமை நீடிக்கும் என்றும் எம்மால் கூறமுடியாது. அடுத்த வாரத்தில் கூட கட்டாரில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்கு பேச்சின்மூலம் தீர்வு காணப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது. எனவே, நாம் இதுவிடயம் தொடர்பில் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்க்கமாக ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம் என்றார்.

## ஹமாஸ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விவகாரங்களில் தலையீடு தொடர்பில் சில வருடங்களுக்கு முன்னர் கட்டார் வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதை நாம் காண வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், எகிப்து, பஹ்ரைன், மாலைதீவு ஆகிய நாடுகள் கட்டாருடனான அனைத்துவித இராஜதந்திர உறவுகளையும் துண்டித்துக்கொள்வதாக அறிவித்திருந்ததைத் தொடர்ந்து வளைகுடா அரசியலில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

## கிழக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இதற்காக, மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி, மண்முனை தெற்கு பிரதேச செயலாளர் பிரிவின் களுதாவளை பிரதேசத்தில் அமைந்துள்ள அரசுக்கு சொந்தமான 2 ஏக்கர், 3 ரூட் அளவிலான நிலப்பகுதியொன்றும் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இப்பொருளாதார மத்திய நிலையத்தின் நிர்மாணிப்பணிகளை விரைவாக மேற்கொள்ளும் பொருட்டு, இத்துறையில் அனுபவம் கொண்ட பொறியியல் செயற்பாடுகள் உள்ளிட்டவற்றை துரிதமாக பெற்றுக்கொள்ள கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சரான பீ. ஹெரிசனினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பில் உங்களின் ஒத்துழைப்பை கோரும் வகையில் உங்கள் அலுவலகத்திற்கு வந்து கடிதம் ஒன்றை கையளித்தேன். எதிர்க் கட்சி தலைவர் என்ற பதவியை பயன்படுத்தி, உங்களுக்கு இருக்கின்ற அரசியல் பலம் மற்றும் உங்களது கட்சியின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட வடமாகாணசபையின் அதிகாரப் பலம் ஆகிய இரண்டையும் பயன்படுத்தி முஸ்லிம் அகதிகளின் மீள்குடியேற்றத்திற்கு நீங்கள் உதவவேண்டும். இல்லையென்றால் முடியாது என்று பகிரங்கமாக சொல்லிவிடுங்கள்.

எதிர்க் கட்சி தலைவரான உங்கள் மீது, நாங்கள் இன்னுமே நம்பிக்கை கொண்டுள்ளோம். அதனால் தான் நேரடியாக உங்கள் அறைக்கு வந்து அந்த கடிதத்தை கையளித்தேன்.

இதைப்போன்று முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் கடிதம் அனுப்பியிருக்கின்றேன். முன்னரும் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பேசவேண்டுமென கடிதம் அனுப்பியிருந்தேன். இன்றை வரையில் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

எனவே, வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தில் மனசாட்சியுடனும், மனித நேயத்துடனும் நடந்து கொள்வீர்கள் என நாங்கள் இன்னுமே நம்புகின்றோம். இவ்வாறு அமைச்சர் றிஷாட் கூறினார்.

## ஈரான்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செய்தி நிறுவனமான அமாக் செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

நேற்று (புதன்கிழமை) காலை ஈரான் பாராளுமன்றத்துக்குள் நுழைந்த மர்ம நபர் அங்கிருந்த பாதுகாவலர் உட்பட 12 பேரை சுட்டுக் கொன்றதுடன் தொடர்ந்தும் அவர் நடத்திய சரமாரி துப்பாக்கிச் சூட்டில் பலர் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து ஈரானின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள அந்நாட்டுத் தலைவர் அயதுல்லா கொமேனியின் நினைவிடத்தில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலர் படுகாயமடைந்தனர்.

இந்த இரு சம்பவங்களும் ஈரானில் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்திய நிலையில் இதற்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

## 116 வீரர்களுடன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அந்நாட்டு இராணுவ தளபதி தகவல் தெரிவித்துள்ளார்.

விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் ரேடாரில் இருந்து விலகி சென்று மாயமானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மஹரகம...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எனினும், இந்த கடையின் முன்பகுதி மாத்திரமே சிறியளவில் தீப்பற்றியுள்ளதுடன், பொருட்களுக்கு எந்தவொரு சேதமும் ஏற்படவில்லை.

கடந்த 7 வருடங்களாக குறித்த பகுதியில் தெஹிவலையினைச் சேர்ந்த மொஹமட் அஸ்லம் என்ற வர்த்தகரொருக்கு சொந்தமான மஹரகம நோலிமிட் ஆடையகத்துக்கு எதிர் திசையிலுள்ள ஜஸ்ட் போ யூ என்ற சப்பாத்துக் கடையே இவ்வாறு இனந்தெரியாத நபரொருவரால் எரியூட்டப்பட்டுள்ளது.

எனினும், குறித்த சம்பவம் கடைக்கு அருகாமையில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கெமராவில் தெளிவாக பதிவாகியுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். முன்னதாக, நுகேகொட, விஜேராம சந்தியில் உள்ள முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான லெதர் மற்றும் காபட் வகைகளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையமொன்று நேற்றுமுன்தினம் இரவு தீயிட்டு எரிக்கப்பட்டதுடன், இதனால் 12.5 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.எனினும், குறித்த சம்பவத்தை நேரில் கண்டவரின் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டுள்ள மிரிஹான பொலிஸார், விசேட விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், கடந்த சில தினங்களாக மஹரகம மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இவ்வாறு 4 முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாகி பல இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன், அப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முஸ்லிம்கள் பல்வேறு மன அழுத்தங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

## ஞானசாரதேரரை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைப்பினர் தற்போது கைது செய்யுமாறு முன்மொழியும் எந்தவொருவரும் கடைகளுக்குத் தீவைக்கவோ அல்லது சிங்களவர்களுக்கு எதிரான துவேசக் கருத்துக்களை வெளியிடவோ இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்றைய தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதாவது, ஞானசார தேரரை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் இதுவரை அவர் கைது செய்யப்படாது இருப்பது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு, இதுதொடர்பில் நேற்றைய தினமும் (நேற்று முன்தினம்) நான் பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடினேன். அவரும் சிசிடிவி காணொலிகளில் கிடைக்கப்பெற்ற தரவுகளுக்கு அமைவாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் குறித்த தேரரை கைது செய்ய 4 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவ்வமைப்பினரை உடனடியாக கைது செய்தால் கடைகளுக்கு தீ வைப்பது உள்ளிட்ட நாசகாரிய செயற்பாடுகளில் ஈடுபடுவோர் யார் என்பது தொடர்பில் அறிந்துகொள்ள முடியும் என்பது தான் எனதும் நிலைப்பாடாக இருக்கின்றது என அமைச்சர் ராஜித பதிலளித்தார்.

இதனைத் தொடர்ந்து, மேற்படி தீய சம்பவங்கள் அனைத்துக்கும் ஞானசார தேரர் தான் பொறுப்பு என உங்களால் எவ்வாறு உறுதியாக கூறமுடியும் என்று எழுப்பப்பட்ட இன்னுமொரு கேள்விக்கு,

ஏன், நீங்கள் அளுத்கம கலவரத்தின் போது அவர் நடந்துகொண்ட விதம், பேசிய முறை என்பவற்றையெல்லாம் பார்க்கவில்லையா? அவர் தொடர்பில் சி.ஐ.டியினர் விசாரணை நடத்திய பின்னர் வழங்கிய அறிக்கைக்கு அமைவாகவே நீதிமன்றம் அவரை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளதே ஒழிய வெறுமனே அவரை கைது செய்ய வேண்டும் என்று யாரும் கூறவில்லை என விடையளித்தார் ராஜித.

பின்னர், அவருக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறப்படுகின்றதே? என கேட்கப்பட்டமைக்கு, அது எல்லாம் பொய். அவருக்கு அப்படியொன்றும் இல்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த பதிலை அடுத்து, ஞானசார தேரர் உள்ளிட்ட சிலர் தங்களை கைது செய்யும் முன்னர் ஏனைய ஒருசிலரை கைது செய்ய வேண்டும் என்று தற்போது பெயர்களையெல்லாம் வெளியிட்டுள்ளார்களே. இதுகுறித்து உங்களின் நிலைப்பாடு என்ன? என்றும் வினா எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர், அவர்கள் குறிப்பிடும் எந்தவொருவரும் கடைகளுக்குத் தீ வைக்கவோ அல்லது சிங்கள மக்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களை வெளியிடவோ இல்லை.

விக்னேஸ்வரன் போன்றோர் சமஷ்டி குறித்து பேசுவது தொடர்பில் எனக்கும் ஆட்சேபனை இருந்தாலும், இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது அவரவர் உரிமையாகும். அவ்வாறான கோரிக்கைகளும் நாட்டில் காலாகாலமாக கேட்கப்பட்டுத் தான் வருகின்றன. இந்நிலையில் இவர்களை எவ்வாறு எம்மால் கைது செய்ய முடியும்? என்றார்.

அதேநேரம், இவ்வளவு சிறிய நாட்டில் ஒரு தேரரை பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியாதுள்ளமை தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது. இவர் ஒரு அமைச்சரிடம் தஞ்சம் புகுந்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது என்றும் கேட்கப்பட்டமைக்கு விடைக்கொடுத்த அமைச்சர் ராஜித,

ஒருவேளை இருக்கலாம்;. இத்தனைக் காலமாக ஒருவரை கண்டுபிடிக்க முடியாதுள்ளமை தொடர்பில் எனக்கும் சந்தேகம் உள்ளது தான் எனவும் அவர் ஒழிந்துள்ளார் என்று தான் தற்போது தகவல்கள் வந்துள்ளன எனவும் தெரிவித்தார்.

# Sports
## விளையாட்டுச் செய்திகள்



# வீரர்கள் பெற்றுக்கொள்ளும் பதக்கங்களின் உரிமையை அரசுடமையாக்க நடவடிக்கை
## விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி

பீ.எப்.எம் றிஷாட்

சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளில் தாம் நாட்டுக்காக பெற்ற பதக்கங்களை விற்க அல்லது ஏலத்தில் விட தடை விதிக்கும் முகமாக எதிர்காலத்தில் சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சரும், இணை அமைச்சரவைப் பேச்சாளருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன் ஒலிம்பிக் பதக்கம் வென்ற குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க, தான் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தான் பெற்ற ஒலிம்பிக் பதக்கத்தை ஏலத்தில் விடவுள்ளதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதுதொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச மட்டத்தில் பதக்கங்களை வென்ற வீரரொருவர் தனது பதக்கத்தை விளையாட்டுத்துறை அமைச்சிடம் ஏல விற்பனை செய்யுங்கள். நான் அதை அமைச்சில் பாதுகாப்பாக வைத்துக் கொள்வேன். ஏனென்றால் அது நாட்டுக்கு கிடைத்த பதக்கம். எனவே அதை சுசந்திகா ஜயசிங்கவின் தனிப்பட்ட தேவைக்காக விற்பனை செய்ய உரிமை இல்லை. அவ்வாறு பெற்றுக்கொண்ட பதக்கத்துக்காக இலங்கை அரசாங்கம் எவ்வளவு கோடி ரூபா பணத்தை செலவிட்டுள்ளது என்பதை யோசித்துப் பாருங்கள். எனவே சுசந்திகா தனது பதக்கத்தை ஏலத்தில் விற்க முற்படுவாராயின், அதை விளையாட்டுத்துறை அமைச்சினால் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த வருடத்திலிருந்து விளையாட்டு நிதியத்திலிருந்து சுசந்திகா ஜயசிங்கவுக்கு 80 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டு நிதியத்தின் பணத்திலிருந்து இப்படியான கொடுப்பனவுகளைச் செய்யமுடியாது. எனவே, முன்னணி விளையாட்டு வீரர்களுக்கு மாதம் 75 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் வாகன வசதிகளையும் செய்துகொடுப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை நான் அமைச்சரவையில் சமர்ப்பித்தேன். 60 ஆயிரம் ரூபாவை வழங்கவே அமைச்சரவை அனுமதி வழங்கியது. இதனால் தான் சுசந்திகா ஜயசிங்க இப்படி சொல்கின்றார். பதக்கத்தை விற்பனைசெய்யவேண்டியதில்லை. எனது பணிப்புரைக்கமைய சுசந்திகாவுக்கு விளையாட்டுத்துறை அமைச்சில் ஆலோசகர் பதவி வழங்கப்பட்ட போதிலும், அவர் அந்த கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றவில்லை. மேலும் தேசிய மெய்வல்லுனர் குழாமை பொறுப்பேற்று நடத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன், அதுதொடர்பிலான மாதாந்த அறிக்கையையும் அமைச்சுக்கும் சமர்பிக்கும்படியும் கேட்டுக்கொண்டோம். ஆனால் அவற்றை செய்யாமல் தற்போது பொருளாதார நெருக்கடிக்காக எம்மீது பொய்யான குற்றச்சாட்டை முன்வைக்கிறார் என தெரிவித்தார்.

எனவே எதிர்வரும் காலங்களில் சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளில் தாம் நாட்டுக்காக பெற்ற பதக்கங்களை விற்க அல்லது ஏலத்தில் விட தடை விதிக்கும் முகமாக சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.





# அரையிறுதி வாய்ப்பை தக்கவைக்குமா இலங்கை?
## இந்தியாவுடன் இன்று பலப்பரீட்சை

பீ.எப்.எம் றிஷாட்

ஐசிசி சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் லண்டன் ஓவல் மைதானத்தில் இன்று நடைபெறும் பி பிரிவு போட்டியில் நடப்புச் சம்பியனான இந்திய அணியை எதிர்த்து இலங்கை அணி களமிறங்கவுள்ளது. இலங்கை அணி தனது முதல் போட்டியில் 96 ஓட்டங்களால் தென்னாபிரிக்காவிடம் தோல்வியைத் தழுவ, இந்தியா அணி 124 ஓட்டங்களால் பாகிஸ்தானை வென்றது. எனவே இத்தொடரின் அரையிறுதிச் சுற்றுக்கு தகுதிபெற வேண்டுமானால் இந்தியாவை வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இலங்கை அணி உள்ளது.

எனினும், இலங்கையுடனான போட்டியை ஒரு பயிற்சிப் போட்டியாகக் கருதுவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இவ்விரு அணிகளுக்குமிடையில் இதுவரை 175 ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுள்ளதுடன், இதில் 103 போட்டிகளில் இந்தியாவும், 54 போட்டிகளில் இலங்கையும் வெற்றி பெற்றுள்ளது. அத்துடன், இதுவரை நடைபெற்ற 7 சம்பியன் கிண்ணப் போட்டிகளிலும் இந்திய மற்றும் இலங்கை அணிகள் இரு தடவைகள் மாத்திரமே நேருக்கு நேர் போட்டியிட்டுள்ளதுடன், 2002 நடைபெற்ற போட்டியில் போட்டி சமநிலையில் முடிவடைய, 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் இந்தியா வெற்றியைப் பதிவு செய்தது.

இலங்கை அணியைப் பொறுத்தவரை அதன் மிகப்பெரிய பலமாக பந்துவீச்சு உள்ளது. நட்சத்திர வீரரான லசித் மாலிங்கவின் அனுபவம் நிச்சயம் இன்றைய போட்டியில் இலங்கை சாதகமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், தென்னாபிரிக்காவுடனான போட்டியில் பந்துவீச அதிகளவு நேரம் எடுத்துக்கொண்ட குற்றச்சாட்டில் 2 போட்டிகள் தடை விதிக்கப்பட்டுள்ள அனுபவ வீரரான உபுல் தரங்க அணியில் இடம்பெறாமை இலங்கை அணிக்கு மிகப் பெரிய பின்னடைவை கொடுக்கும். அதேபோல தனது கெண்டைக்கால் உபாதை காரணமாக தென்னாபிரிக்க அணியுடனான இலங்கையின் சம்பியன் கிண்ண ஆரம்பப் போட்டியில் விளையாடாமல் இருந்த அணித் தலைவர் அஞ்செலோ மெத்யூஸ், தற்போது பூரண குணமடைந்திருப்பதால் இன்று இந்திய அணியுடன் நடைபெறும் போட்டியில் விளையாடவுள்ளதுடன், சிறப்பு துடுப்பாட்ட வீரராக 6ஆம் இலக்க வீரராக அவர் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் அவர் பந்துவீச்சில் ஈடுபடாதது அணிக்கு பெரும் நெருக்கடியைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் ஐந்து பந்துவீச்சாளர்களே இலங்கை அணியில் இடம்பெற்றனர். உபுல் தரங்கவின் இடத்திற்கு மெத்யூஸ் வரும் அதேவேளை, பந்துவீச்சாளர்களில் ஒரு மாற்றம் ஏற்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு தென்படுகின்றது.

மேலும், தென்னாபிரிக்க அணியுடனான கடந்த போட்டியில் 6 ஆம் இலக்க துடுப்பாட்ட வீரராக களமிறங்கியிருந்த குசல் ஜனித் பெரேரா இன்றைய போட்டியில் நிரோஷன் திக்வெல்லவுடன் இணைந்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கவுள்ளார். அதே நேரத்தில் முதல் போட்டியில் பாகிஸ்தானை வென்ற இந்திய அணி, இப்போட்டியில் வெல்வதன் மூலம் நேரடியாக அரையிறுதிச் சுற்றுக்கு நுழையும் எதிர்பார்ப்பில் களமிறங்கவுள்ளது. தொடக்க ஆட்டக்காரரான ரோஹித் சர்மா, இன்றைய போட்டியிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் கோஹ்லி, யுவராஜ் சிங், ஹார்திக் பாண்டயா மற்றும் டோனி ஆகியோர் அவருக்கு தோள் கொடுக்கும் வகையில் ஆடினால் இந்திய அணியை கட்டுப்படுத்துவது மிகவும் சிரமமாக இருக்கும். துடுப்பாட்டத்தைப் போலவே பந்துவீச்சிலும் இந்திய அணி சிறப்பாக விளங்குகிறது. எனவே இன்றைய போட்டியில் வெல்ல இலங்கை அணி கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும்.

## சம்பியன் கிரிக்கெட் போட்டித் தொடர்:
# சகலதுறையில் பிரகாசித்த இங்கிலாந்து அரையிறுதிக்குத் தகுதி



சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து அணி 87 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, அரையிறுதிக்குள் நுழைந்தது. சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரின் 6ஆவது போட்டி வேல்ஸின் கார்டிப் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் குருப் ஏ பிரிவில் உள்ள இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் விளையாடின. நாணயச்சுழற்சியை வென்ற நியூசிலாந்து, இங்கிலாந்து அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

அதன்படி இங்கிலாந்தின் தொடக்க வீரர்களாக ஜேசன் ராய், அலெக்ஸ் ஹேல்ஸ் ஆகியோர் களமிறங்கினர். இவர்கள் 37 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இந்த ஜோடியை பிரித்தார் மில்னே. அவரது பந்துவீச்சில் ராய் (13) போல்டாகி வெளியேறினார். அதன்பின்னர் ஹேல்ஸ், ரூட் ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது.

இந்நிலையில் ஹேல்ஸ் 56 ஓட்டங்கள் எடுத்த நிலையில், மில்னே பந்தில் போல்டானார். தலைவர் மோர்கன் 13 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்து ஏமாற்றம் அளித்தார். சிறப்பாக ஆடிய ஜோ ரூட், 64 ஓட்டங்களும், பென் ஸ்டோக்ஸ் 48 ஓட்டங்களும் சேர்த்து பெவிலியன் திரும்பினர். பட்லர் மட்டும் நிலைத்து நின்று அரைச்சதம் கடந்தார். இதனால், 49.3 ஓவர்களில் இங்கிலாந்து 310 ஓட்டங்களில் ஆல்அவுட் ஆனது. நியூசிலாந்து தரப்பில் மில்னே, ஆண்டர்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர். இதையடுத்து 311 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணியில், குப்தில், ரோஞ்சி தொடக்க ஆட்டக்காரர்களாக துடுப்பெடுத்தாடினர். முதல் ஓவரின் நான்காவது பந்திலேயே ரோஞ்சி டக் அவுட் ஆனார். இதையடுத்து தலைவர் வில்லியம்சன் களமிறங்கினார். இதனையடுத்து களமிறங்கிய டெய்லர், வில்லியம்சனுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சதமடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட வில்லியம்சன் 87 ஓட்டங்களில் ரன் அவுட் முறையில் வெளியேறினார்.

இதனையடுத்து களமிறங்கிய அனைத்து துடுப்பாட்ட வீரர்களும் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க அவ்வணி 45 ஓவர்களில் 223 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இங்கிலாந்து அணியில் அதிகபட்சமாக பிளங்கிட் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி அரையிறுதிக்குள் நுழைந்தது.

# இந்தியாவை வெல்ல சங்கா ஆலோசனை

சம்பியன் இந்திய அணியை வீழ்த்த வேண்டுமெனில் இளம் இலங்கை அணி திமிருடன் விளையாட வேண்டும் என்று இலங்கையின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார ஆலோசனை வழங்கியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக திக்வெல்லவின் அசாத்திய அதிரடி தொடக்கத்துடன் 10 ஓவர்களில் 87 ஓட்டங்கள் என்று தொடங்கி அதன் பிறகு கோட்டை விட்ட இலங்கை அணி அடுத்ததாக இந்திய அணியை எதிர்கொள்கிறது. முதல் போட்டியில் தலைவர் அஞ்சலோ மெத்யூஸை காயம் காரணமாக இழந்த இலங்கை அணி அன்று தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் ஓவர்களை மந்தமாக வீசி அதிக நேரம் எடுத்துக் கொண்டதற்காக பொறுப்பு தலைவர் உபுல் தரங்கவையும் 2 போட்டிகளுக்கு இழந்துள்ளது. இந்நிலையில் பாகிஸ்தானை நசுக்கிய இந்திய அணியை இலங்கை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் குறித்து குமார் சங்கக்கார ஐசிசி கிரிக்கெட் இணையதளத்தில் எழுதிய பத்தியில் கூறியதாவது:

இந்த இளம் இலங்கை அணி ஓவல் மைதானத்தில் இந்திய அணிக்கு எதிராக இளைஞர்களுக் கேயுரிய கர்வமான அலட்சியத்துடனும், திமிருடனும் ஆட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தி ஆக்ரோஷமான ஒரு கிரிக்கெட் ஆட்டத்தை ஆட வேண்டும். இதனை இவர்கள் செய்துவிட்டார்களென்றால் இந்திய அணிக்கு ஓர் அதிர்ச்சித் தோல்வியைத் தர முடியும். ஆனால் அன்று பாகிஸ்தானை மிகவும் தன்னம்பிக்கையுடன் வென்ற இந்திய அணிக்கு எதிராக இது கடினமே. அஞ்சலோ மெத்யூஸ் உடல் தகுதி பெற வேண்டும், தரங்க மீதான தடையும் கவலையளிப்பதாகும். ஓவர்களை வீச அதிக நேரம் எடுத்துக் கொண்டதற்காக தரங்காவுக்கு 2 போட்டிகள் தடை பெரிய விரயமாகும். அனுபவமிக்க லசித் மாலிங்க, சுழல் பந்துவீச்சாளர்களை அதிகம் வைத்துக் கொண்டு ஓவர்களை வீச 39 நிமிடங்கள் கூடுதலாக எடுத்துக் கொண்டதை ஏற்க முடியாது.



# வஹாப்புக்கு பதிலாக ரும்மான்



சம்பியன் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்றிருந்த பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர் வஹாப் ரியாஸ், கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுடனான போட்டியின் போது கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக போட்டியிலிருந்து வெளியேறினார். இந்நிலையில், அவருக்குப் பதிலாக இளம் வேகப்பந்துவீச்சாளர் ரும்மான் ரயீஸை பாகிஸ்தான் அணியில் இணைத்துக்கொள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் ரும்மானுக்கு சம்பியன் கிண்ணப் போட்டிகளில் விளையாடுவதற்கு ஐ.சி.சியின் தொழில்நுட்ப குழு அனுமதி வழங்கியுள்ளது. 25 வயதான இடதுகை வேகப்பந்துவீச்சாளரான ரும்மான், கடந்த வருடம் நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுடனான டி20 போட்டியில் அறிமுகமாகியிருந்தடன், கடந்த ஏப்ரல் மாதம் அதே மேற்கிந்திய தீவுகளுடனான ஒரேயொரு போட்டியில் மட்டும் விளையாடி ஒரு விக்கெட்டினை அவர் கைப்பற்றியிருந்தார். எனினும், இதுவரை பாகிஸ்தான் அணிக்காக எந்தவொரு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் அவர் விளையாடவில்லை. ஆனால், இவ்வருடம் நடைபெற்ற பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டித் தொடரின் அதிகளவு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய 3ஆவது வீரராக இடம்பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய பயிற்சியாளர் பதவி:
# அறுவர் விண்ணப்பம் நேர்முகத் தேர்வு லண்டனில்



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவிக்கு அனில் கும்ப்ளே, விரேந்திர ஷேவாக், லால்சந்த், ராஜ்புட், தோடா கணேஷ், அவுஸ்ரேலியாவின் டொம் மூடி, ரிச்சர்ட் பைபஸ் ஆகிய 6 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இந்திய அணியின் தற்போதைய தலைமைப் பயிற்சியாளரான அனில் கும்ப்ளேவின் பதவிக்காலம் எதிர்வரும் 18ஆம் திகதியோடு முடிவுக்கு வருகிறது. இதையடுத்து புதிய பயிற்சியாளரை நியமிக்கும் பணியில் பி.சி.சி.ஐ இறங்கியுள்ளது. இந்திய அணித் தலைவர் கோஹ்லி - கும்ப்ளே இடையே மோதல் நிலவுவதாகச் செய்திகள் தொடர்ந்து வெளிவந்த நிலையில், தற்போது பயிற்சியாளராக உள்ள கும்ப்ளேவுக்குப் பொறுப்பு நீடிப்பு வழங்கப்படவில்லை. இதன்படி, இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கான விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு அனில் கும்ப்ளே விண்ணப்பித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவிக்கு இந்திய அணியின் முன்னாள் தொடக்க வீரரான வீரேந்திர ஷேவாக்கும் விண்ணப்பம் செய்துள்ளார். இதுதவிர, முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் டொம் மூடி, முன்னாள் இங்கிலாந்து வீரர் ரிச்சர்ட் பிபஸ், முன்னாள் இந்திய வேகப்பந்துவீச்சாளர் தோடா கணேஷ், இந்திய ஏ அணியின் முன்னாள் பயிற்சியாளரான லால்சந்த் ராஜ்புட் ஆகியோரும் விண்ணப்பித்துள்ளனர். இவர்களுடன் அனில் கும்ப்ளேவும் போட்டியில் இருக்கிறார். இந்நிலையில், கடைசி நாளான மே 31-க்குப் பிறகு அவுஸ்திரேலிய முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் கிரேக் மெக்டர்மாட்டும் விண்ணப்பித்துள்ளார்.

விண்ணப்பித்த நபர்களில் தகுதியானவர்களிடம் சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி, விவிஎஸ் லக்ஷ்மண் ஆகியோர் அடங்கிய கிரிக்கெட் ஆலோசனைக் குழு (சிஏசி) நேர்காணல் நடத்தும். இதற்கான நேர்காணல் நேற்று ஆரம்பமானதுடன், இது எதிர்வரும் 9ஆம் திகதி வரை லண்டனில் நடைபெறவுள்ளது. தற்போதைய நிலையில் அனில் கும்ப்ளே மீது பிசிசிஐ அதிருப்தியில் இருப்பதால் அவருக்கு இன்னொரு வாய்ப்பு கிடைக்காது என்றே தெரிகிறது. அதனால் ஷேவாக், டொம் மூடி இடையே தான் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மே.தீவுகள் குழாமில் றொஸ்டன்

ஆப்கானிஸ்தானுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. 13 பேர் கொண்ட இக்குழாமில், அண்மைக் காலமாக டெஸ்ட் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்ற சகலதுறை வீரர் றொஸ்டன் செவியும் இடம்பெற்றுள்ளார். றொஸ்டன் சேஸ், ஒருநாள் சர்வதேச போட்டிக் குழாமில் இடம்பெறுவது, இம்முறையே முதற்தடவையாகும்.

கடந்தாண்டு, டெஸ்ட் போட்டிகளில், அறிமுகத்தை மேற்கொண்ட செவி, 10 டெஸ்ட்களில் மூன்று சதங்களைப் பெற்று 17 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி, நம்பத் தகுந்த மத்திய வரிசை வீராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டதுடன், கைகொடுக்கக் கூடிய சுழற்பந்துவீச்சாளராக உள்ளபோதும், மேற்கிந்தியத் தீவுகளின் உள்ளூர் 50 ஓவர் போட்டிகளில், பெரிதாக ஓட்டங்களைப் பெறவில்லை.

ஆப்கானிஸ்தான் அணியுடனான 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 08TH JUNE 2017